Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 18.00

දිනමුරසු වාරමලර් ஆக 18 - 24, 2005

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 627

# கண்காணிப்புக் குழுவை கண்காணிக்க வேண்டும்



## பஞ்சாங்கங்களில் எது சரி

இந்து மத மக்கள் மிக முக்கியமாக அன்றாட வாழ்வியல் நடைமுறையில் பல கருமங்களை மேற்கொள்ளப் பயன்படுத்துவது பஞ்சாங்கம்.

திதி, நட்சத்திரம், சுபநேரங்கள், சுபநாட்கள், விழாக்கள், விரதங்கள் என பலவற்றையும் உள்ளடக்கி வெளிவருகிறது இப்புனித நூல்.

எமது நாட்டில் முக்கியமாக திருக்கணிதம், வாக்கியம் என இரு பஞ்சாங்கங்கள் வழக்கிலுள்ளன. இரண்டுமே அரசாங்கத்தால் பதிவு செய்யப்பட்டுள்ளனவென்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆனாலும் ஒன்றுக்கொன்று மாறுபட்ட விரத நாட்களை வெளியிட்டுள்ளதால் இந்துமத மக்கள் பெரிதும் பாதிப்படைகிறார்கள். உதாரணத்துக்கு சித்திரகுப்த விரதம், 23.04.2005 சனிக்கிழமை திருக்கணித பஞ்சாங்கத்திலும், 24.04.2005 ஞாயிற்றுக்கிழமை என வாக்கிய பஞ்சாங்கத்திலும் போடப்பட்டுள்ளது. சித்திரையில் சித்திரை நட்சத்திரம் வரும் நாளையே விரத நாளாகக் கைக்கொள்ள வேண்டுமென்று 'சைவ விழாக்களும் விரதங்களும்' என்ற நூலில் வலியுறுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் திருக்கணித கணிப்பு ஒத்துப்போகிறது. இதில் எது சரி எனக் கேள்விக்குறி எழுவது தவிர்க்க முடியாதது. இப்படியான தடுமாற்றத்தை இந்து கலாசார திணைக்களமே தீர்த்து வைக்க வேண்டும். இப்படிப் பல பிரச்சினைகள் எழவுள்ளன.

-சிவஸ்ரீ அ.அரசரெத்தினம், சேனையூர்- 06.

## ஆன்மீகம்



## ஆண்டவனுக்கு அஞ்சி நடப்போம்

ஆண்டவருக்கு அஞ்சுவோர் உயிர் வாழ்வர். அவர்களது நம்பிக்கை தங்களைக் காப்பாற்றுகிறவர் மேல் இருக்கிறது. ஆண்டவருக்கு அஞ்சுபவர்கள் எதற்கும் நடுங்கவோ தயங்கவோ மாட்டார்கள். (சீராக் 34:13-14)

அருமையானவர்களே, நம் ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் பிரச்சினைகள், கஷ்டங்கள், துன்பங்கள் ஏற்படுவது சகஜம். நாம் எப்படி இவற்றிலிருந்து வெற்றிபெறுவது? நமது சகல பிரச்சினைகளையும் அவர் பாதம் சமர்ப்பித்து அவரில் நம்பிக்கை வைத்து, அவருக்கு அஞ்சி, கெஞ்சி மன்றாடும் போது நம் துன்பங்கள் இருந்த இடம் தெரியாது போய்விடும். சாத்தான் யோபுவை சகல வழிகளாலும் சோதித்தான். யோபு அனைத்துச் செல்வங்களையும் இழந்தார். யோபு கூறியதென்ன? "இயேசு கொடுத்தார், கொடுத்ததை எடுத்தார், அது அவர் சித்தம்" என்று மட்டும் கூறினாரே தவிர, ஆண்டவருக்கு அஞ்சி நடந்தார். இதன் விளைவு என்ன? இறைவன் முன்னர் கொடுத்ததைவிட இருமடங்கு செல்வ சுகங்களைக் கொடுத்து நெடுநாள் வாழச் செய்தார். நாமும் யோபுவைப் போன்று ஆண்டவருக்கு அஞ்சி நடந்து நிறைவான வாழ்வை வாழ வழி வகுத்துக் கொள்வோமாக. ஆண்டவருக்கு அஞ்சுவோர் பேறு பெற்றோர்.

-ஜோசப் அருள்சாமி.

## அபசகுனம்!

நபிகள் நாயகம் (ஸல்) நவின்றார்கள், "அபசகுனம் என்பது கிடையாது. ஆனால் '..பால்' என்னை மகிழ்ச்சியில் ஆழ்த்திவிடுகின்றது" என்று அப்பொழுது தோழர்கள் '..பால்' என்றால் என்ன? என வினவினர். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 'நற்செயல்' என்று பதிலளித்தார்கள்.

(நூல் : புகாரி, முஸ்லிம்)

பறவைகளைப் பறக்கவிட்டு அதனால் சகுனம் பார்ப்பது, கல்லெறிந்து குறிகேட்பது ஆகியவை இறைவனன்றி மற்றவற்றை வணங்குவதற்கு இணையான செயலாகும்.

(நூல் : அபூதாவூத்)

உங்களுடைய அபசகுனம் உங்களோடுதான் இருக்கின்றது. உண்மை யாதெனில் நீங்கள் வரம்பு மீறிய மக்களாவீர்.

(திருக்குர் ஆன் - 36 : 19)

-முஹம்மது ஹஸனி, புதிய வீதி, கல்முனை - 07.

## கவிதைப் போட்டி இல.624



### சிம்ம சொப்பனம்

வாலாட்டி நிற்கும்
வல்லரசு நாடுகளின்
உச்சந்தலை மேலிருந்து
உளியடிக்கும்
ஜாம்பவான்.

- கேக்கே. டீன்,
ஏறாவூர் - 03.

### பூதம்

உன்னை
உருவாக்கிய
அமெரிக்காவுக்கே
நீ ஒரு
பூதம்!

- எம்.ஏ.எம்.ஷரீக்,
தர்கா நகர்.

### பரிசுக்குரிய கவிதை

### நிஜம்

கையிலே ஆயுதம்
கண்ணிலே தீவிரவாதம்
அழிகிறது
மனிதம்.

- மொஹமட் ரிஸ்மி,
தோப்பூர்.

### வெறுப்பு

வியப்பது - உங்கள் உறுதியை.
ரசிப்பது - உங்கள் ஊக்கத்தை.
வெறுப்பது - உங்கள்
கொலைகளை.

- சீ. தங்கவடிவேல்,
மட்டக்களப்பு.

### வேட்கை

வேட்கை
தணியும் வரை
வெடித்து முடி!
புதிய பிரளயத்தில்
பூக்கள் ஏந்துவோம்.

- சிவனு மனோஹரன்,
ஹட்டன்.

### பட்டப் பெயர்....?

உன் போல -
'ஜாடை' கண்டு....
உன் போல -
'தொப்பி' கண்டு....
உன் போல -
'தாடி' கண்டு....
எத்தனை பேருக்கு
வைத்து விட்டார்கள்
'பட்டப் பெயர்' -
பின்லேடன் என்று....?

- ஏ. வாஹிட், ஏ. குத்தூஸ்,
பதுளை.

### புரியவில்லை!

ஒஸாமாவே
உன் ஒளிவு
ஓர் அதிர்வுக்காகவா?
இல்லை
உன்னால்
முடியாது என்பதற்காகவா?
புரியவில்லையே?

- ஏ.ஆர்,
அக்கரைப்பற்று - 11.

### நியாயமா...?

ஒசாமாவே
எய்தவன்
எங்கோ இருக்க
வெறும் அம்புகளை
வேட்டு வைத்து
வீழ்த்துவது
நியாயமாகுமோ...?

- சீனி முஹம்மது - மீரா முகைதீன்,
ஏறாவூர் - 03ஏ.

### தெரியாதா?

பணம்
உந்தன் பலம்.
பாமர இலக்குகள்
உன் பலவீனம்.

- சீ. எடிசன்,
கொழும்பு - 13.

### அதிரடி ஆட்டம்

ஐக்கிய நாட்டை
ஆட்டி வைக்கும்
அதிரடி ஆட்டக்காரன்.

- ஆர். றிஷாட்,
நிலாவெளி - 01.

### போட்டி

மடியிலொரு பெரிய துப்பாக்கி
அங்கே நீயொரு பயங்கரவாதி.....
இடுப்பிலே இரு சிறிய துப்பாக்கி
இங்கே ஒரு பயங்கரவாதி.....
உயிர்களைப் பலியெடுப்பது
உங்களுக்குப் பொழுது போக்கோ?

- க. தீபன்,
திருமலை.

## கவிதைப் போட்டி இல.627



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 24.08.2005

கவிதைப் போட்டி இல.627
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.




# வாசகர் சாலை

### காட்டியதற்கு நன்றி

இந்திய வம்சாவளி மக்களின் அடிப்படைத் தேவைகள், பிரச்சினைகள் குறித்து எவ்வித அக்கறையும் கொண்டிராத கட்சிகள், மேர்வின் சில்வா விவகாரத்தில் மட்டும் ஏன் பொங்கி எழுந்தனர் என்பது குறித்த முரசின் வரிகள் அவர்களுக்குக் கிடைத்த சாட்டையடிகள்.
கறுப்பாடுகளையும் எமக்கு காட்டியமைக்கு நன்றி.

லோகிததாஸ்,
கொட்டாஞ்சேனை.

### எனது அன்பு முரசிற்கு,

வன்னிக்குள் கருணா அணியினர் ஊடுருவி இருக்கக்கூடும் என்ற பிரபா அணியினரின் சந்தேகம் குறித்து மதியூகியாரின் அலசலை நாம் தினம் தினம் எம்பகுதியில் நேரடியாக அனுபவித்து வருகிறோம். தேடுதலும் விசாரணையும் எம் பகுதியில் சர்வ சாதாரணமாகி விட்டன.

தயாபரன், புளிங்குளம்.

### அன்புடன் முரசிற்கு....

இலங்கையில் யுத்தம் நடைபெறாமல் இருந்திருந்தால் அந்நியன் கிளைமாக்ஸில் விக்ரம் இலங்கையினை உதாரணம் காட்டியிருப்பார் என்ற சிந்தியாவின் பதில் எவ்வளவு சத்தியமான உண்மை என்பது மட்டுமன்றி சிந்திக்கவும் வைத்தது.

சசி, நெல்லியடி.

### தித்திக்கும் முரசே!

எனது அபிமான நட்சத்திரம் பேரழகன் சூர்யாவின் கம்பீரமான வர்ணப் படத்தை முகப்பில் போட்டு அசத்திவிட்டீர்கள். அவரின் முகவரியை எனக்கு மட்டும். அனுப்பி வையுங்கள்.

ஷப்னா, காத்தான்குடி.

# உங்கள் பக்கம்

## தொலைத்தொடர்பு நிலையங்களில் மோசடி: தட்டிக் கேட்பது யார்?

வவுனியா நகரில் இன்று புற்றீசல் போல் தொலைத்தொடர்பு நிலையங்கள் வியாபித்திருப்பது யாவரும் அறிந்த உண்மை. வட மாகாணத்தையும் நாட்டின் ஏனைய பகுதிகளையும் இணைக்கும் கேந்திர நகரம் என்ற வகையிலும் இன்று அத்தியாவசியமான ஓர் தொடர்பாடல் நடைபெறும் இடம் என்ற வகையிலும் வவுனியாவில் இத் தொலைத்தொடர்பு நிலையங்களின் தேவை அவசியமே.

நகரப் பகுதியில் காணப்படும் தொலைத் தொடர்பு நிலையங்களைப் பயன்படுத்துவோரில் அநேகர் ஏ-9 வீதியூடாக நெடுப்பயணம் செய்வோரும், வவுனியா மாவட்ட பாமர மக்களுமே ஆவர். தன்னியக்க முறையில் சுய சேவையாக பேசக்கூடிய இத்தொலைத்தொடர்பு நிலையங்களில் நிலவும் மோசடி பண அபகரிப்பும் குறித்து யார் நடவடிக்கை எடுப்பது? அல்லது யாரிடம் முறையிடுவது? என்பது குறித்து பலரும் கேள்வி எழுப்புகின்றனர்.

ஏனெனில், ஓர் இலக்கத்தினை அழைக்கும் போது அந்த இலக்கம் பயன்பாட்டில் இருந்தால், குறிப்பாக கைத்தொலைபேசிகளுக்கு அவை இணைப்புக்கள் நிறுத்தப்பட்டிருக்கும்போது ஒலிக்கும் பதிவு செய்யப்பட்ட குரல்களுக்கும் இந்த தொலைத் தொடர்பு நிலையங்களில் பணம் வசூலிக்கப்படுகின்றது.

அதாவது நாம் பேசாத அழைப்புகளுக்கும் தன்னியக்க பதில்களுக்கும் அங்கு இணைக்கப்பட்டிருக்கும் பற்றுச்சீட்டு அடிக்கும் இயந்திரம் ரசீதை அச்சாக்கி விடுகின்றது. விஷயம் தெரியாத பாமர மக்கள் அதற்குப் பணம் கொடுத்து ஏமாந்து செல்கின்றனர். விஷயம் தெரிந்தவர்கள் கேள்வி கேட்டால் 'இல்லை ரெலிகொம்மில் வரும்போது அதற்கும் பணம் அறவிடப்படுகின்றது' என உலக மகா விளக்கம் கொடுக்கின்றார்கள். வேறுசில தொலைத்தொடர்பு நிலையத்திலோ 'எமக்கு அது பற்றித் தெரியாது. மனேஜர் வரும்போது நாம் கணக்கு காட்ட வேண்டும். எனவே காசு தாருங்கள்' எனக் கேட்கின்றனர்.

வவுனியா நகரில் தொலைத்தொடர்பு நிலையங்களில் நிலவும் இந்த மோசடியினை சீர் செய்ய சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

-தங்கராஜா,
நம்பைக்குளம்.


மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# வன்னியில் 30 பேர் சுட்டுக் கொலை!

## தப்பிச் செல்ல முயன்றவர்களுக்கு ஒரே நாளில் தண்டனை

அரச கட்டுப்பாட்டிலில்லாத வன்னிப் பகுதியிலிருந்து பெருந்தொகைப் பணத்துடன் கொழும்புக்குத் தப்பிச் செல்ல முயன்ற புலிகளின் நிதிப் பிரிவைச் சேர்ந்த முப்பது பேர் கடந்த 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வன்னியில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். புலிகளின் நிதிப் பொறுப்பாளர் தமிழேந்தியின் தலைமையின் கீழான வருவாய்த்துறை, ஆயத்துறை ஆகிய இரு பிரிவுகளிலும் பணியாற்றியவர்களே ஒரே இடத்தில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர். இத் தகவலை வன்னித் தரப்பு வட்டாரங்களும் இராணுவ புலனாய்வுப் பிரிவினரும் ஊர்ஜிதம் செய்துள்ளனர்.

குறித்த முப்பது பேரும் தலைமைக்குத் தெரியாமல் தப்பியோடுவதற்கு இரகசியமாகத் திட்டம் தீட்டியிருந்தனரெனத் தெரிய வருகிறது. தமது பொறுப்பிலிருந்த பெருந்தொகைப் பணத்தை குடிமகனொருவனிடம் கொடுத்து அதனைக் கொழும்புக்குக் கொண்டு செல்லுமாறு இவர்கள் கூறியுள்ளனர். சம்பந்தப்பட்ட குடிமகனும் ஏதோவொரு வகையில் பணத்துடன் தென்பகுதிக்கு வந்து சேர்ந்துவிட்டார். சம்பந்தப்பட்ட நபர் கொழும்பு வந்து சேர்ந்ததையடுத்தே முப்பது பேர் தப்பிச் செல்லத் திட்டமிட்டிருக்கின்றனரென்ற தகவல் தலைமைக்குக் கிட்டியிருக்கிறது. தப்பிச் செல்வதற்கான இறுதி முயற்சிகளில் ஈடுபட்டிருந்தபோது புலிகளின் தலைமைப் பீடம் இவர்களைக் கைது செய்துள்ளது. உயர் மட்டத்தின் உத்தரவையடுத்து ஒரே இடத்துக்குக் கொண்டு வரப்பட்டு இவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர். முப்பது பேரும் தப்பிச் செல்லத் திட்டம் தீட்டியிருப்பது பற்றிய தகவலைப் புலிகளின் தலைமைப் பீடத்துக்கு அறிவித்தவர் கொழும்புக்குத் தப்பி வந்த குடிமகனா என்பது பற்றிய விபரம் சரிவரத் தெரியவில்லை. ஆனால் சம்பந்தப்பட்ட நபரைத் தேடிப் புலிகளின் புலனாய்வுப் பிரிவும், இராணுவப் புலனாய்வுப் பிரிவும் வலை விரித்துள்ளனவென்று பிந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தனி மனிதப் படுகொலைகள் மூலம் ஒருபோதும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது

### -அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்டமை ஒரு அப்பட்டமான மனித உரிமை மீறலாகும்! மனிதப் படுகொலைகளை யார் புரிந்தாலும், அதை நாகரீகமடைந்த எந்தவொரு மனித சமூகமும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை! சமாதானத்தை விரும்பும் எவரும் இந்தப் படுகொலையை நிச்சயமாக நிகழ்த்தியிருக்க முடியாது. இவ்வாறான எந்தப் படுகொலைகளையும், ஈ.பி.டி.பி. அன்றிலிருந்து இன்றுவரை, வன்மையாகக் கண்டித்தே வந்திருக்கிறது! புலிகளால் அமைச்சர் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்டதை ஈ.பி.டி.பி. வன்மையாகக் கண்டிக்கிறது! இவ்வாறு ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் விடுத்துள்ள கண்டனச் செய்தியில் தெரிவித்துள்ளார். இனப் பிரச்சினைத் தீர்வுக்காக ஆற்ற வேண்டிய பணிகள் நிறையவே உள்ளன. அதற்காக கனிந்துவந்த சந்தர்ப்பங்களைச் சரிவரப் பயன்படுத்த வேண்டிய கடமையும் எம் முன் இருக்கிறது. சந்தர்ப்பங்களை சரிவரப் பயன்படுத்தி இனப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காணும் முயற்சிக்கான பாதையை முழுமையாக இறுக மூடிவிட்டு, இது போன்ற படுகொலைகளை நடத்துவதன் மூலம் வஞ்சம் தீர்த்துக்கொள்ள முடியுமே தவிர, மக்களின் பிரச்சினைக்கு உரிய தீர்வை எட்டிவிட முடியாது.

தனி மனிதப் படுகொலைகள் மூலம் குறித்த இலக்கை அடைய முடியுமென்றால், புலிகள் என்றோ அந்த இலக்கை எட்டியிருக்க வேண்டும். எழுபதுகளின் நடுப்பகுதியில் புலிகளால் ஆரம்பித்து வைக்கப்பட்ட படுகொலைக் கலாசாரம், இன்றுவரை தொடர்ந்த வண்ண முள்ளது. ஆனால் இத்தகைய படுகொலை கள் மூலம் எந்தவொரு இலக்கையும் அல்லது முன்னேற்றத்தையும் புலிகள் இது வரை காணவில்லை என்பதே யதார்த்த மாகும். இதனால் தீர்வின்றி இழுபட்டுச் செல்லும் இனப் பிரச்சினை என்பது மேலும் சிக்கலுக்கு உள்ளாகி வருகிறது. கொலை களைப் புரியும் சக்திகள்மீது சர்வதேச சமூகம் பயங்கரவாதிகளென்று முத்திரை குத்தவே இக்கொலைகள் வழிவகுக்கும்! புலிகளின் பாசிசப் போக்கை எதிர்ப்பவர்கள் தமிழ் பேசும் மக்களின் எதிரிகளாகப் புலிகளால் சித்திரிக்கப்பட்டு வருவது இன்று வரை புலிகளின் வரலாறு. புலிகளின் பாசிசப் போக்கிற்கு எதிரான நிலைப்பாட்டினைக் கொண்டிருந்தபோதும் அமைச்சர் கதிர்காமர், தமிழ் பேசும் மக்களின் இனப் பிரச்சினை விடயத்தில் தமிழ் மக்களுக்கு ஒரு கௌரவமானதும் நியாயமானதுமான தீர்வு கிட்ட வேண்டும் என்பதில் அக்கறையாக இருந்த ஒருவராவார்.

ஜனாதிபதி கடும் எதிர்ப்புகளுக்கும், அரசியல் நெருக்கடிகளுக்கும் மத்தியில் பொதுக் கட்டமைப்பு குறித்து எடுத்திருந்த உறுதியான நிலைப்பாட்டினை, அமைச்சர் கதிர்காமர் அவர்கள் வெளிப்படையாக ஆதரித்து வந்தார். ஆகவே இது போன்ற படுகொலைகள் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு எதிராக தென்னிலங்கையில் இருக்கும் எச்சசொச்ச பேரினவாதத்திற்கு இன்னமும் உரமூட்டுவதாகவே அமையும். படுகொலைகளை நிறுத்துவதற்காக சர்வதேச சமூகமும், மனித உரிமை அமைப்புகளும் விரைந்து செயலாற்ற வேண்டும். இன்றேல் சிக்கலடைந்து இறுகிப் போயிருக்கும் இனப் பிரச்சினைக்கான தீர்வு நோக்கிய பாதை இன்னமும் இருட்டில் தள்ளப்படும் ஆபத்தான நிலையையே அடையும் எனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.



கடந்த 12ஆம் திகதி பம்பலப்பிட்டியில் சுட்டுக் கொல்லப்பட்ட ரேலங்கி செல்வராஜாவின் சுடப்பட்ட நிலையிலான காட்சி

# தமிழ் எம்.பி.க்கள் பார்த்திருக்க பொலிஸ் அதிகாரி தாக்கப்பட்டார்

இணுவிலில் சில தினங்களுக்கு முன்னர் புலிகளால் அடித்தும் வெட்டியும் கொல்லப்பட்ட யாழ். பொலிஸ் சுப்ரீண்டன் சார்ள்ஸ் விஜேவர்த்தனவை ஈஸ்வரன் என்ற புலி உறுப்பினரின் தலைமையில் வந்த புலிகள் முதலில் அவரை ஒதுக்குப்புறமான இடத்துக்கு அழைத்துச்சென்றனர். யாழ். அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி பொலிஸ் சுப்ரீண்டனைச் சந்திக்க வருவதாகக் கூறியே அழைத்துச் செல்லப்பட்டார். பின்னர் மோட்டார் சைக்கிளில் வந்த இரு புலி உறுப்பினர்கள் பொலிஸ் சுப்ரீண்டனைத் தாக்கியபோது, சம்பவ இடத்தில் நின்றிருந்த எம்.பி.க்களான மாவை சேனாதிராஜாவும், கஜேந்திரனும் அவர்களைத் தடுக்க முனைந்தனரென்று கூறப்படுகிறது. பின்னர் பிரகாஷ் என்ற புலி உறுப்பினர் தாக்க முனைந்தபோது மக்கள் எதிர்ப்புக் காட்டியிருக்கிறார்கள். மக்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் தாக்குதல் தொடர்வதைக் கண்ட எம்.பி.க்கள் இருவரும் அங்கிருந்து வெளியேறிச் சென்ற பின்னரே சார்ள்ஸ் விஜேவர்த்தன தாக்கியும் வெட்டியும் கொல்லப்பட்டிருக்கிறார்.

# அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் யாழ்.மக்கள் அனுதாபம்

அமைச்சர் கதிர்காமருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக துக்கதினம் அனுஷ்டிக்க வேண்டாமென்று புலிகள் எச்சரிக்கை விடுத்திருந்தபோதிலும் யாழ்.மக்கள் இப்படுகொலையை வன்மையாகக் கண்டித்துள்ளனர். இப்படுகொலை யாழ்.மக்களை வேதனைக்குள்ளாக்கியுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக மாணவரொருவரை மேற்கோள்காட்டி ராய்ட்டர் செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக கொழும்பிலுள்ள ராய்ட்டர் நிறுவனச் செய்தியாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, பலருக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதால், சம்பந்தப்பட்ட மாணவரின் பெயரைத் தாம் வெளியிட விரும்பவில்லையென்று அவர் குறிப்பிட்டார். துக்க தினத்தன்று யாழ்.செயலக வளாகத்தில் தேசியக் கொடியை அரைக் கம்பத்தில் ஏற்ற செயலக ஊழியர்கள் முனைந்தபோது 3 மோட்டார் சைக்கிள்களில் வந்த 6 புலி உறுப்பினர்கள் கொலை மிரட்டல் விடுத்துள்ளனர்.

யாழ்.நகரப் புலிப் பொறுப்பாளர்களில் ஒருவரான பாண்டிதரன் தலைமையில் வந்தவர்களே இவ்வாறு மிரட்டியிருக்கின்றனர். எனினும் யாழ்.குடா நாட்டில் இயங்கும் பல்வேறு வெளிநாட்டுத் தன்னார்வத் தொண்டர் நிறுவனங்கள் தமது கொடிகளை அரைக் கம்பத்தில் பறக்கவிட்டிருந்தன. முகமாலையிலுள்ள இராணுவச் சூனியப் பிரதேசத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இலங்கையின் தேசியக் கொடியை அரைக் கம்பத்தில் பறக்கவிட்டிருந்தது. துக்க தினத்தை முன்னிட்டு மதுபானச் சாலைகளை மூடுமாறு அரசாங்கம் அறிவித்திருந்த போதும், புலிகளின் வருவாய்த்துறையினர் யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளிலுமுள்ள மதுபான நிலையங்களை பலவந்தமாகத் திறக்கச் செய்துள்ளனர். திருநெல்வேலி, அச்சுவேலி, வடமராட்சியின் சிலபகுதிகளில் மதுபான நிலையங்கள் பலவந்தமாகத் திறக்கப்பட்டன. புலிகளின் முகவரமைப்பான சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையைச் சேர்ந்தவர்கள் பட்டாசுகளைக் கொளுத்தி ஆரவாரித்த போது மது போதையில் தள்ளாடியதையும் காணக்கூடியதாக இருந்தது.

# கதிர்காமர் கொலை : முந்தி வந்த முன்னறிவிப்பு

"இலங்கை அரசாங்கத்தின் முக்கிய பிரமுகரான வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இனிமேலும் உயிர் வாழக் கூடாது" என்று கூறும் வாசகங்கள் கதிர்காமர் கொலை செய்யப்பட்ட தினத்தன்று வெளிவந்த புலிகளின் உத்தியோகபூர்வ பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. கடந்த 12ஆம் திகதி வெளிவந்த 'ஈழநாதம்' பத்திரிகையில் இரண்டாம் பக்கத்தில் வெளியிடப்பட்டிருந்த கட்டுரையில் இந்த வாசகங்கள் இடம்பெற்றிருந்தன. "தென்னிலங்கை ஈழவாதிகளுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தலைவர்" என்ற தலைப்பில் வெளியான கட்டுரையிலேயே மேற்கண்ட வசனம் இடம்பெற்றிருந்தது.

# எரியும் நெருப்புக்குள் முஸ்லிம்களின் சடலங்கள் வீசப்பட்டன

### -சாடுகிறார் மயோன் முஸ்தபா எம்.பி.

"மூதூர், ஓட்டமாவடி போன்ற இடங்களில் முஸ்லிம் இளைஞர்களைப் புலிகள் படுகொலை செய்து பெற்றோர்களின் முன்னாலேயே சடலங்களை நெருப்பில் தூக்கி வீசியிருக்கிறார்கள். கிழக்கில் முஸ்லிம் மக்களிடமிருந்து அபகரிக்கப்பட்ட காணிகள், விவசாய நிலங்கள், மாட்டுப் பட்டிகள், வாகனங்கள் ஆகியவை இன்னமும் அவர்களிடம் திருப்பிக் கொடுக்கப் படவில்லை. அபகரிக்கப்பட்டவற்றில் அறுபது சதவீதத்துக்கு மேலானவை இன்றுவரை திருப்பிக் கொடுக்கப்படவே யில்லை" என்று ஐ.தே.க. எம்.பி.யான மயோன் முஸ்தபா கடந்த 14ஆம் திகதி இடம்பெற்ற தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றின்போது குறிப்பிட்டார்.

மயோன் முஸ்தபா எம்.பி.யோடு இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.யான ரவிராஜ் முஸ்லிம்களுக்காகப் புலிகள் குரல் கொடுத்து வருகிறார்களென்று குறிப்பிட்ட போதே, மேற்கண்டவாறு மயோன் முஸ்தபா குறிப்பிட்டார். சுனாமிக்குப் பின்னரான பொதுக் கட்டமைப்பின் உச்சக் கமிட்டியில் சிங்களவர்களையும் தமிழர் களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இரு பிரதிநிதிகளே இடம்பெற வேண்டுமென்று அரசாங்கம் யோசனை கூறியதாகவும் புலிகளே முஸ்லிம் பிரதிநிதியொருவர் இடம்பெற வேண்டுமென வலியுறுத்தியதாகவும் தமிழ்ச்செல்வன் தம்மிடம் கூறினாரென்று ரவிராஜ் குறிப்பிட்டார். அத்துடன் பொதுக் கட்டமைப்பின் பிராந்தியக் கமிட்டிகளின் தலைமையகம் திருகோணமலையில் அமைய வேண்டு மென்று புலிகள் வற்புறுத்தியதாகவும், அரசாங்கமே கிளிநொச்சியில் தலைமையகத்தை நிறுவும் யோசனைகளைத் தெரிவித்ததென்றும் ரவிராஜ் எம்.பி. குறிப்பிட்டபோதே, ஜனாப் முஸ்தபா மேற்கண்டவாறு கூறினார். அப்படியானால் ஏன் புலிகள் இதுகுறித்து அறிவிக்கவில்லை யென்று முஸ்தபா எம்.பி. கேட்டபோது, தடுமாறிய ரவிராஜ் எம்.பி. பொதுக் கட்ட மைப்பு பேச்சு விபரங்களை இரகசியமாக வைத்திருக்குமாறு நோர்வே கேட்டுக்கொண்டதே இதற்குக் காரணமென்று கூறிச் சமாளித்தார்.

# ஜனநாயகத்தின் குரல் மௌனிக்கப்பட்டு தேசாபிமானத்தின் சிறகு தறிக்கப்பட்டுள்ளது

### -அமைச்சர் சேகு இஸ்ஸதீன்

'வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மீது புரியப்பட்டுள்ள படுகொலையின் விளைவாக இந்த நாட்டு ஜனநாயகத்தின் இன்னொரு குரல் மௌனிக்கப்பட்டு, தேசாபிமானத்தின் சிறகொன்றும் தறிக்கப்பட்டுள்ளது' என்று சிறிய மற்றும் கிராமியக் கைத்தொழில் அமைச்சரும் தகவல் மற்றும் ஊடகத்துறைப் பிரதியமைச்சருமான எம்.எச்.சேகு இஸ்ஸதீன் கூறியுள்ளார். இந்த நாட்டின் இறைமைக்காகவும், ஒருமைப்பாட்டுக்காகவும், இந்த நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகளுக்காகவும் கூட்டு வாழ்வுக்காகவும் இன, மொழி, மத பேதங்களைக் கடந்து உலகெங்கும் பணிபுரிந்த ஒரு அருந்தவப் புதல்வனை இலங்கை மாதா இழந்து விட்டார். இனமறியாத படுகொலையாளிகளின் பங்களிப்புகளால் மெருகூட்டப்பட்டுள்ள ஓர் இனப் போராட்டத்திற்காக இழந்துள்ள செல்வங்களில் அமரர் லக்ஷ்மன் கதிர்காமரின் இடம் என்றுமே நிரப்பப்பட முடியாததாகும். மாற்றுக் கருத்துகளுக்கு மதிப்பளிக்க முடியாத ஒரு பயங்கரவாதியின் குண்டுக்கு இந்த நாட்டின் எத்தனை மேதாவிகளும், ஞானிகளும், தலைவர்களும் தமது உயிரைத் தாரை வார்த்திருக்கி றார்கள் என்பதை நினைக்கும் போது மிகுந்த வேதனையாக இருக்கிறது. ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு அதன்மேல் கட்டியெழுப்ப நினைக்கின்ற நாடு சுதந்திர தேசமாக இருக்கப் போவதில்லை. சவக்காடாகத்தான் இருக்கும். அமரர் லக்ஷ்மன் கதிர்காமரின் அகால மரணம் இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்கான தீர்வின் திசையை மாற்றப் போவது நிச்சயம். அமரர் கதிர்காமரின் படுகொலை இந்த நாட்டு மக்களில் பெரும்பாலானவர்களிடம் விடுதலைப் புலிகளின் போராட்டத்திற்குக் கிடைத்த அனுதாபத்தையும், ஆதரவையும் அருகச் செய்யும் என்பதும் உறுதி என்றும் அந்த அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரிட்டனில் தடை!

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தை பிரிட்டனின் தர்ம உதவி ஆணைக்குழு, தனது நன்கொடையாளர் பட்டியலிலிருந்து நீக்கத் தீர்மானித்துள்ளது. ஐரிஷ் குடியரசு இராணுவத்தினருக்கு 'நொராய்ட்' என்ற முகவர் அமைப்பைப் போன்று புலிகளுக்குச் சார்பான தன்னார்வத் தொண்டர் அமைப்பாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கருதப்படுகிறது. 2000ஆம் ஆண்டு ஒக்டோபர் முதல் 2005ஆம் ஆண்டு ஆகஸ்ட் வரை இக் கழகத்தின் நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்த பின்னரே இம் முடிவெடுக்கப் பட்டுள்ளது. தர்ம ஸ்தாபனமாக இக் கழகத்தை அங்கீகரிக்க கனடா மறுத்துள்ளது. அவுஸ்திரேலிய அரசாங்கம் இதற்கு நிதி வழங்கவோ, இணைந்து செயற்படவோ மறுத்துள்ளது.

# பாதுகாப்பு தீவிரம்

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலையை அடுத்து யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. கேந்திர நிலையங்களில் படையினர் நிறுத்தப்பட்டிருந்தனர். குற்றப் புலனாய்வுப் பொலிஸார், போக்குவரத்துப் பொலிஸாருடன் இணைந்து சந்தேகத்திற்குரிய வாகனங்களையும், நபர்களையும் தீவிர சோதனைக்குட்படுத்துகின்றனர்.

# இலங்கை கோரிக்கை

புலம்பெயர் நாடுகளில் புலிகளுக்கு உதவியாகச் செயற்படும் வெகுஜன அமைப்புகளின் நடவடிக்கைகளைக் கண்காணிக்குமாறு சம்பந்தப்பட்ட நாடுகளின் அரசாங்கங்களை இலங்கை கேட்டுள்ளது. புலி இயக்கத்தவர்களின் வெளிநாட்டுப் பயணங்களைக் கட்டுப்படுத்துமாறும் புலி இயக்கத்துக்காக நிதி சேகரிப்பதைத் தடை செய்யுமாறும் இலங்கை அரசு கோரியுள்ளது.

# நோர்வேக்கு அழுத்தம்

வன்செயலைக் கைவிடுமாறு புலிகளை வற்புறுத்த வேண்டுமென்று இலங்கைக்கு வருகை தந்திருந்த நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சனிடம் ஜனாதிபதி, பிரதமர் உட்படப் பல தலைவர்கள் வற்புறுத்தியுள்ளனர். ஏற்கனவே ஈடாடிக் கொண்டிருக்கும் சமாதான முன்னெடுப்புகளுக்கு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலை பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடுமென்றும் அவரிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# முரசம்

## அர்த்தமற்ற கண்டனங்களால் ஆகப்போவது எதுவுமில்லை

**அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.**

இலங்கை அரசியலில் பாரிய வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ள வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மீதான படுகொலையானது முறிந்து நிற்கும் சமாதான முயற்சிகளில் நிச்சயம் தாக்கத்தை ஏற்படுத்தும்.

லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையைப் பயங்கரவாதச் செயல் என அனைவரும் குறிப்பிட்டுக் கண்டித்துள்ளதானது, இலங்கையில் பயங்கரவாதிகள் இருக்கிறார்கள்; அவர்களின் செயற்பாடுகள் சுதந்திரமாக நடைபெற்று வருகின்றன என்பதை நிரூபித்துள்ளது.

இது தவிர, அரசியல் களத்திலும் குறிப்பிடக்கூடிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஐ.தே.கட்சிக்கும், புலிகள்சார்பு சக்திகளுக்கும் இக்கட்டான நிலையைத் தோற்றுவித்துள்ளதால், பேரினவாத சக்திகளுக்கும், புலி எதிர்ப்பாளர்களுக்கும் தமது வாதப்பிரதிவாதங்களை புதிய உற்சாகத்தோடு முன்னெடுத்துச் செல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைமையானது விரைவான தேர்தல் ஒன்றுக்குச் செல்ல வேண்டிய சூழலை ஏற்படுத்தியுள்ளதன் வெளிப்பாடே ஜனாதிபதி தேர்தல் குறித்து தற்போது வெளியாகிக் கொண்டிருக்கும் செய்திகளாகக் கருத இடமுண்டு. ஏனெனில், ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக ஆக்குவதன் மூலம், மேலும் புலிகளுக்குச் சலுகைகளையும், தென் பகுதிகளுக்குள் ஊடுருவலைச் செய்வதற்கான வாய்ப்பையும் வழங்க மக்கள் அனுமதிக்கப் போவதில்லை.

இதே வேளை மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவானால் சம காலத்தில் புலிகளின் செயற்பாடுகளால் விளைந்த துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் மீண்டும் இடம்பெறாமலும், புலிகளுக்குச் சலுகைகள் கிடைப்பதைத் தடை செய்யவுமான ஏற்பாடுகளைச் செய்வார் என்ற சிந்தனை புத்தி ஜீவிகளிடம் மேலெழுந்துள்ளது எனலாம்.

இவற்றைத் தாண்டி அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ள மற்றுமொரு விடயம், பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க இலங்கை அரசோடு உலகநாடுகளும் கைகோர்த்துக் கொள்ள வேண்டுமென பிரதமரும், ஜனாதிபதியும் லக்ஷ்மன் கதிர்காமரின் இறுதிக்கிரியையின் போது கோரிக்கை விடுத்தனர்.

மாறிவரும் போக்குகளைக் கூர்ந்து அவதானிக்கின்ற போது, நாட்டு மக்கள் எவருக்கும் நன்மைகளைத் தராத போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் உடனடியாக ஒரு முடிவுக்கு வராது என்று நம்பலாம். ஆனால் படுகொலைகள், கைக்குண்டு வீச்சுக்கள், ஆட் கடத்தல்கள், மிரட்டல்கள் என்பன தொடரத்தான் போகின்றன. அதே போல கண்டனங்களும், அறிக்கைகளும் தொடர்கதையாகத்தான் இருக்கப் போகின்றன. இந்தப் போர் நிறுத்த ஒப்பந்த காலத்தில் வடக்கு, கிழக்கில் எங்கோ ஒரு முனையில் படுகொலை செய்யப்பட்ட போது, இத்தனை கண்டனங்களும், கொதிப்புகளும் எழுந்திருந்தால், உலக நாடுகள் கண்டித்து போர் நிறுத்தம் கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டுமென எச்சரித்திருந்தால், ஒருவேளை கதிர்காமர் வரை படுகொலை நீடிக்காமல் இருந்திருக்கலாம். அவ்வாறில்லாமல் பதவிகளோடும், பிரமுகர்களாகவும் இருந்து படுகொலை செய்யப்படுகின்ற போது மட்டும் வானத்துக்கும், பூமிக்குமிடையில் குதித்துக் கொள்வதால் எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை. ஆகவே கொலைகளுக்கு எதிரான எந்தவொரு செயற்பாடும் அடிமட்டக் கொலைகளிலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும். இல்லையேல், கொலையாளி சுதந்திரமாகவும் கோரமான சிந்தனையோடும் தன் கொலைப் பட்டியலை நீட்டிக்கொள்ளவே செய்வான். அத்தகைய சாபக்கேடான இறுதி நிலை இலங்கை தேசத்துக்கும் மக்களுக்கும் நன்மையாக அமையாது.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# கண்காணிப்புக் குழுவைக் கண்காணிக்க வேண்டும்

நரன்

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கண்ணை மூடிவிட்டார். வன்னித் தரப்பைத் தவிர, முழுத் தேசமுமே எழுந்து நின்று இன்னமும் மௌனாஞ்சலி செலுத்திக் கொண்டிருக்கிறது. ஒன்றையும் பாராதே, ஒன்றையும் பேசாதே, ஒன்றையும் கேளாதேயென கண்களையும் காதுகளையும் வாயையும் பொத்திக் கொண்டிருக்கும் மூன்று குரங்குகளைப் போல யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் நடந்து கொள்வதுதான் வேதனை தருகிறது. நள்ளிரவு அகால வேளையில் ஸ்னைப்பர் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் கதிர்காமர் அனுமதிக்கப்பட்டிருந்த போது அவரின் உயிர் பிரியக்கூடாதென்று பல்லாயிரக்கணக்கான மனிதநேயம் மிக்கவர்கள் வேண்டி நின்றனர். இதே போன்று அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருக்கும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் தப்புமா? தவறுமா? என்று தெரியாமல் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு முழந்தாளிட்டு மௌனாஞ்சலி செலுத்திக் கொண்டிருக்கிறது.

யுத்தத்துக்குள் சிக்கிச் சீரழிந்து சதா இரத்தத்தையும் கண்ணீரையுமே சிந்திக் கொண்டிருந்த எமது நாட்டுக்கு, யுத்த நிறுத்தம் மிக மிக அவசியமென்பதை யாரும் நிராகரிக்க முடியாது. போர் சூழ்ந்த இந்த மண்ணில் அவலங்களை நீக்கி, அழிவுகளைப் புனரமைத்து பாதிக்கப்பட்டவர்களுக்குப் புனர்வாழ்வளித்து, தேசத்தைக் கட்டியெழுப்பி மக்களுக்கு நிம்மதியான வாழ்வளிப்பதற்காகவே யுத்த நிறுத்தம் ஏற்படுத்தப்பட்டது. மூன்றரை வருட கால யுத்த நிறுத்தம் பல்லாயிரக் கணக்கான அப்பாவி உயிர்களைப் பாதுகாத்திருக்கிறதென்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான யுத்த நிறுத்தத்தின் அடிப்படை நோக்கம் தாக்குதல்களை நிறுத்துவதுதான். இதனூடாக பரஸ்பர நம்பிக்கையை இரு தரப்பும் கட்டியெழுப்பி, நிரந்தரத் தீர்வை நோக்கி முன்னேற வேண்டியதுதான் இறுதி நோக்கமாகும். ஆனால் தற்போது கட்டியெழுப்பப்பட்டுக் கொண்டிருப்பது பரஸ்பர நம்பிக்கையல்ல, பரஸ்பர நம்பிக்கையீனம்தான்.

யுத்தமா? சமாதானமா? என்ற இலக்கில் ஏதாவதொன்றில் இரு தரப்புமே ஒரே நோக்கோடு இருந்தால் மட்டுமே இலக்கை அடைய முடியும். மாறாக யுத்தத் தயாரிப்புகளிலும் யுத்த முஸ்தீபுகளிலும் இரு தரப்புமோ அல்லது இரு தரப்பில் ஒன்றோ ஈடுபடுமானால் சமாதானம் சந்தேகத்துக்குரியதாகி விடும். இலங்கையின் இன்றைய நிலை அப்படித்தானிருக்கிறது.

மூன்றரை வருட யுத்த நிறுத்த காலத்தில் மாற்றுக் கருத்துக் கொண்ட 300க்கு மேற்பட்டவர்களைப் புலிகள் கொன்றொழித்து விட்டனர். இறுதியாக வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரையும் சுட்டுக் கொன்றதன் மூலம் அவர்கள் பாரிய இலக்கொன்றினைச் சாய்த்து விட்டாலும் அவர்களின் நோக்கு இப்போது கேள்விக்குறியாக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் புலிகளின் கொலைப் பட்டியலில் முக்கிய இடம் பெற்ற மூவரில் ஒருவர். ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, லக்ஷ்மன் கதிர்காமர் ஆகிய மூவருமே இந்த முக்கியஸ்தர்களாவர். ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா தேசிய ரீதியிலும் சர்வதேச மட்டத்திலும் நெகிழ்ச்சித் தன்மையோடும் விட்டுக் கொடுப்போடும் சமாதான முன்னெடுப்புகளை முன்னெடுத்துச் செல்பவரென்பதால் யுத்த சக்திகளின் பரம வைரியாகக் கணிக்கப்படுகிறார். இலங்கையின் வரலாற்றிலேயே முதல் தடவையாக இன சௌஜன்யத்தை முன்னிறுத்தி பொதுத் தேர்தலொன்றில் போட்டியிட்டு அமோக வெற்றியீட்டிய பொதுஜன ஐக்கிய முன்னணிக்குத் தலைமை கொடுத்தவரும் இவரே. இந்த நாட்டில் யுத்த விதைகளைத் தூவிய ஐ.தே.க.வின் 17 வருட கால ஆட்சியை அஸ்தமிக்க வைப்பதற்கான அஸ்திரமாக இன ஐக்கியத்தைப் பயன்படுத்தி முதன் முதலாக தேர்தலில் வெற்றிக்கொடி நாட்டிய தலைவியும் அவர்தான். யுத்தப் பிரகிருதிகளுக்குச் சமாதானம் அச்சுறுத்தலாக அமைந்ததால் 1999ஆம் ஆண்டு அவரைக் கொலை செய்ய எடுக்கப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலிலிருந்து அவர் மயிரிழையில் உயிர் தப்பினார். இப்போதும் கூட அவர் புலிகளின் கொலைப் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறாரென்பதே உண்மை. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் மூலம் புலிகளுக்குப் பல சலுகைகளை வழங்கிய ஐ.தே.க. ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்காவைப் புலிகள் இப்போதும் பெரிதும் விரும்புகிறார்களென்பதே இரகசியமான உண்மையாகும்.

அடுத்தவர் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா. 1987ஆம் ஆண்டுவரை தமிழ் தேசிய இனத்தின் விடிவுக்காக ஆயுதப் போராட்டமே ஒரே வடிவமென நம்பிக் களத்தில் போராடி வந்த இவர், இலங்கை - இந்திய ஒப்பந்தத்தையடுத்து தமிழ் மக்களின் பிரச்சினைத் தீர்விற்கான வடிவமும் உத்திகளும் மாற்றப்பட்ட யதார்த்த நிலையைக் கவனத்திலெடுத்து தமிழர் தாயகத்தில் உள்ளக சுயாட்சியை வலியுறுத்தி வருகிறார். சகல தமிழ் இயக்கங்களையும் சகோதரப் படுகொலைகள் மூலம் அழித்தொழித்தவர்களால் அழித்தொழிக்க முடியாமல் இன்னமும் தப்பிப் பிழைத்திருக்கும் ஒரேயொரு இயக்கம் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிதான். ஜனநாயக நீரோட்டத்துக்குத் திரும்பி விட்டாலும் வடக்கிலும் கிழக்கிலும் ஆயுத அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்து தேசிய இனப் பிரச்சினைத் தீர்வுக்கும் தமிழ் மக்களின் விடிவுக்கும் வடிகால் தேடும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் ஒரேயொரு அமைப்பும் இதுதான். தேசிய மட்டத்திலான இனப் பிரச்சினைத் தீர்வுக்காகப் பிராந்திய மட்டத்திலும் துணிந்து நின்று போராடும் தமிழ் மக்கள் சார்ந்த அமைப்பும் இதுதான். எனவே சமாதான வழிமுறைகளை விரும்பாத, ஆயுத சக்திகளின் சிம்ம சொப்பனமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விளங்குகிறார்.


கடந்த வருடம் ஜூலை மாதம் ஏழாம் திகதி அவரைக் கொல்வதற்கு எடுக்கப்பட்ட தற்கொலைத் தாக்குதல் முயற்சி தோல்வியில் முடிந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. யுத்த நிறுத்த ஒப்பந்த காலத்தில் ஓர் அமைச்சரை - மாற்றுக் கருத்துக்களோடு தமிழ் மக்களின் விடிவுக்காகத் தொடர்ந்தும் போராடி வரும் ஒருவரைக் கொல்ல புலிகள் எடுத்த முயற்சி கண்டிக்கப்படக்கூடியது. சுமார் பத்துக்கு மேற்பட்ட தாக்குதல் முயற்சிகளிலிருந்து இவர் உயிர் தப்பியதும் இங்கு குறிப்பிடத்தக்கது. எனவே விடுதலை வீரர்களெனத் தம்மைக் காட்டிக் கொள்வோர்களால் சமாதானத்தின் விரோதிகளாக - தமிழ் தேசியத்தின் துரோகிகளாக வர்ணிக்கப்படுபவர்கள் ஆயுத கலாசாரம் இந்த நாட்டிலிருந்து துடைத்தெறியப்படும் வரை ஆபத்தை எதிர்நோக்கியவர்களாகவே இருப்பார்களென்பது திண்ணம்.

சமாதானத் தீர்வை விரும்பும் தேசத்தின் தலைவியும், சமாதான முன்முயற்சிகளின் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென்பதற்காகப் புலிகளையும் விட்டுக் கொடுப்புடன் அரவணைத்துச் செல்ல முயற்சிக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் புலிகளின் கொலை முயற்சிகளிலிருந்து தப்பிப் பிழைத்தமை புலிகளுக்கு வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சியிருக்கும் என்பதில் தவறில்லை. இதே வேளை சர்வதேச புகழ்பெற்ற சிரேஷ்ட இராஜதந்திரியும், இலங்கையின் தேசிய ஐக்கியத்தையும் இன சௌஜன்யத்தையும் விரும்பிய லக்ஷ்மன் கதிர்காமரின் மரணம் பெரும் வேதனைக்குரியது. அவர் தமிழ் மக்களின் எதிரியோ துரோகியோ அல்லர். புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராகத் துணிந்து, எதிர்த்து நின்று குரல் கொடுத்தவர். புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளை உலக நாடுகளுக்கு உணர்த்தி, பல நாடுகளில் புலிகளைப் பயங்கரவாத இயக்கமெனத் தடைசெய்வதற்குப் பெரும் பங்காற்றியவர். பயங்கரவாதிகளை விடுதலை வீரர்களாகக் கருத முடியாதென்ற உண்மையைத் தமிழ் மக்கள் ஜீரணித்துத்தானாக வேண்டும். ஓர் இயக்கத்தின் செயலை வைத்துக் கொண்டே அதனைப் பயங்கரவாத இயக்கமா இல்லையாவென்று தீர்மானிக்க முடியும்.

புலிகளைப் பல நாடுகள் பயங்கரவாதிகளென்று தடை செய்வதற்கு மூலகர்த்தாவாகத் திகழ்ந்தவர் லக்ஷ்மன் கதிர்காமர். எனவே புலிகளின் கொலைப் பட்டியலில் அவரது பெயர் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. எதிரி, உங்களைத் தாக்கவில்லையென்றால் நீங்கள் பிழையான வழியில் சென்று கொண்டிருக்கிறீர்கள் என்பதே அர்த்தம். எனவே கதிர்காமரைக் கொன்றவர்கள் புலிகள் தானென்பது இந்த நாட்டிலுள்ள சிறு பிள்ளைகளுக்கும் தெரியும். ஆனால் தமிழ்ச்செல்வனோ வழமையான வாய்ப்பாட்டுப் பாணியில் புலிகள் இந்தக் கொலையைச் செய்யவில்லையென மறுப்பதோடு உரிய முறையில் விசாரணை நடத்துமாறு அரசாங்கத்துக்கு ஆலோசனையும் தெரிவித்திருக்கிறார். மாத்தையா, அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், லக்ஷ்மன் கதிர்காமர் உட்பட எந்தக் கொலைகளுக்குத்தான் புலிகள் உரிமை கோரியிருக்கிறார்கள் என்பது ஒருபுறமிருக்கட்டும்.

லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலை புலிகளுக்குக் கிடைத்த பெரு வெற்றி என்பது உண்மைதான். ஆனால், இத்துயர் நிகழ்விலிருந்து இலங்கை அரசாங்கமும் சர்வதேச நாடுகளும், குறிப்பாக இந்தியாவும் புதிய படிப்பினையொன்றினை கற்றுக்கொள்ள வேண்டும். யுத்த நிறுத்தம், சமாதான முன்னெடுப்பு ஆகியவை தொடர்பாக புதிய அணுகுமுறையொன்றினை மேற்கொள்ள வேண்டும். புலிகள் சமாதான முயற்சிக்கு வரமாட்டார்கள் ஏன்ற ஆதங்கத்தின் காரணத்தினால் அவர்களின் அடாவடித்தனங்களுக்கு சாமரம் வீசிக்கொண்டிருக்க முடியாது. கழுத்தைப் பிடித்துத் திருக முடியாவிட்டால், காதைப் பிடித்து முறுக்கித் திருகியேனும் அவர்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும். லக்ஷ்மன் கதிர்காமர் போன்றோரைக் கொன்றொழிப்பதன் மூலம் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை புலிகளால் மீற முடியுமென்றால், கொலையாளிகளைத் தேடிப் பிடிப்பதற்கு தேவையேற்பட்டால் அரசாங்கமும் சர்வதேச சமூகமும் ஒப்பந்த விதிகளை மீறித்தானாக வேண்டும்.

இதற்காக தேடுதல் நடவடிக்கைகளையும் சந்தேக நபர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கான முயற்சிகளையும் அரசாங்கம் துணிந்து முன்னெடுக்க வேண்டும். இராணுவ புலனாய்வுப் பிரிவு முக்கியஸ்தரான கேர்ணல் முத்தலிப்பின் படுகொலையிலும் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலையிலும் புலிகளுக்கு ஒத்தாசையாக வெளிச் சக்திகள் ஈடுபட்டிருப்பதாக ஆரம்ப விசாரணையிலிருந்து தெரிய வந்திருக்கிறது. முத்தலிப்பின் படுகொலையில் முன்னாள் இராணுவத் தளபதி ஒருவரின் மகனும், கதிர்காமரின் படுகொலையில் முன்னாள் பொலிஸ் அத்தியட்சர் ஒருவரின் மகனின் வீட்டிலிருந்தோரும் சம்பந்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. தமது இலக்குகளை அடைவதற்காக கோடிக்கணக்கான ரூபாவை ஏனையவர்களுக்கு அள்ளி வீசக்கூடியவர்கள் புலிகள். புலம்பெயர் நாடுகளிலிருந்து கறக்கப்படும் பணமும் அப்பாவி தமிழ், முஸ்லிம் மக்களிடமிருந்து வரியாகவும் கப்பமாகவும் அறவிடப்படும் பணமும் இதற்குப் பாவிக்கப்படுகின்றது.


கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹாக்லாண்ட்

ஆயுதப்படைகளிலும் பொலிஸிலும் இருக்கும் ஊழல் பேர்வழிகளான நபர்கள் புலிகளிடமிருந்து 'சம்திங்' பெறும் விவகாரம் இன்று நேற்றல்ல, பல வருடங்களுக்கு முன்பிருந்தே இடம்பெற்று வருகிறது. ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் சுமார் 48 பொருட்கள் வடபகுதிக்கு எடுத்துச் செல்லத் தடை விதிக்கப்பட்டிருந்த காலத்தில் புலிகளிடமிருந்து பணம் பெற்றுக் கொண்டு டீசல், பெற்றோல், பற்றரி போன்றவற்றை இராணுவ அதிகாரிகள் அனுமதித்திருக்கிறார்கள். அண்மைக் காலத்தில் வடக்கில் பணியாற்றிய சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் இதே குற்றச்சாட்டின் பேரில் அங்கிருந்து இடமாற்றம் செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும். புலிகள் சமாதான மேசைக்கு வரவேண்டுமென்பதற்காக அவர்களின் அடாவடித்தனங்களுக்கு நெகிழ்ச்சித்தன்மையைக் காட்டுவது மிக மிகத் தவறானது. கதிர்காமரின் படுகொலையிலிருந்தாவது இதனை இப்போதே புரிந்து கொள்ளத் தவறினால் நாடும் நாட்டு மக்களும் பெருவிலையைச் செலுத்த வேண்டியேற்படும்.

தேசமும் சகல தேசிய இனங்களும் உயிர் வாழவேண்டுமென்பதற்கான போராட்டத்திலேயே தனது உயிரை லக்ஷ்மன் கதிர்காமர் பறிகொடுத்திருக்கிறார். இனியும் இந்தப் பட்டியலில் எவரும் இடம்பெறக் கூடாது. புலிகளின் கொலைப் பட்டியலில் அண்மைய சில வருடங்களாக தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரியும் இடம்பிடித்திருக்கிறார். வாய்க்கரிசி போடக்கூட வக்கற்ற யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரால் புலிகளின் எதிராளிகளைப் பாதுகாக்க முடியாதென்பது நன்கு தெரியும். யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு, புலிகளுக்குக் காட்டிய சலுகை மனோபாவமே படுகொலைகள் இன்னும் தொடர்கதையாக நீடிப்பதற்குக் காரணமாகும். எந்தவொரு சம்பவம் பற்றியும் விசாரணை நடத்தவோ தீர்ப்பளிக்கவோ யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அதிகாரமில்லை என்பதும் உண்மையே. ஆனால் சீனக் கப்பலை கடலில் தாக்கி மூழ்கடித்தவர்கள் புலிகளல்ல, மூன்றாம் தரப்பினரென்று கரடி விட்டவர்கள் இந்தக் கண்காணிப்புக் குழுவினர்தான். புலிகளின் ஆயுதக் கப்பலைத் தப்பிச் செல்ல உதவியவர்களும் அவர்களே. இப்படிப் பட்டியல் நீண்டுகொண்டே போவதால் இந்த நாட்டு மக்கள் கண்காணிப்புக் குழுவின் மீது நம்பிக்கையை இழந்து விட்டார்கள். இந்த நாட்டின் மதிப்புக்குரிய அமைச்சரொருவர் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார். பொலிஸ், இராணுவ தரப்பு, அரசாங்கம், ஜனாதிபதி, சகல கட்சிகளுமே புலிகள் மீதே சுட்டு விரலை நீட்டியிருக்கின்றன. பாவம் கண்காணிப்புக் குழு மட்டும் காதுகளையும் கண்களையும் வாயையும் பொத்திக் கொண்டிருக்கும் மூன்று குரங்குகளைப் போல நடந்து கொள்கிறது. இன்னும் எத்தனை நாளைக்கு இந்தக் குரங்குச் சேட்டை. ■


---

## ஊரிலிருந்து....



நீண்ட காலத்திற்குப் பின்னர் எனது பால்ய நண்பரைச் சந்தித்தேன். "பாவம் புலிகள், எவ்வளவு நல்லவர்கள், பொறுமையானவர்கள், அமைதியானவர்கள். சனங்கள்தான் கெட்ட சனங்கள், மோசமானவர்கள். மக்களால் அமைதியே குலையப் போகின்றது" எனக் கூறிக்கொண்டு வந்தார். நண்பர் குதர்க்கமாகப் பேசுபவர் என்பதை அறிந்தும், விடயத்தை அறியும் ஆவலில் விளக்கம் கேட்டேன்.

"இந்த மக்கள் என்னென்னவெல்லாம் செய்கிறார்கள்? சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களைப் பார்வையிட வந்த நாட்டின் பிரதமருக்கு விளக்குமாறு காட்டி விரட்டுகின்றனர். அடிக்கடி பேரணி நடாத்துகின்றனர். இடையிடையே ஹர்த்தால் கடையடைப்பு வேறு செய்கின்றனர். தாமும் தன்பாடுமாக இருந்த புலிகளை யுத்தத்தை ஆரம்பிக்கச் சொல்கின்றனர். சமரசம் பேச வந்த பொலிஸ் எஸ்பியை வெட்டிக் கொன்று விட்டனர். லக்ஷ்மன் கதிர்காமரின் மறைவிற்காகக் கட்டப்பட்டிருந்த கொடிகளைக்கூட கழற்றி விட்டனர். இந்தச் சனங்களைத் திருத்தவே முடியாது. கெட்ட சனங்கள். புலிகள்தான் பாவம். மக்களை ஒன்றும் செய்யாமல் அமைதியாக இருக்கும்படி கூறக்கூட முடியாமல் பொறுமை காக்கின்றனர்" என்றார். உங்களுக்கு ஏதாவது விளங்குகின்றதா?



# போர் நிறுத்த காலத்தில் புலிகளுக்கு கிடைத்த பெரு வெற்றி

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், புலிகளின் தலைவர் பிரபாகரனுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் மூன்றரை ஆண்டுகளை நிறைவு செய்துள்ள இவ்வேளையில், முழு உலகத்தின் பார்வையையும் இலங்கை மீது திருப்பச் செய்திருக்கும் இலங்கையின் வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலையானது அமைந்துள்ளது. 2002.02.22ஆம் திகதி கையொப்பமிடப்பட்ட இப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஊடாக புலிகள் தமது அரசியல் எதிரிகளைத் தொடர்ந்தும் படுகொலை செய்துவருவதானது வெறுமனே கண்டனங்களுக்கு மட்டுமே உட்பட்டதாகவுள்ளது. ஆனாலும், லக்ஷ்மன் கதிர்காமர் மீதான புலிகளின் தாக்குதலானது, கடந்த காலங்களை விடவும், அதிகரித்த அதிருப்தியையும் கண்டனக் குரல்களையும் எழுப்பியுள்ளது. குறிப்பாக அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், நோர்வே, நேபாளம், ஐக்கிய நாடுகள் சபை ஆகிய சர்வதேச நாடுகளின் கண்டனம் என்பது புலிகளின் மீது கடுமையான நடவடிக்கைகளை எதிர்காலத்தில் மேற்கொள்ள வழிவகுக்கும் என்று நம்பப்படுகிறது. முன்பொரு தடவை இதே பகுதியில் குறிப்பிட்டதைப் போல, இலங்கையில் தொடரும் மனிதப் படுகொலைகள் நிறுத்தப்படுவதற்கான அல்லது தடுக்கப்படுவதற்கான எவ்வித முன்னேற்பாடுகளும் செய்யப்படவில்லை.




ஆகவே, புலிகளின் கொலைப் பயணமானது இன்னும் தொடரப் போகிறது என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்துகொள்ள முடியும். இவ்வாறு கூறுவதற்கு பிரதான காரணம், லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையை துணிச்சலோடு புலிகள் மறுத்திருப்பதாகும்.

ஆகவே, எதிர்காலத்திலும் விரும்பத்தகாத யுத்த நிறுத்த மீறல் சம்பவங்கள் இடம்பெற வாய்ப்புகள் அதிகரித்துள்ளன.

இலங்கையைப் பொறுத்தவரை அதியுயர் பாதுகாப்புக் கட்டமைப்பைக் கொண்டுள்ளவர்களின் பட்டியலில் லக்ஷ்மன் கதிர்காமரும் ஒருவர் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். அவரது வாசஸ்தலம் அமைந்துள்ள பகுதி அதியுயர் பாதுகாப்பு வலயமாகும். இலங்கையின் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் என்று புலிகளின் கொலைப் பட்டியலை நீட்டிக் கொண்டே போகமுடியும். இவ்வாறு புலிகளால் கொலை செய்யப்பட இருப்பவர்கள் பட்டியலில் இருந்தும் லக்ஷ்மன் கதிர்காமர் மீதான கொலையைத் தடுத்து நிறுத்த முடியாமல் போயுள்ளது. லக்ஷ்மன் கதிர்காமரைப் பொறுத்தவரை இரண்டு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்ட ஒரு நோயாளி ஆவார். ஆகவே அவரது உடற்பயிற்சிக்காக ஒவ்வொரு நாளும்



லக்ஸ்மன் கதிர்காமர்

இரண்டு மணி நேரம் நீச்சலடிப்பது வழமை. அதற்கொரு பிரதான காரணம், பாதுகாப்புக் காரணங்களுக்காக அவர் மைதானங்க்ளுக்குச் செல்வதோ, வேறு பயிற்சிக் கூடங்களுக்குச் செல்வதோ ஆபத்தானதாகக் கருதப்பட்டதாகும். ஆகவே தான் புல்லர்ஸ் வீதியில் அமைந்துள்ள பிரத்தியேக வாசஸ்தலத்தில் அவருக்காகவே பிரத்தியேகமாக நீச்சல் தடாகம் அமைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் நடைபெற்ற ஆகஸ்ட் 12ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில், அன்றிரவு நிகழ்ந்த பண்டாரநாயக்க சர்வதேச கற்கைகளுக்கான நிலையம் வெளியிட்ட சஞ்சிகையை வெளியிட்டு வைத்தார். இதன் முதல் பிரதியை லக்ஷ்மன் கதிர்காமரிடம் இருந்து இலங்கைக்கான இந்தியாவின் தூதுவர் நிருபமா ராவ் பெற்றுக்கொண்டார். அன்றைய தினம் சஞ்சிகையை வெளியிட்டு உரை நிகழ்த்திய லக்ஷ்மன் கதிர்காமர், இச் சஞ்சிகையானது தனது நீண்ட நாள் இலட்சியக் கனவு என்றும், அது நனவாகியிருப்பதில் தான் மிகுந்த மகிழ்ச்சி கொண்டிருப்பதாகவும், இதன் இரண்டாவது சஞ்சிகை தயார் நிலையில் இருப்பதாகவும் தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றிய அவர், தெரிந்தோ தெரியாமலோ கூறிய வார்த்தை "இன்னும் 15 ஆண்டுகளில் தான் உயிரோடு இருக்கப்போவதில்லை" என்றும் அதற்கிடையில் இவ்வாறான சஞ்சிகை வெளியிடுகின்ற வாய்ப்பையிட்டு திருப்திகொள்வதாகவும் தெரிவித்தார். ஒருவேளை தனது உயிருக்கு ஆபத்து வந்துவிடும் என்று அவர் நினைத்திருக்கக் கூடும். அந்த நிகழ்ச்சி முடிவடைந்து வீட்டுக்கு வந்த கதிர்காமர், வழமைபோலவே நீச்சல் தடாகத்தில் உடற்பயிற்சி செய்தார். நீச்சல் முடிந்து வெளியேறி இரண்டு அடி தூரம் செல்வதற்கு முன்னரே பின்பக்கமாக சரிந்து விழுந்துள்ளார். அப்போது அவருக்கு அருகில் நின்றுகொண்டிருந்த அவரது துணைவியார் கணவன் மயக்கமுற்று விழுவதாக நினைத்து, தூக்குவதற்காக குனிந்த போது கதிர்காமரின் தலையிலும், மார்பிலும், வயிற்றுப் பகுதியிலும் இருந்து இரத்தம் கசிந்துள்ளது. ஆனாலும் அவரின் மனைவியோ ஏதோ சிவப்பு நிறத்தினாலான வர்ணம் பட்டிருப்பதாக நினைத்துள்ளார். எனினும் அருகிலேயே நின்றிருந்த பாதுகாப்பு அதிகாரிகளுக்கு விபரீதம் புரிந்தது. இரவு 11.00 மணிக்கு சத்தம் இல்லாமலே இடம்பெற்ற துப்பாக்கிச் சம்பவத்தினால் அதிர்ந்துபோன பாதுகாப்பு அதிகாரிகள் உடனடியாகவே லக்ஷ்மன் கதிர்காமரை கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர். அப்போது இரத்த வெள்ளத்தில் வார்த்தைகளை வெளிப்படுத்த முடியாமல் லக்ஷ்மன் கதிர்காமர் முனங்கியபடி ஏமாற்றத்தோடு பாதுகாப்பு அதிகாரிகளைப் பார்த்துள்ளார். வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் இரண்டு நரம்பியல் நிபுணர்கள், இரண்டு இதய சத்திரசிகிச்சை நிபுணர்கள் சகிதம் நான்கு பேர் கொண்ட நிபுணர்கள் எவ்வளவோ போராடியும் 45ஆவது நிமிடத்தில் லக்ஷ்மன் கதிர்காமரின் உயிர் பிரிந்தது. இந்தச் செய்தி நள்ளிரவைத் தாண்டி இரவோடிரவாக உலகெங்கும் பரவியது. செய்தியைக் கேள்வியுற்ற அநேகமானவர்கள் நம்ப மறுத்தார்கள். பாதுகாப்பின் மீது அதீத நம்பிக்கை கொண்டவர்கள் அதை நம்ப மறுத்தார்கள். ஆனாலும், லக்ஷ்மன் கதிர்காமர் கடைசி வினாடிகளில் கண்களினால் பேசிய இலங்கை தேசத்திற்கான கடைசி வேண்டுகோள்கள் என்னவாக இருக்க முடியும் என்பதை அவர் இல்லாத இடைவெளியோடு நீடிக்கப் போகின்ற இலங்கை மக்களின் நிம்மதியற்ற வாழ்வுவை நிச்சயம் உணர்த்திச் செல்லும். 11.10 மணியளவில் நாடு முழுவதிலும் உள்ள படையினர் உஷார் படுத்தப்பட்டதோடு கொழும்பு நகர் கடும் தேடுதல் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டது. திடீர்ச் சோதனை நடவடிக்கைகளும், தேடுதலும், ஹெலிகொப்டரிலிருந்து ஒளியைப் பாய்ச்சித் தேடுவதுமாக தேடுதல் வேட்டை தொடர்ந்தது. ஆனாலும், கொலையாளி ஏற்கனவே போட்ட திட்டத்தின்படி தப்பிச் சென்றுவிட்டான்.

புல்லர்ஸ் வீதியில் அமைந்துள்ள லக்ஷ்மன் கதிர்காமரின் வீட்டின் நீச்சல் தடாகத்திற்கு எதிர்ப்புறமாக வெறும் 50 மீற்றர் தூரத்தில் இரண்டு மாடி வீடொன்று உண்டு. அவ்வீட்டின் உரிமையாளர் பழைய பொலிஸ் அத்தியட்சர் தளையசிங்கம் (வயது 58). அவ்வீட்டின் இரண்டாவது மாடியில் குளியலறையில் இருந்து கொண்டு கதிர்காமரின் வீட்டின் நீச்சல் தடாகத்தை தாராளமாகக் கண்காணிக்கக் கூடியவாறு உள்ளது. இதை எப்படியோ தெரிந்துகொண்ட புலிகள் இக்கொலைக்கு களமாக அதை அமைத்துக்கொண்டார்கள். இலங்கை அரசாங்கத்தினதும், படைத் தரப்பினதும் விசாரணைகளிலிருந்து தற்போது வரை வெளியாகியுள்ள தகவல்களின்படி லக்ஷ்மன் கதிர்காமரின் குறிப்பிட்ட வாசஸ்தலத்தையும் அதைச் சுற்றியுள்ள அயல் புறத்தையும் புகைப்படம் பிடிக்கும்போது இரண்டு வாரங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்ட இளைஞர் புலி உறுப்பினரெனத் தெரியவந்துள்ளது. அவர் படம் பிடித்த புகைப்படங்கள்கூட அந்தச் சூழல் காட்சிகளை உள்ளடக்கியதாக இருந்ததையும் விசாரணைகள் நிரூபித்துள்ளன.



எம் 40 சினைப்பர் துப்பாக்கி

அலசுவது

**- மதியூகி -**

இந்த நிலையில் இருந்து பார்க்கின்ற போது மேற்படி வீட்டின் குளியலறையைப் புலிகள் தமது திட்டமிடல்களுக்கான இரகசிய இடமாக மாற்றிக் கொண்டுள்ளனர். கிடைக்கின்ற இன்னொரு தகவலின்படி வீட்டு உரிமையாளருக்கு மாதம் ஒன்றுக்கு இரண்டு இலட்சம் ரூபாவை வாடகையாக வழங்கியுள்ளதாகவும், அதன்படி இதுவரை 18 இலட்சம் ரூபாய்களை வாடகைப் பணமாகப் புலிகள் செலுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அப்படிப் பார்த்தால் 9 மாதங்களாகப் புலிகள் மேற்படி வீட்டின் குளியலறையைப் பாவித்து வந்துள்ளனர் என்பது தெரியவந்துள்ளது. மறுபக்கத்தில் பார்க்கின்ற போது 9 மாதங்களாக அவ்வீட்டில் புலிகள் இருந்திருந்தால், கொலைக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் அப்பகுதியை புகைப்படம் பிடிக்க வேண்டிய அவசியம் என்ன என்ற கேள்வியும் எழத்தான் செய்கின்றது. ஆனால் புலிகளின் ஊடுருவல் மற்றும் தகவல் சேகரிப்பு, திட்டமிடல் ஆகியவற்றைக் கொண்டு சிந்திக்கும்போது ஏற்கனவே திட்டமிட்டு பதுங்கிக் கொண்டாலும், இவ்வாறு புகைப்படம் பிடிப்பதனூடாகக் கைதாகுவதும் சிறிய சிறிய சந்தேகங்களை அவ்வப்போது ஏற்படுத்துவதுமானது பாதுகாப்புத் தரப்பின் கவனத்தை அச் சம்பவங்களோடு மட்டும் வைத்துக்கொள்வதாக இருந்துள்ளது.

இன்னும் விரிவான தகவல்களோடு அடுத்த வாரம் சந்திப்போம்.

---

# அதிரடி அய்யாத்துரை



**செத்தவீடுகளில்** பறையடிச்சு சங்கூதுறது எண்டது வழமைதான். ஆனால் வெளிநாட்டு அமைச்சரின்ர செத்த வீட்டுச் செய்தி கேட்டு யாழ்ப்பாணத்தில இருக்கிற இண்டர்நஷனல் மாணவர் பேரவை ஆக்கள் சரவெடி வெடிச்சு மகிழ்ந்திச்சினமாம். அது போதா தெண்டிட்டு இந்நாள் உறுப்பினர் ஒருவர் சந்தோசம் தாங்காமல் இனிப்பு வாங்கியும் கொடுத்தாராம். பார்த்தீங்களோ.... ஆக்களின்ர சாவிலையும் உப்பிடிச் சந்தோசப்படுறதுக் கெண்டும் ஒரு கூட்டம் இருக்கு. எப்பிடியிருந்த எங்கட சனத்தின்ர மனநிலையெல்லாம் இப்புடி ஆயிட்டுதெண்டு நினைக்கேக்க சிரிக்கிறதா, அழுகிறதா எண்டு தெரியாமல் கிடக்குங்கோ.

**பிரபலமான** அறிவிப்பாளரும், அவவின்ர கணவரும் பம்பலப்பிட்டியில சுட்டுக் கொல்லப்பட்டிச்சினமெல்லோ, இரட்டைக் கொலையெண்டு செய்தி கேள்விப்பட்ட உடனேயே ஒருக்கா எட்டிப் பார்ப்பமெண்டு ஸ்பொட்டுக்குப் போனனான். அதில கூடி நிண்டவை சும்மா இருந்த வாய்க்கு அவல் கிடைச்ச மாதிரி தங்கட இஷ்டத்துக்கு கதைச்சுக் கொண்டிச்சினம். செத்தவாவின்ர போய் பிரண்டொருவர் கோவத்தில இப்பிடிச் செய்திட்டார் எண்டும், இன்னொருவர் இவை லொட்ஜ் ஒண்டு நடத்தினவையாம்; ரெண்டெழுத்தார் வரி கேட்ட இடத்திலை தரமாட்டினம் எண்டு வாக்கு வாதப்பட்டிச்சினமாம். அதுக்காகவெண்டும், ரவல்ஸ் நடத்தினவையாம்; அந்த ஏஜெண்ட் தொழிலிலை போட்டி இருந்திருக்கலாம் எண்டும், அவாவின்ர கணவர் முன்னாள் நங்கூர இயக்கக்காரர் எண்டதாலை ரெண்டெழுத்தார் கைவரிசையைக் காட்டியிருப்பினம் எண்டும், வதந்தி முடியை விரிச்சுப் போட்டு, அதிலை ஆடிக் கொண்டு நிக்கேக்க இன்னொருவர், கடத்தப்பட்ட காவல்துறை அதிகாரி ஜெயரத்தினத்துக்கும் இவைக்கும் ஏதோ கனெக்ஷன் இருந்ததெண்டும் சொல்லுறார். கொலையாளி குளிச்சுப் போட்டு ரெஸ்ட் எடுத்துக்கொண்டு இருக்கிற நேரத்திலை வதந்திகளைப் பரப்புறதுக்கெண்டே கௌம்பிட்டாங்களுங்கோ......

போகிற போக்கைப் பார்த்தால் மனுசன் செத்தாலும் விடமாட்டாங்கள் போலை இருக்கு.

**கடந்து** போன மூண்டரை ஆண்டுகளிலையும் தேசியம் பேசித் திரிஞ்சவையும், அவையின்ர ஏக தலைவரிண்ட போட்டோவை வைச்சுக் கொண்டு திரிஞ்சவையும் அதிரடியா அறிவிக்கப்பட்ட அவசரகாலச் சட்ட அறிவிப்புக்குப் பிறகு பேந்தப் பேந்த முழிச்சுக் கொண்டு திரிஞ்சிச்சினமாம். கொஞ்சப் பேர் வரி உடுப்புப் போட்டவையின்ர போட்டோக்களை தேடி எடுத்து எரிச்சும் போட்டிச்சினமாம். அவசரகால அறிவிப்புக்கே நிண்டு பிடிக்காத தேசிய உணர்வு, நாளைக்கு ஒரு யுத்தம் வருமெண்டால் என்ன பாடுபடப் போகுதோ எண்டு வாத்தியார் போன் போட்டுக் கேக்கிறார். நான் என்னத்தைச் சொல்லுறது? பயத்தினாலை வைச்சுக் கொண்டவை, இன்னொரு பயத்தினாலை எரிச்சுப் போடுகினம். ஆக எங்கட மகா ஜனங்களைக் கட்டுப்படுத்துற பிரதான கருவி பயம் எண்டு ஆகிப் போச்சு. தெனாலி படத்தில கமலஹாசன் சொல்லுறதை மாத்திச் சொன்னால் எங்கட சனத்துக்கு, சண்டை வந்தாலும் பயம், சமாதானம் எண்டாலும் பயம், பேச்சுவார்த்தையெண்டாலும் பயம், பேசாம விட்டாலும் பயம், இருண்டாலும் பயம், விடிஞ்சாலும் பயம், வரி கட்டினாலும் பயம், வரி கேக்கிறவையைக் கண்டாலும் பயம். இப்புடி பயம்.... பயம்.... பயம்....

**வெளிநாட்டு** அமைச்சரின்ர படுகொலையாலை நாட்டு மக்களுக்கும் நாட்டுக்கும் மகா இழப்பெண்டு தேசிய உணர்வு மிக்கவை சொல்லிக் கொண்டு திரியேக்க, எங்கட மண்ணெண்ணையார் புதிசா ஒரு கதையைச் சொல்லிக் கொண்டு திரியிறாராம். உந்தக் கொலைக்குப் பிறகு யானைக் கட்சியின்ர பொலிரிக்ஸ் செல்வாக்கு கொஞ்சம் சரிஞ்சு போயிட்டுதாம். தேவையில்லாத நேரத்தில உந்த மடை வேலையைச் செய்திட்டினம் எண்டு நெருக்கமானவையிட்டைச் சொல்லி வருத்தப்படுறாராம். மண்ணெண்ணையார் சொல்லுறதைப் பார்த்தால் யார் சுட்டால் என்ன? யார் செத்தாலென்ன? தங்கட பொலிரிக்ஸில மண் அள்ளிப் போடுமாப்போல எதையும் செய்யாதிருந்தால் சரி எண்டு நினைக்கிறாராக்கும். மடை வேலையைச் செய்தவை மண்ணெண்ணையாரை எப்பவோ பொலிரிக்ஸில இருந்து ஒதுங்கச் சொல்லி சொல்லிப் போட்டினம் எண்டதை மனிசன் மறந்து போயிட்டார் போல.

**அதிகார** அம்மணியின்ர நல்ல ஆலோசகராகவும் நெருங்கின நண்பராகவும் இருந்த வெளிநாட்டு அமைச்சர் கொல்லப்பட்ட பிறகும் அம்மணி ஆத்திரப்படாம சமாதான முயற்சிகளை மேற்கொள்ள முடியுமெண்டு சொல்லியிருக்கிறா. ஆனால் ரெண்டெழுத்தார் தங்கட உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டாலே பொறுமையின்ர விளிம்பில நிக்கிறமெண்டும், தலைவரின்ர கட்டளைக்காகக் காத்திருக்கிறம் எண்டும் வாய்க்கு வந்தபடியெல்லாம் சொல்லுவினம். அடுத்த வெளிவிவகார அமைச்சர் யார் எண்டதையே இன்னும் தீர்மானிக்காத அதிகார அம்மணி பொறுமையின்ர விளிம்புக்குப் போகாம மத்தியத்திலேயே இருக்கிறா. அவசரமா கொண்டு வந்த அவசரகாலச் சட்டத்தைக் கூட பத்து நாளைக்குத்தான் எண்டும் சொல்லியிருக்கிறா. ஏன் தெரியுமோ? சமாதானத்துக்காக ஏங்கிக் கொண்டிருக்கிற எங்கட சனத்துக்கு மேலை அவசரகாலச் சட்டம் அநாவசியமாகப் பிரயோகிக்கப்படகூடாது எண்டதுக்காகத்தானாம். பாத்தியளோ...... நிதானம் எங்கை நிக்குதெண்டு.

**கிழக்கு** மாகாணத்திலை ஒவ்வொரு நாளும் ஒரு யுத்த நிறுத்த மீறல் எண்டு நிலைமை மோசமாகிக் கொண்டிருக்கு. ரெண்டெழுத்தார் மேலை படைத்தரப்பும், படைத்தரப்பு மேலை ரெண்டெழுத்தாரும் மாறி மாறி கொம்பிளெயின்ட் பண்ணிக் கொண்டிருக்கினம். கண்காணிப்புக்காரர் உந்தச் சம்பவங்களை ரெக்கோட் பண்ணுறதுக் கெண்டே தனியான பிரிவு ஒண்டையும் அமைச்சிருக்கினமாம். கண்காணிப்புக் குழுக்காரரின்ர தற்போதைய நிலைமை என்ன தெரியுமோ? உந்த மாதிரிச் சம்பவங்களை உறுதிப்படுத்துறதும், இடங்களைப் போய் பார்வையிடுறதும்தானாம். குறிப்பாச் சொல்லுற தெண்டால் இவையும் ஒருவிதமான திடீர் மரண விசாரணை அதிகாரிகள் தானாம். போரைக் கண்காணிக்க வந்து, போருக்கு முன்னம் நடக்கிற சம்பவங்களின்ர மரண விசாரணை அதிகாரிகளாக மாறிப்போயிருக்கினம். செத்துப் போன வெளிநாட்டு அமைச்சர் சொன்ன மாதிரி இவையும் சரி, நோர்வேக்காரரும் சரி, பக்கவாத்தியம் பாடுகினம் எண்டதைத்தான் இவையின்ர மரண விசாரணை அறிக்கைகளின்ர தோரணையும் காட்டிநிக்குது. சம்பவம் நடந்திருக்கு எண்டினம்; சேதம் ஏற்பட்டிருக்கு எண்டினம். காரணமானவை யார் எண்டதை மட்டும் கண்டும் காணாம விடுகினம். உந்தப் பக்க வாசிப்பு எதிலை போய் முடியப் போகுதோ?

# வெலிக்கடை அனுபவம்

**'Black July'** என இந்த மாதத்திற்குப் பெயர் சூட்டியவரே ஒரு சிங்களவர்தான். பிரபல ஆங்கிலப் பத்திரிகையாளராக இருந்த மேர்வின் டீ சில்வா அவர்கள்தான் கறுப்பு ஜூலை என இம்மாதத்தைப் பிரகடனம் செய்தார். அந்த அளவிற்கு 1983இன் ஜூலை மாதத்திலே நிகழ்ந்த கொடூரங்கள் அமைந்தன. நாகரீகமான..... மனிதாபிமானமிக்க மக்கள் சமூகத்தை தலைகுனிய வைத்த மாதம்தான் இந்த ஜூலை...

இம்மாதத்தில் தென்னிலங்கையில் இருந்து... மலையகத்தில் இருந்து...

ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் தம் உயிரைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டியிருந்தது. தமது பிறந்த மண்ணைவிட்டு ஓட வேண்டியிருந்தது... அகதிகளாக இந்தியாவிற்குப் புலம்பெயர வேண்டியிருந்தது. எங்குமே நமது மக்களின் வாழ்வு துயரத்தின் ஆழத்திற்குள் வீசப்பட்டுக் கிடந்தது...

தென்னிலங்கையில் வாழ்ந்த தமிழ் மக்களிடம் அன்று 1983 ஜூலையில் "இது உங்கள் தாயகம் அல்ல. வடக்கு - கிழக்கிற்கு நீங்கள் போங்கள்" எனச் சொல்லப்பட்டது. கப்பலிலும், வாகனங்களிலும், கால்நடையாகவும் வடக்கு, கிழக்கை நோக்கி தென்னிலங்கையில் இருந்த தமிழ் மக்கள் பயணித்தனர்...

எது எங்கள் தாயகம் என்று நம்பி மக்களாகிய நீங்கள் அன்று சென்றிருந்தீர்களோ, அதே தாயக மண்ணை விட்டு நீங்கள் மறுபடியும் கொழும்புக்குத் தப்பியோட வேண்டிய தலைகீழான மாற்றம் எமது வரலாற்றில் நடந்து கொண்டிருக்கிறது

இன்று தமிழ் ஜனநாயக சக்திகளுக்கும், மாற்றுக் கருத்துள்ளவர்களுக்கும், பொது மக்களுக்கும் வடக்கு - கிழக்கு தாயகம் என்ற யதார்த்தத்தைப் புலிகள் மறுத்து நிற்கின்றனர். தமது சொந்தத் தாயகத்தில் இருந்து மாற்று ஜனநாயக சக்திகளை, மனித உரிமைச் செயற்பாட்டாளர்களை, சுதந்திர ஊடகவியலாளர்களை, தமிழ் மக்களை, முஸ்லிம் மக்களை, சிங்கள மக்களைக் கொலைகள் புரிந்தும் அச்சுறுத்தியும் வடக்கு - கிழக்கு தாயகத்தில் இருந்து விரட்டியடித்துள்ளனர்... விரட்டி வருகின்றனர்...

ஆடி மாதம் பிறந்தால் கொழும்பே களைகட்டத் தொடங்கிவிடும். ஆனால், அந்த ஆடி மாதத்தின் 23ஆம் திகதி தொடக்கம் 28ஆம் திகதி வரை கொழும்பே ரணகளமானது. அப்போது நானும் என்னுடன் 71 ஈழப் போராளிகளும் வெலிக்கடைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தோம். இன்னும் சில ஈழப் போராளிகள் கொழும்பு மெகசின் சிறையிலும் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்...

1843ஆம் ஆண்டு பிரித்தானியரால் கட்டப்பட்ட சிறைச்சாலைதான் வெலிக்கடைச் சிறைச்சாலை. அதிபாதுகாப்பான சிறைச்சாலை. இந்தச் சிறைக்குள் வைத்துத்தான் ஈழத்திற்காக தமது உயிரினை எமது சகோதரர்கள் இழந்தார்கள்; எதிரியின் சிறைக்குள் போராடி வீர மரணமடைந்தனர். அந்த நாளை நினைத்துப்பார்க்கிறேன்... அந்த நினைவுகளால் என் நெஞ்சம் பிளக்கிறது!

தவறாக வழிநடத்தப்பட்ட, இனவாதமூட்டப்பட்ட சிங்களக் கைதிகள், சிறைக்காவலர்களின் உதவியுடன் கொலைகளை வெலிக்கடைச் சிறைக்குள் நடாத்தி முடித்தனர். கொலை வெறியும் ஆத்திரமும் கண்களில் மிதக்க மிக மோசமாக..... கோரமாக.... எமது தோழர்கள் வெலிக்கடைச் சிறைக்குள் கட்டம் கட்டமாகக் கொன்று குவிக்கப்பட்டனர்... வெலிக்கடைச் சிறையின் தாழ்வாரங்களும், அறைகளும் நமது ஈழப் போராளிகளின் குருதியினால் நிறைந்து வழிந்தன.

குற்றுயிரும் முனகலுமாக எமது ஈழப் போராளிகள் கிடத்தப்பட்டுக் கிடந்தனர்...

1983 ஜூலை 23, 24களில் கொழும்பிலும், மலையகத்திலும்



வெலிக்கடை சிறை முகப்புத் தோற்றம்

நடைபெற்ற கொடூரங்கள் பற்றிய செய்தி வெலிக்கடைச் சிறைக்குள் பரவத் தொடங்கியது. சிறைக்காவலர்களினதும் கைதிகளினதும் செயற்பாடுகள் எமக்கு நிறைய விசயங்களை முன்கூட்டியே எச்சரித்தன. ஈழப் போராட்டத்தில் கைதிகளாக பிடிக்கப்பட்ட நாம், எமக்குள் உரையாடல்களைச் செய்துகொண்டோம்! ஆனாலும் கொடூரம் இவ்வளவு வலிதாக எம் மீதும் தமிழ் மக்கள் மீதும் இறங்குமென நாம் எண்ணியிருக்கவில்லை.

1983 ஜூலை 25ஆம் திகதியும் விடிந்தது. ஆனால் வெலிக்கடைச் சிறையில் இருந்த ஈழப் போராளிகளின் வாழ்வை அத்தினம் காவுகொள்ளத்தான் விடிகிறது என்று அங்கு தடுத்துவைக்கப்பட்டிருந்த நாம் எண்ணியிருக்கவில்லை. இந்த இடத்தில் நான் ஒன்றை மிகத் தெளிவாகச் சொல்லவேண்டும் என விரும்புகிறேன்! உங்கள் சிந்தனையை என் கருத்தின் பக்கம் சற்றுத் திருப்புங்கள்!

1983 ஜூலைக் கலவரத்திற்கு - இன அழிப்பிற்கு ஆணி வேராக இருந்த சம்பவம் ஜூலை 23ஆம் திகதி யாழ். திருநெல்வேலிச் சந்தியில் இராணுவத்திற்கெதிராக புலிகள் நடாத்திய தாக்குதல் சம்பவமாகும். இச்சம்பவத்தின் காரணமாக ஏற்பட்ட உணர்வலையே, நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் உயிர் இழப்பதற்கும், ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகளாகுவதற்கும், கோடிக்கணக்கான பெறுமதியான சொத்துகள் தீயில் எரிந்து சாம்பலாவதற்கும் காரணமாக இருந்தது. இந்த உண்மையை எல்லோரும் ஏற்றுக்கொள்வர்!

அன்று தமிழ் மக்களின் போராட்டத்தை அடக்குவதற்குத் தருணம் பார்த்திருந்த சிங்கள இனவாதம், அதன் நேரடிப் பிரதிநிதிகளாக அன்று ஆட்சி அதிகாரத்திலிருந்த சிங்கள அரசுத் தலைமைகளின் ஆசியுடன் திருநெல்வேலி தாக்குதலைத் தமிழ் மக்கள் மீது வஞ்சம் தீர்ப்பதற்குத் தக்க தருணமாகப் பாவித்தது. தமிழ் மக்களின் போராட்டம் தொடர்பான முரண்பாடுகளைக் கொலைகளாகச் சிங்கள இனவாதம் 1983 ஜூலையில் அரங்கேற்றியது.

புலிகளின் திட்டமிடப்படாத தாக்குதல் சம்பவம்தான் ஜூலையில் ஏற்பட்ட கலவரத்திற்கும் வெலிக்கடைச் சிறைப் படுகொலைக்கும் அடிநாதமாக அமைந்தது. புலிகளுக்கு மக்களைப் பற்றி என்றுமே அக்கறை இருந்ததில்லை. புலிகளின் எந்த இராணுவ நடவடிக்கையின் போதும் மக்களைக் கருத்திற்கொண்டது கிடையாது!

புலிகளின் ஒவ்வொரு இராணுவ யுக்தியும் ஒன்று மக்களைப் பலிகொடுப்பதாகத் திட்டமிடப்படும்; அல்லது மக்களை அரணாக வைத்து நடாத்தப்படும் தாக்குதலாகவே இருக்கும்! புலிகளின் இத்தகைய வறட்டுத்தனமான இராணுவ முனைப்பும் அதன் பெயரால் சிங்கள இராணுவம் தமிழ் மக்களைக் கொல்ல வேண்டும் என்பதுமே புலிகளின் எதிர்பார்ப்பாக இருந்துள்ளது. அன்றிலிருந்து இன்றுவரை புலிகளின் இராணுவ வழிமுறையாக இதுவே இருந்தும் வருகிறது!

இன்றும் கூட தொடருகின்ற யுத்த நிறுத்தத்தை முறிப்பதற்குப் புலிகள் முயற்சி செய்கின்றனர். யுத்த நிறுத்தம் தொடர்ந்தால், பதற்றம் தணிந்தால் மக்களுக்கும் படையினருக்கும் இடையே நல்லுறவு தொடரும். அந்நிலைமை தமக்கு - புலிகளது சுயலாப அரசியலுக்கு பாதகமாக அமைந்துவிடும் என்பதற்காகப் பாதுகாப்புப் படையினர் மீது சிறிது சிறிதாகத் தாக்க ஆரம்பித்துள்ளனர் புலிகள். இது புலிகளது வரலாறு.

துயரங்களைச் சுமந்து நிற்கும் மக்களே!

எந்த விடுதலைப் போராட்டமும் மக்களைப் பாதுகாப்பதற்காகவே நடாத்தப்படுகிறதே அன்றி, மக்களைப் பலிகொடுப்பதற்காக அல்ல! ஆனால், புலிகளின் போராட்டம் என்பது மக்களின் அழிவுகளில் இருந்தே, சக இயக்கங்களின் மீதான அடக்குமுறையில் இருந்தே கட்டியெழுப்பப்பட்டு வந்துள்ளது. இதுதான் உண்மையான வரலாறாகும்!...

மீண்டும் நான் வெலிக்கடைச் சிறைக்கு வருகிறேன்!

சிங்களத்தின் வெலிக்கடை, மெகசின் சிறைகளுக்குள் ஈழப் போராளிகள் இருக்கிறார்கள். தமிழ் மக்கள்

(தொடரும்...)


"மந்திரயோகி" வாழும் மலையாள மாந்திரீக வசிய மருத்துவம்
(யோகி. டாக்டர்) YOGI - Dr. T. MYLVAGANAM (வைத்திய குருபரம்பரை)
Rh MD - D Acu (இலங்கை) M B B S (h) S M P - P G D P C (இந்தியா)
Counsultant Homoeopath (Medicine) Phychological Councilor - Traditional Medical Researcher - Yoga
Ministry of Health சுகாதார அமைச்சின் (மெடிகல் கவுன்சில்) பதிவு இல. MC061



காதல் நிறைவேறி, திருமணம் நடைபெற, வேண்டியவர்கள் வெறுக்காமல் மிகவும் அன்பாக இருக்க பிரிந்து சென்றவர்கள் வந்துறவாகப் போதைப்பழக்கம், விரும்பாத உறவை மறக்க, கல்வி, தொழில், வியாபாரம்,வேறு காரியங்களிலும் வெற்றிபெற, தீயசக்திகளை, விலக்கி இவைகளாலும், வேறு ஆள்மனத் தாக்கங்களினாலும், ஏற்பட்ட உடல்நோய், மனநோய்கள் சலகவிதமான மனோநிலை பாதிப்புக்களை பிரச்சினை, கவலைகலைத் தீர்த்து நாடிய காரியங்களை உடன் நிறைவேற்றி, உடல்சக்தி, மனோசக்தி, பெற்று தைரியமாக மனித வசிகரக் கவர்ச்சியோடு மகிழ்ச்சியாக வாழலாம். யோகி டாக்டரிடம் வரமுடியாதவர்கள் பதிவுத்தபால், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தபால் மூலம் பரிகாரப் பொருட்களைப் பெற்றும், பெறாமலும் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம். கடல்கடந்த வெளிநாட்டவர்களுக்கு அதிவிசேட செயல்முறைகள் தருமசிந்தனையுள்ள புனிதசேவை ஸ்தானம் அரசாங்க பதிவு இல. HA14/BT/176.
(இந்தியன் வைத்தியசாலை), குருசக்தி நிலையம், பிள்ளையார் கோவில் வீதி, இராமகிருஷ்ணபுரம், கல்லடி, மட்டக்களப்பு.
விலாசம் (INDIAN CLINICK) GURUSACKTHY CENTRE, KALLADY, BATTICALOA (Sri Lanka)
போன் 065-2224872 (வெளிநாடு : 0094652224872),
Cell செல்: 077-3081100 (வெளிநாடு : 0094077308110 0)
Fax: 0094-65-2223796 E-Mail : yogidrmyl@sltnet.lk
Maharishi Yoga Life - மஹரிஷி யோக வாழ்க்கை
Transcentendal Meditation Mental - Health Care - ஆள்நிலைத் தியானம் - மனநல பாதுகாப்பு
மூன்று நாளில் கிடைக்கக்கூடிய சர்வதேச தபால் பார்சல் விசேட சேவை

விளம்பரப் பகுதி

நவசித்தர் மாந்திரீகம்



ஓம் குருவே நம: கர்ம வினைகளினால் தீய சக்திகளால் ஏற்பட்ட தீராத உடல் நோய், குடும்பப் பிரச்சினை, காதல் விவகாரம், வியாபாரம், கல்வி, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பயணம், பிரிந்தவர் ஒன்றுசேர, வேண்டாதவரை விலக்க, இன்னும் அனேக காரியங்களுக்கு மஹாசக்தி உபாசகர் மட்டக்களப்பு பரம்பரை சித்த ஆயுள்வேத மாந்திரீக மருத்துவர்.
Dr.T.Murukuppillai (S.A.M.P.), Main Street, Pandiruppu - 01. Kalmunai. (Sri Lanka) Tel: 067 - 2224077, வெளிநாடு: 0094672224077

## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**


இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒருவருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3,500 | ரூ.1,750 | ரூ.875 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4,400 | ரூ.2,200 | ரூ.1,100 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3,100 | ரூ.1,550 | ரூ.775 |
| உள்ளூர் | ரூ. 1,050 | ரூ.525 | ரூ.265 |


சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரைப் பெற விரும்புவோர் D.D. Enterprises என்ற பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர், தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் "Manager Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ.மெயில் :- (E-mail):- murasu@sltnet.lk







மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக சக்தியால் பிரிந்தவர்கள் ஒன்று சேர, கணவன் - மனைவி பிணக்கு தீர்ந்து, ஒற்றுமையாக இருக்க, திருமணம் கை கூட, மனங்கவர்ந்த காதலன் காதலி ஒன்று சேர, கல்வி ஞான கவசம் பெற, குபேர வாழ்வு கிட்ட, வெளிநாட்டு பிரயாணத்தடை நீங்க, சகல தோஷங்களும் நிவர்த்தி செய்து கொள்ள அனைத்து விடயங்களுக்கும் நேரில் வருகை தரவும்.

அத்துடன் அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகங்க்ள் என்றுமே பிழைத்தது இல்லை. நடந்தது, நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு எத்தனையாம் திகதி எத்தனை மணிக்கு நிறைவேறும் என்பதை திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ளவும், மற்றும் கைரேகை பார்த்து தெரிந்து கொள்ள பிறந்த திகதி தேவையில்லை.

வாங்கும் பணத்திற்கு உத்தரவாதம் கொடுப்பதென்றால் அது நான் மட்டுமே! வெளிநாட்டவர்களுக்கு விசேட சலுகையும் 24 மணித்தியால தொலைபேசி சேவையும் உண்டு.

பேராசிரியர் டாக்டர்
P.K. சாமி J.D.G.A.N (J.P)
162, கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு - 13.

T/NO 2342463/2342464
2470615/2431137
Fax :- 2344832

## சிறுகதை, கவிதை எழுத்தாளர்களுக்கு....

முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத்தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி. - ஆசிரியர்

## இன்னொருவர் பார்வையில்

# லண்டனில் ஐரிஷ் குண்டு வெடிப்புகள்

## பிரிட்டிஷ் வாசியான ஓர் இலங்கையரின் பார்வை

**லண்டனில் நீண்டகாலம் வாழ்ந்துவரும் இலங்கையரான ரெஜி பெர்னாண்டோ என்பவர் எழுதிய 'லண்டனின் பயங்கரவாதக் குண்டுத் தாக்குதல்கள் - ஒன்றும் புதியவையல்ல' என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரை கடந்த 12ஆம் திகதி கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில நாளிதழான 'த ஐலண்ட்' பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது. இக் கட்டுரையில் வெளிவந்த பெரும்பாலான பகுதிகளின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது. ரெஜி பெர்னாண்டோ பத்திரிகையாளர் மட்டுமல்ல, வடக்கு லண்டனிலுள்ள ஐரிஷ் மக்கள் பெருமளவு வாழும் கில்பேர்ன் பகுதியில் இவருக்குச் சொந்தமான மாடிக் குடியிருப்பு இருப்பதாகவும் அதில் ஐரிஷ் சமூகத்தவரே வாழ்வதாகவும் அங்கு வந்து போகும் ஐரிஷ் கெரில்லாக்கள் பற்றியும் அவர் குறிப்பிடுகின்றார்.**

லண்டன் முப்பது வருடங்களுக்கு மேலாக பயங்கரவாதிகளின், அவர்களது குண்டுகளின், ஏனைய கொலைக் கருவிகளின் இலக்காக இருந்து வந்துள்ளது. வட அயர்லாந்தில் பத்து, பன்னிரெண்டு தடவைகள் குண்டு வெடிப்புகளை மேற்கொள்வதை விட லண்டனின் மையப் பகுதியில் தனியொரு குண்டினை வெடிக்க வைப்பது ஐரிஷ் இலட்சியத்திற்கு கூடியளவு பிரசாரத்தைத் தருமென்ற எண்ணக் கருத்து பிரிட்டிஷ் ஆயுதப் படைகளுக்கெதிராகப் போராடி வந்த ஐரிஷ் குடியரசு இராணுவத்தினருக்கு 1970களில் ஏற்பட்டது.

இது வட அயர்லாந்துக்கும் இங்கிலாந்துக்குமிடையிலான உள்வீட்டுப் பிரச்சினையாகும். 1979ஆம் ஆண்டளவில் ஐரிஷ் குடியரசுவாதிகள் லண்டனில் தமது முதலாவது குண்டுத் தாக்குதலை நடத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டனர். இதன் மூலம் மக்கள் மத்தியில் மிக மோசமான பீதி மனோபாவத்தைத் தோற்றுவித்தார்கள்.

லண்டன் நகர் மக்கள் மனதில் பீதி மனோபாவத்தைத் தோற்றுவிப்பதற்காக அவர்கள் பல்வேறு பயங்கரவாத நிகழ்ச்சிகளில் ஈடுபட்டனர். 1973ஆம் ஆண்டின் பிற்பகுதி வரை 38க்கு மேற்பட்ட குண்டுத் தாக்குதல்களை அவர்கள் நடத்தியுள்ளனர். ஒரு வருட காலத்திற்குள் இக் குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டன.

அக் காலகட்டத்தில் நான் கிங்ஸ்டன் என்ற பகுதியில் வாழ்ந்து வந்தேன். சரேயிலுள்ள தேம்ஸ் நதிக்கு மேலாக கிங்ஸ்டன் அமைந்திருந்தது. ஆனால், ஐரிஷ் சமூகத்தவர்கள் மிகப் பெரும்பான்மையாக வாழும் வடக்கு லண்டனிலுள்ள கில்பேர்ன் என்ற பகுதிக்கு நான் அடிக்கடி விஜயம் செய்வதுண்டு. அங்கு எனக்கு தொடர்மாடிக் குடியிருப்பு ஒன்று சொந்தமாகவிருந்தது. அந்தக் குடியிருப்பில் வாடகைக்குக் குடியிருந்த அனைவருமே ஐரிஷ் சமூகத்தவர்களாவர். வாடகைப் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்காக ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை காலையும் நான் குடியிருப்புக்குச் செல்வதுண்டு. எனது மாடிக் குடியிருப்பு ஐவி வீதியில் அமைந்திருந்தது. இங்குதான் மிகப் பிரபல்யம் பெற்ற பாராளுமன்றவாதியும் தற்போதைய லண்டன் நகர மேயருமான கென்-லிவின்ஸ்டன் வாழ்ந்து வந்தார். அவரது வீடு எனது மாடிக் குடியிருப்பிலிருந்து சில வீடுகளுக்கப்பால் இருந்தது.

பயங்கரவாதிகள் மிக விரைவாகவே பிரசாரத்தைப் பெறுவதற்காக தாக்குதல்களை நடத்துவதற்கான சிறந்த இடம் லண்டனாகும். ஏனெனில் அப்போது முழுப் பத்திரிகைகளும் செய்தி முகவர் நிலையங்களும் பிலீற் வீதியை (Fleet Street) அடித்தளமாகக் கொண்டு செயற்பட்டன. அதாவது ஐரிஷ் சமூகத்தவர்களின் தலை நகரமெனக் கருதப்படும் கில்பேர்னிலிருந்து 20 நிமிடங்களுக்குள் வாகனமொன்றின் மூலம் பிலீற் வீதியைச் சென்றடைய முடியும். இன்று பொதுநலவாய பத்திரிகைச் சங்கம் (Commonwealth Press Union - CPU.) மட்டுமே அங்குள்ளது. கில்பேர்ன் பகுதியில் ஆயிரக்கணக்கான ஐரிஷ் மக்கள் வாழ்வதால் லண்டனில் நாசகார நடவடிக்கைகளை மேற்கொள்ள வருகைதரும் பயங்கரவாதிகள் இந்த ஐரிஷ் மக்கள் மத்தியில் வாழ்வதற்கான வசதிகளை இலகுவாகவே பெற்றுக் கொள்கின்றனர். இதனால் இவர்களைக் கேள்விக்குரியதாக்குவது கஷ்டமானது. அயர்லாந்திலிருந்து லண்டனுக்கு வருகை தந்து எனது மாடிக் குடியிருப்பிலிருந்த ஐரிஷ் சமுகத்தவர்களை வந்து சந்தித்துச் சென்ற பலர் குறித்து பொலிஸார் பல தடவைகள் என்னை விசாரணைக்குட்படுத்தியது இன்றும் எனக்கு ஞாபகமாக இருக்கிறது.

மத்திய லண்டனில் தாக்குதல்களை நிகழ்த்துவதற்கு அவர்கள் முயற்சிகள் மேற்கொண்டதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மீது அழுத்தத்தை ஏற்படுத்துவது ஒன்று. எது வந்தாலும் முகம் கொடுப்போம் என்ற உறுதியுடன் இருக்கும் மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கிப் பீதி மனோபாவத்தை ஏற்படுத்துவது மற்றொன்று. காலம் செல்லச் செல்ல வட அயர்லாந்துக்கான ஐரிஷ் குடியரசு இராணுவத்தின் எதிர்காலத் திட்டங்கள் பெரிதும் மாற்றமடைந்துள்ளன. அவர்கள் பொருளாதார ரீதியாகச் சேதங்களை ஏற்படுத்தும் வகையில் தமது உத்திகளை மாற்றிக்கொண்டனர். லண்டனிலுள்ள பல்வேறு நிதி நிலைகள் மீது அவர்கள் பல தாக்குதல்களைத் தொடுத்தனர். உல்லாசப் பயணிகளைப் பீதிக்குள்ளாக்கி நாட்டுக்குள் வரவிடாமல் தடுப்பதற்காக பல தாக்குதல்களையும் அவர்கள் நடத்தினார்கள். இந்த வகையில் உல்லாசப் பயணிகளைக் கவர்ந்த பல இடங்கள் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டன.


> **பயங்கரவாதிகளின் பைத்தியக்காரச் செயல்களால் பிரிட்டன் முடங்கிப் போயுள்ளது. இலங்கையர்களாகிய எம்மைப் பொறுத்தவரையில் பல தசாப்த காலமாக இந்த அருவருப்பான தாக்குதல்களுக்கு இலக்காகி வந்திருப்பதால் எம்மைவிட யாரும் இப் பைத்தியக்காரத்தனம் பற்றி நன்கு தெரிந்திருக்க முடியாது. பயங்கரவாதப் பைத்தியக்காரர்கள் இந்த உலகில் இருக்கிறார்கள் என்பதும் அவர்கள் மனித உயிர்களை ஒரு பொருட்டாக மதிப்பதில்லையென்பதும் இலங்கையராகிய எமக்குத் நன்கு தெரியும்.**


உலகப் பிரசித்தி பெற்ற பழைய பெய்லி நீதிமன்றத்திற்கருகே 1973ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஐரிஷ் குடியரசு இராணுவத்தினர் இரு குண்டுகளை வெடிக்க வைத்தமை குறிப்பிடத்தக்கது. இந்த பழைய நீதிமன்றம், திரைப்பட நடிகர்கள் மற்றும் அரசியல்வாதிகள் உட்பட பல புகழ்பெற்ற நபர்களுக்கு நீண்ட காலச் சிறைத் தண்டனையையும் மரண தண்டனையையும் விதித்திருக்கிறது. பின்னர் உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப் பயணிகளைக் கவரும் ஹைட் பார்க்கிலும், ரீஜென்ட் பார்க்கிலும் குண்டுகளை வெடிக்க வைத்திருக்கிறார்கள் இந்தத் தாக்குதல்களில் 11 பிரிட்டிஷ் படையினர் கொல்லப்பட்டதோடு சுமார் 50 பொதுமக்கள் காயமுற்றனர். உலகப் பிரசித்தி பெற்ற ஹறோட்ஸ் விற்பனைத் தொகுதியில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலிலும் 6 பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக் கணக்கானோர் காயமுற்றனர். இளவரசி டயானாவின் காதலரான அல் பயாத்தின் தந்தையாருக்குச் சொந்தமான விற்பனைத் தொகுதி இது என்பது குறிப்பிடத்தக்கது. ஐரோப்பாவிலிருந்து பெருந்தொகையான உல்லாசப் பயணிகள் இங்கு வருகை தருவதும் குறிப்பிடத்தக்கது.

ஐரிஷ் குடியரசு இராணுவத்தினரின் மிகப் பெரிய தாக்குதலிலொன்று 1984ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. பிரைட்டன் கடலோர உல்லாச விடுதியில் அப்போது ஆட்சியிலிருந்த கன்சர்வேட்டிவ் கட்சியின் வருடாந்த மாநாட்டில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் ஐவர் கொல்லப்பட்டனர். 24 பேர் காயமுற்றனர். இவர்களில் இருவர் அமைச்சர்களாவர். இவர்களிலொருவர் வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் நோர்மன் டிப்பிட். இவரது மனைவியான மாகிரெட் என்பவரும் படுகாயமுற்றார். எனினும் பிரதமர் திருமதி மார்கிரெட் தட்சரும் அவரது கணவரும் இத்தாக்குதலில் பாதிப்பேதுமின்றித் தப்பிக் கொண்டனர். ஆனால் இத் தாக்குதல் ஐரிஷ் குடியரசு இராணுவத்தினருக்கு மிகப் பாரிய வெற்றியாக அமைந்தது என்று கூறலாம்.

கட்டிடச் சிதைவுகளுக்குள்ளிருந்து அமைச்சர் நோர்மன் டிப்பிட் இழுத்தெடுக்கப்படுவதை தொலைக் காட்சியூடாகப் பார்த்தது எனக்கு இன்னும் ஞாபகமிருக்கிறது. அவரது மனைவியும் படுகாயங்களுக்கிலக்காகி வாழ்நாள் பூராவுமே நடமாட முடியாத நிலைக்கத் தள்ளப்பட்டார். அமைச்சர் நோர்மன் டிப்பிட் சில வருடங்களுக்கு முன்னர் "வருடத்திற்கான சிறந்த பிரமுகர்" என்ற விருது வழங்கும் நிகழ்வில் தோன்றியமையையும் நான் பார்த்தேன். அவர் விருது பெற வந்தபோது மண்டபம் எங்கும் ஆரவாரம் எதிரொலித்தது. அவர் விருதுபெறும் போது கூறியது இன்னமும் எனக்கு ஞாபகத்தில் இருக்கிறது. "மனிதர்களுக்குப் பலமான உள்ளுணர்வும் துணிவுமிருக்கிறது என்பதை நான் கண்டிருக்கிறேன். மனிதர்கள் துன்ப துயரங்களைச் சந்திக்கும்வரை எவருமே இதனை அனுபவரீதியாக உணர்ந்திருக்க மாட்டார்கள்" என்று அவர் கூறியிருந்தார்.

1991ஆம் ஆண்டு பிரிட்டிஷ் பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் அமைந்திருந்த இலக்கம் 10, டவுனிங் ஸ்ரீட் மீது ஐ.ஆர்.ஏ. கெரில்லாக்கள் நடத்திய தாக்குதலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். உள்ளூரில் தயாரிக்கப்பட்ட மூன்று மோட்டார் ஏவுகணைகள் பிரிட்டிஷ் பிரதமரின் வாசஸ்தலத்தை நோக்கி ஏவப்பட்டன. அதிர்ஷ்டவசமாக இத்தாக்குதலில் எவரும் காயமடையவில்லை. பின்னர் 1992ஆம் ஆண்டு லண்டனின் பொருளாதார கேந்திர நிலையத்தில் இரு குண்டுத் தாக்குதல்கள் மேற் கொள்ளப்பட்டன. இதில் நால்வர் கொல்லப்பட்டனர். பெருத்த சேதம் ஏற்பட்டது. இந்த இரு குண்டுகளும் பால்டிக் பரிவர்த்தனை நிலையத்திற்கு முன்னால் வெடிக்க வைக்கப்பட்டன. பல கோடிக்கணக்கான ஸ்டேர்லிங் பவுண் பெறுமதியான சொத்துக்கள் சேதமாக்கப்பட்டன.

அண்மையில் அதாவது, ஜூலை மாதம் 7ஆம் திகதி, லண்டனில் நிகழ்ந்த குண்டு வெடிப்புக்கள் பிரிட்டிஷ் மக்கள் மத்தியில் பரவலாகப் பெரும் பீதியையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியுள்ளன. அதாவது ஐரிஷ்வாதிகளில்லாமல் வெளியுலகத் தாக்குதல்களும் நடத்தப்படக்கூடுமென்று நீண்டகாலமாக நிலவி வந்த பீதி இப்போது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

பயங்கரவாதிகளின் பைத்தியக்காரச் செயல்களால் பிரிட்டன் முடங்கிப் போயுள்ளது. இலங்கையர்களாகிய எம்மைப் பொறுத்தவரையில் பல தசாப்த காலமாக இந்த அருவருப்பான தாக்குதல்களுக்கு இலக்காகி வந்திருப்பதால் எம்மைவிட யாரும் இப் பைத்தியக்காரத்தனம் பற்றி நன்கு தெரிந்திருக்க முடியாது. பயங்கரவாதப் பைத்தியக்காரர்கள் இந்த உலகில் இருக்கிறார்கள் என்பதும் அவர்கள் மனித உயிர்களை ஒரு பொருட்டாக மதிப்பதில்லையென்பதும் இலங்கையராகிய எமக்குத் நன்கு தெரியும்.

கடந்த 30 வருட காலமாக பிரிட்டனில் இடம் பெற்று வந்த பயங்கரவாத குண்டுத் தாக்குதல்கள் சம்பந்தமான முக்கிய சில தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

1973ஆம் ஆண்டு மார்ச் மாதம் லண்டனிலுள்ள ஓல்ட் பெயிலி உயர்நீதிமன்றத்திற்கும் விவசாய திணைக்களத்திற்கும் அருகில் ஐரிஷ் குடியரசுவாதிகள் நடத்திய சில குண்டுத் தாக்குதல்களில் ஒருவர் கொல்லப்பட்டார். 200க்கு மேற்பட்டோர் காயமுற்றனர். 1974ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் படை வீரர்களையும் அவரது குடும்பத்தினரையும் ஏற்றிச் சென்ற பஸ்ஸொன்று குண்டுத் தாக்குதலுக்கு இலக்கானது. இதில் 12 பேர் கொல்லப்பட்டனர். லண்டனில் சுற்று வட்டாரப் பகுதியிலுள்ள பல உணவு விடுதிகளில் அவ்வருடம் ஒக்டோபர் மாதம் மேலும் பல குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இவற்றில் 28 பேர் கொல்லப்பட்டனர், 240 பேர் காயமுற்றனர். இதனையடுத்து லண்டனிலிருந்து 100 மைல்களுக்கு அப்பாலுள்ள பர்மிங்ஹாம் நகரில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் 19 பேர் கொல்லப்பட்டனர். 179 பேர் காயமுற்றனர். 1982ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஹைட் பார்க், ரீஜென்ற் பார்க் ஆகியவற்றில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களில் 50 குடிமக்கள் காயமுற்றனர்.

1983ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17ஆம் திகதி, அதாவது கிறிஸ்மஸ் தினத்திற்கு ஒரு வாரம் முன்னதாக ஹரோட்ஸ் விற்பனைத் தொகுதிக்கு முன்பாக ஐரிஷ் குடியரசுப் படையினர் கார்க்குண்டு தாக்குதலை நடத்தினர். இதில் 6 பேர் கொல்லப்பட்டனர். 140க்கு மேற்பட்டோர் காயமுற்றனர். 1984ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் அப்போது ஆட்சியிலிருந்த கன்ஸர்வேட்டிவ் கட்சியின் வருடாந்த மாநாட்டில் நடத்தப்பட்ட தாக்குதலில் ஐவர் கொல்லப்பட்டனர். பலர் காயமுற்றனர். இதற்கு அடுத்ததாக ஸ்ரூப்ஷயாரிலுள்ள இராணுவ வீரர்களின் விடுதி மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் எவரும் காயமடையவில்லை. 1989ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் றோயல் கடற்படை வீரர்களின் இசைப் பாடசாலை மீது இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் 11 பேர் கொல்லப்பட்டனர். 34 பேர் காயமடைந்தனர். 1991ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் டவுனிங் வீதியிலுள்ள பிரிட்டிஷ் பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தின் மீது உள்ளூரில் தயாரிக்கப்பட்ட மூன்று மோட்டார் ஏவுகணைகள் வீசப்பட்டன. எவரும் காயமடையவில்லை. 1992ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி பிரிட்டனின் நிதி நிலையத்தின் மீது குண்டுகள் நிரப்பப்பட்ட வாகனமொன்றினை ஓட்டிச் சென்று நடத்தப்பட்ட தாக்குதலில் கோடிக்கணக்கான ஸ்டேர்லிங் பவுண் பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டன. கிட்டத்தட்ட 100 பேர் கொல்லப்பட்டனர். இரு வாரங்களுக்குப் பின்னர் அதே பகுதியில் மீண்டும் அவர்கள் குண்டுத் தாக்குதல் நடத்தினர். இதில் ஒருவர் கொல்லப்பட்டார். பலர் காயமுற்றதோடு பெரும் சேதங்களும் ஏற்படுத்தப்பட்டன. 1993ஆம் ஆண்டு வடக்கு லண்டனிலுள்ள வாரிங்டனில் ஐரிஷ் குடியரசு படையினர் நடத்திய குண்டுத் தாக்குதலில் இரு பிள்ளைகள் கொல்லப்பட்டனர். பிஷப்கேட் என்ற இடத்தில் அதே வருடம் நடத்தப்பட்ட மற்றொரு தாக்குதலில் இன்னுமொருவர் கொல்லப்பட்டார். 1996ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் லண்டனின் பொருளாதார கேந்திர நிலையின் மீது மூன்றாவது பாரிய குண்டுத் தாக்குதல் ஒன்றை நடத்தியதன் மூலம் 17 மாத கால யுத்த நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தனர். இத் தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டனர். அதே மாதம் லண்டனில் டொக்லான்ட் பகுதியில் நடத்தப்பட்ட பாரிய குண்டு வெடிப்பில் பலர் கொல்லப்பட்டனர். சில நாட்கள் கடந்த பின்னர் லண்டன் உயர்நீதிமன்றம் அமைந்திருந்த பிலீற் ஸ்ரீட் சந்தியில் இரட்டைத் தட்டு பஸ்ஸொன்றின் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் குண்டுதாரி உயிரிழந்தார். 12 இற்கும் மேற்பட்ட பயணிகள் காயமுற்றனர். 1996ஆம் ஆண்டு ஜூன் மாதம் இங்கிலாந்துக்கு வடக்கேயுள்ள மன்செஸ்டரிலுள்ள மத்திய விற்பனை நிலையப் பகுதியில் பாரிய ட்ரக்கொன்றில் குண்டுகளைப் பொருத்தி தாக்குதல் நடத்தினர். முழுச் சந்தைப் பகுதியுமே சேதமுற்றது. 300க்கு மேற்பட்டோர் காயமுற்றனர். பிரிட்டிஷ் பாதுகாப்பு முகவர் நிலையமான எம்.16இன் தலைமையகத்தின் மீது 2001ஆம் ஆண்டு மார்ச் மாதம் ரொக்கட் ஏவுகணைத் தாக்குதல் நடத்தினர். இத் தலைமையகம் மத்திய லண்டனிலிருப்பது குறிப்பிடத்தக்கது. 2005ஆம் ஆண்டு ஜூலை மாதம் லண்டனிலுள்ள பி.பி.சி. தலைமையகத்திற்கு வெளியே கார்க் குண்டுத் தாக்குதலையும் நடத்தினர்.

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

"கல்யாணத்திற்கு இடம் பார்க்கப் போகிறோம். சகுனமே சரியாயில்லையே" என்றார் கோபி.

"எனக்கு இதிலெல்லாம் நம்பிக்கையில்லே. இந்தக் கல்யாணத்துல கடவுளுக்கு இஷ்டமில்லேன்னாதான் நடக்காது. மத்தப்படி, இது மாதிரி விஷயங்களுன்னு நாம முக்கியத்துவம் கொடுக்கத்



தேவையில்லே," என்றேன் நான்.

கோபி, மௌனமாகக் காலை ஓட்டிக் கொண்டு வந்தார். இருபுறமும் அறுவடை முடிந்த நிலையில் வயல் வெளிகள், நடுவிலே காயப் போட்ட கோவணம் போல், ரோடு நீளமாகப் போய்க் கொண்டிருந்தது.

திடீரென்று வயல் வெளியில் மேய்ந்து கொண்டிருந்த மாடுகளில் ஒன்று, வாலை நிமிர்த்தி சிலிர்த்துக் கொண்டு பாதையின் குறுக்கே ஓடிவந்தது.

அதன் மீது கார் மோதாமலிருக்க கோபி பிரேக்கின் பெடலை அமுக்க, எதிர்பாராமல் வண்டி நிலைகுலைந்து பாதையை விட்டு வயக்காட்டில் இறங்கி ஒரு குலுக்கலோடு நின்றது. எனக்கும் கோபிக்கும் உச்சந்தலையிலும், முன் நெற்றியிலும் லேசான சிராய்ப்புக்கள்.

"சகுனம் சரியில்லே... வாங்க, வாலி... ஒழுங்கா, நாம மெட்றாஸுக்கே திரும்பிடலாம்" என்றார் கோபி.

வயற்காட்டில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் துணையோடு, எங்கள் கார், பள்ளத்திலிருந்து பாதைக்குக் கொண்டு வரப்பட்டது.

"இப்போதைக்கு உங்க கல்யாணத்தைத் தள்ளிப் போட்டுடுங்க. ஒண்ணு ஒண்ணா தடங்கல் வந்திக்கிட்டேயிருக்கு" என்றார் கோபி. நான் அதற்கு உடன்படவில்லை.

"கோபி! எண்ணித் துணிஞ்சாச்சு... துணிஞ்சப்புறம் எண்றதே இழுக்கு. கல்யாணம் ஏப்ரல் ஏழாந்தேதி, திருச்சானூர் கோயில் சத்திரத்துல நடந்தே திருப்பதி போயிடுவேன்" என்று சொன்னதும் கோபி சிரித்து விட்டுப் பேசினார்:

"ஏப்ரல் ஏழாந்தேதி சத்திரம் கிடைக்கல்லேன்னா...?"

"அப்ப, இந்தக் கல்யாணத்தத் தள்ளிப்போடக் கடவுள் விரும்புறார்னு நெனப்பேன்."

எனது உறுதியைப் பாராட்டி கேபி, திருப்பதியை நோக்கிக் காரைச் செலுத்தினார்.

கோபி, சொன்னது ஒரு விஷயத்தில் உண்மைதான். கீழ்த்திருப்பதி, திருச்சானூர்க் கோயில் கல்யாண மண்டபம் அவ்வளவு சுலபமாகக் கிடைக்கக் கூடிய இடமல்ல ஏனெனில் ஏகப்பட்ட முகூர்த்தங்களுக்கான மாதம் அது. மூன்று மாதங்களுக்கு முன்னதாகவே பலர் ரிசர்வேஷன் செய்திருக்க நிறைய வாய்ப்பு உண்டு.

திருப்பதி தேவஸ்தான பேஷ்கார் கோபிக்கு மிக நெருங்கிய நண்பர் கீழ்த்திருப்பதியில் குடியிருந்த அவர் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்து விவரத்தை சொன்னோம்.

'ஏப்ரல் ஏழுக்கு இன்னும் ஒரு வாரமே இருக்கிறது... இப்போது கேட்டால் எப்படி? கண்டிப்பாக கல்யாண மண்டபம் ஏற்கனவே யாராவது பதிவு செய்யப்பட்டதாக இருக்கும்..." என்று ஆங்கிலத்தில் சொன்னார் கோயில் பேஷ்கார.

"டெலிபோன் செஞ்சு கேட்டுப் பாருங்களேன்" என்று பேஷ்காரிடம் என் பொருட்டு வேண்டினார் கோபி.

திருச்சானூர் கோயில் நிர்வாக அதிகாரியோடு ஃபோனில் பேசிவிட்டு பேஷ்கார் சொன்னார்:

"எல்லா மகூர்த்த நாட்களும் இன்னும் மூன்று மாதத்திற்கு 'புக்' ஆகிவிட்டது.... It is god`s will... ஏப்ரல் ஏழாந்தேதி காலியாயிருக்கு...."

(தொடரும்.......)

இதய வெளி

---


# உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அநுபவக் கட்டுரைத் தொடர்....

சுற்றிப்பார்த்து ஆர்வத்தோடு கேள்விகள் கேட்பது போலக் கேட்டு பல தகவலையும் தெரிந்து கொண்டார்.

பிறகு தன்னுடைய தாயகமான ஜெர்மனிக்குச் சென்று அதே முறைகளைக் கையாண்டு, தொழிலை விரிவுபடுத்தி, மிகப் பெரிய தொழில் சாம்ராஜ்யம் ஒன்றினை ஜெர்மனியில் உருவாக்கினார்.

உலகத்தின் தொழில் வரலாற்றைப் படித்தால் புதிய தொழில் நுணுக்கங்கள் தோன்றியவுடனேயே அதை ரகசியமாகத் தெரிந்து கொண்டு பயன்படுத்துவதற்கு மற்றவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் பற்றிய சுவையான தகவல்களைப் பார்க்க முடியும். ரப்பர் டயர்கள் நீடித்து உழைப்பதற்காக 'வல்கனைஸ்' செய்யும் முறையை கார்லஸ் குட்இயர் என்பவர் கண்டுபிடித்தார். அந்தக் கண்டுபிடிப்பு மகத்தான வெற்றி பெற்றதால் அவருக்கு ஏராளமாகப் பணம் சேர்ந்தது. விரைவில் அவருடைய தொழில் ரகசியத்தை மற்றவர்கள் திருடிப் பயன்படுத்தி அவருக்குப் போட்டியாளர் ஆனார்கள். பெட்ரோலை உபயோகப்படுத்துவதற்குப் பதிலாக குரூட் எண்ணெய்யை உபயோகிக்கின்ற முறையை ருடால்ஃப் டீசல் என்பவர் கண்டுபிடித்தார். அதற்கான இயந்திரத்தை அவர்தான் உருவாக்கினார். அந்த இயந்திரங்கள் டீசல் எஞ்சின்கள் என்றழைக்கப்பட்டன. விரைவில் மற்றவர்களும் அதே முறைகளைப் பின்பற்றி வெற்றி கண்டார்கள்.

இந்தக்காலத்தில் ஒரு புதிய பொருளை அல்லது இயந்திரத்தைக் கண்டுபிடிக்கத் தொடங்கும்போதே அதன் விவரங்களைச் சொல்லி அதைக் கண்டுபிடித்து பயன்படுத்துகின்ற உரிமை தங்களுக்கு மட்டுமே உண்டு எனப் பதிவு செய்து கொள்ளுகின்ற 'பேடண்ட் உரிமை' நடைமுறைக்கு வந்தது. ஆனால் பேடண்ட் உரிமை வழங்கும் அரசு அலுவலகங்களில் வேலை பார்க்கிறவர்கள் பணத்திற்கு ஆசைப்பட்டு பேடண்ட் உரிமை வழங்குவதற்கு முன்னதாகவே இந்த ரகசியங்களை மற்றவர்களுக்குக் கொடுத்து விடுவதுண்டு.




### அவர் செய்தது

அமெரிக்காவிலுள்ள டெக்ஸாஸில் நடைபெற்ற ஒரு சம்பவம் சுவையானது. டூ பாண்ட் என்பவர் அங்கே ஒரு புதிய தொழிற்சாலையை நிறுவினார். அவர் கண்டு பிடித்துப் பயன்படுத்திய கருவிகளுக்கு அவர் 'பேடண்ட் உரிமை' பெறவில்லை. பதிவு செய்தால் பேடண்ட் அலுவலகத்தின் மூலம் ரகசியம் மற்றவர்களுக்குக் கிடைத்துவிடும் என்று அவர் எண்ணியதே காரணம்.

தொழிற்சாலை வேகமாக உருவாகிக் கொண்டிருந்தது. மேலே கூரை போடவில்லை. அவருடைய தொழில் ரகசியத்தைத் தெரிந்துகொள்ள விரும்பிய போட்டியாளர்கள் விமானத்தில் மிக உயரத்தில் பறந்து சக்தி வாய்ந்த கேமராக்கள் மூலம் தொழிற்சாலை அமைப்பையும் கருவிகளையும் புகைப்படம் எடுத்தார்கள். இந்த முயற்சியில் ஈடுபட்டவர்கள் யார் எனக் கண்டு பிடிக்க முடியாமல் போனாலும் சம்பந்தப்பட்ட புகைப்பட நிபுணர்கள் யார் என்று அறிந்துகொள்ள முடிந்தது. புகைப்பட நிபுணர்கள் மீது டூ பாண்ட் வழக்குப் போட்டார். புகைப்படக்காரர்கள், வான மண்டலம் தனிப்பட்ட எவருக்கும் சொந்தமில்லை என்றும், ஆகவே விமானத்தில் பறந்து புகைப்படம் எடுக்கும் தங்கள் உரிமையினை எவரும் கட்டுப்படுத்த முடியாது.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

---

ஏதென்ஸ், ஆக.15 - சைப்ரஸ் நாட்டு விமானம் பயணிகள் உட்பட 121 பேருடன் தரையில் மோதி நொறுங்கியது. விமானிகளுக்கும் கடத்தல் காரர்களுக்கும் இடையே நடந்த கைகலப்பால் அது நிலை தடுமாறி தரையில் மோதியதா என்பது தெரியவில்லை.

சைப்பிரஸ் நாட்டை சேர்ந்த பயணிகள் விமானம் ஒன்று அங்குள்ள லர்சனா விமான தரையில் மோதி நொறுங்கியது. உடனடியாக மீட்புக் குழுவினர் அங்கு விரைந்தனர். அதில் இருந்த பயணிகள் உள்பட 121 பேரும் பலியாகி இருக்கலாம் என்று தெரிகிறது.

விமான விபத்துக் பல்வேறு காரணங்கள் ஊகிக்கப்படுகின்றன. விமானத்தில் கடத்தல் காரர்கள் ஏறி விமானத்தை தாங்கள் கூறும் இடத்துக்கு

# தீவிரவாதிகள் காரணமாகும் விமான விபத்துக்கள்



விபத்துக்குள்ளாகிய விமானத்தின் சிதைவுகள்

நிலையத்தில் இருந்து செக் நாட்டின் தலைநகர் பிராக் நகருக்கு சென்று கொண்டு இருந்தது. அதில் 115 பயணிகளும் 6 விமான ஊழியர்களும் இருந்தனர்.

அது ஹேலியாஸ் என்ற தனியார் நிறுவனத்துக்கு சொந்தமான போயிங் 737 ரக விமானமாகும்.

அந்த விமானம் கிரேக்க நாட்டு தலைநகர் ஏதென்ஸில் இறங்கவேண்டும். விமானம் ஏதென்ஸ் நகரை நெருங்கிக் கொண்டு இருந்த போது விமானத்தில் பிரச்சினை ஏற்பட்டு உள்ளதாக கூறி ஏதென்ஸ் விமான நிலைய கட்டுப்பாட்டுக் கோபுரத்துக்கு விமானி அவசரத் தகவல் கொடுத்தார்.

அதைத் தொடர்ந்து எப் 16 ரகத்தைச் சேர்ந்த 2 போர் விமானங்கள் மின்னலென கிளம்பி அந்த பயணிகள் விமானத்தின் இருபுறமும் பறந்து சென்றன. அப்போது விமானியின் அறையில் வழக்கத்துக்கு மாறான சூழ்நிலை இருப்பதை எப் 16 ரக விமானத்தின் விமானிகள் பார்த்தனர். காபின் அறையில் விமானிகள் காணப்படவில்லை என்று கூறப்படுகிறது.

அதன் பிறகு அந்த பயணிகள் விமானம் கீழ் நோக்கி பாய்ந்து ஏதென்ஸ் நகருக்கு 40 கிலோ மீட்டர் தொலையில் ஓட்டும்படி விமானிகளுடன் தகராறு செய்து இருக்கலாம். அதனால் மோதி இருக்கலாம் என்று கிரேக்க இராணுவ அதிகாரி ஒருவர் கூறினார்.

விமானி அறையில் அழுத்தம் திடீரென குறைந்ததால் விபத்து ஏற்பட்டு இருக்க வேண்டும் என்று கிரேக்க பொலிசார் கூறுகிறார்கள். விமானத்தின் கறுப்பு பெட்டி கிடைத்தால்தான் விபத்துக்கான உண்மையான காரணம் தெரியவரும்.

அந்த கறுப்பு பெட்டியில் உள்ள ஒலிநாடாவில் தான் விமானி அறையில் நடந்த உரையாடல்கள் விமானிக்கும், கட்டுப்பாடு கோபுர அதிகாரிகளுக்கும் இடையே நடந்த உரையாடல்கள் பதிவாகி இருக்கும்.

விமானம் தரையில் மோதியதும் தீப்பிடித்து எரிந்தது. அதில் இருந்த 121 பேரும் பலியானதாக உறுதி செய்யப்பட்டது. மனித உடல்களும் விமான பாகங்களும் சில கிலோமீட்டர் தூரத்துக்கு சிதறி கிடந்தன. விமானத்தின் சிதறிய பகுதிகள் எரிந்து கொண்டு இருந்ததை ஹெலிகப்டர்கள் தண்ணீர் பீய்ச்சி அடித்து அணைத்தன.

உடல்களை மீட்கும் பணி நடந்து வருகிறது.

---

# சம்பா நடனம்



ஜப்பானில் புகழ்பெற்றவொரு நாட்டிய வடிவமான 'சம்பா' நாட்டிய நிகழ்வொன்று அண்மையில் டோக்கியோ நகரில் நடந்தேறியது.


வருடந் தோறும் ஒரு முறை நிகழ்த்தப்படும் 'அசகுச சம்பா நாட்டிய' நிகழ்வில் அழகிய யுவதிகள் தங்களது பங்களிப்புகளை வழங்கியதையே இப் படம் காட்டுகிறது.

இந்த நிகழ்வில் ஜப்பான் மற்றும் பிரஸில் நாடுகளைச் சேர்ந்த 3500 கலைஞர்கள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வினை 5 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் கண்டு களித்துள்ளனர்.

-பாரூக்

# ஓராண்டு நீங்காத நினைவுகளில்....

தாயின் மடியில்
22
09
1972



தாயக மண்ணில்
21
07
2004

## வேலாயுதம் ரவீந்திரன்

### தோழர் கமலன்

தமிழ் மக்களின் கௌரவமான நிரந்தரத் தீர்வொன்றுக்காக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியில் இணைந்து பணியாற்றிய போராளியும், மக்கள் சேவகனுமான வேலாயுதம் ரவீந்திரன், தமிழ் மக்கள் மீது கொண்ட பற்றுக் காரணமாக தனது இறுதி மூச்சுவரை தமிழ் மக்களுக்கு சேவையாற்றியவர். அது மட்டுமின்றி, தனது குடும்ப அங்கத்தவர்களையும் எம் மக்களுக்காக சேவை செய்யத் தூண்டிய தேச பக்தன். தமிழ் மக்களுக்கு நிரந்தரத் தீர்வொன்று கிடைக்க வேண்டுமென்பதில் முன்னோடியாகச் செயற்பட்டவர். இத்தகைய மக்கள் தொண்டன், தான் நேசித்த மக்கள் முன்னிலையிலேயே புலிகளால் சுட்டுச் சரிக்கப்பட்டார். இந் நிகழ்வானது இன்றும் ஆலயடிவேம்பு மக்கள் மனதில் ஆறாத வடுவாக நிலைத்துள்ளது. புலிகளின் பாசிச வெறியினால் எம் உடல்களை மட்டுமே அழிக்க முடியும். ஆனால் மக்கள் நலன் கொண்ட எம் தோழர்களின் கருத்துக்களையும், கனவுகளையும் என்றும் அழிக்க முடியாது. தோழனே! நீ சென்ற இலட்சியப் பாதையில் எம் பணி என்றும் முன்னெடுத்துச் செல்லப்படும்.

**ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)**

# விஜயகாந்துக்கு ஒரு மடல்

என்றும் அன்புடன் நடிகர் விஜயகாந்திற்கு!

உங்கள் ரசிகன் மணிமாறன் எழுதிக் கொள்வது,

பிரபாகரனின் வெற்றிநாள் வரை நீங்கள் பிறந்த நாள் கொண்டாட மாட்டீர்கள் எனும் உங்கள் கூற்றை ஏறக்குறைய எல்லாத் தமிழ்ப் பத்திரிகைகளிலும் வாசித்தேன். புல்லரித்துப் போய்விட்டேன். நான் உங்கள் தீவிர ரசிகன். முன்னர் பல தடவைகளும் உங்களுக்கு வாழ்த்து மடல்களும், கடிதங்களும் அனுப்பியுள்ளேன். நேரம் கிடைத்தால் ஒரு தடவை மட்டும் அதனை எடுத்துப் பாருங்கள். அவற்றில் எல்லாம் 'என் உயிரிலும் மேலான' என விளித்தே உங்களை அழைத்திருந்தேன். ஆனால் 14.08.2005 அன்று சேலத்தில் நிருபர்கள் மத்தியில் உரையாற்றும் போது நீங்கள் கூறிய மேற்சொன்ன கூற்றிற்காக உங்களுக்காக உயிரை விடவேண்டாம் என எண்ணி, அன்பினை மட்டுமே செலுத்த முடிவு செய்துள்ளேன்.

ஐயா விஜயகாந்த் அவர்களே! திரையில் நீங்கள் அட்டூழியங்களை எதிர்த்துக் கேட்கும் ஓர் கதாநாயகன். எட்டுப்பட்டி கிராமத்துக்கும் நீதி வழங்கி வழி நடத்தும் ஓர் தலைவன். நாட்டின் பாதுகாப்புக்காக தேசபக்தியுடன் தீவிரவாதிகளை ஓட ஓட விரட்டும் ஓர் ஆக்ஷன் ஹீரோ. எல்லாம் திரையில் 3 மணித்தியாலங்கள். பார்க்கையில் பொழுது போக்கிற்காக எம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளும் மாயை என்பதைவிட, உங்கள் வாயிலிருந்து வீழ்ந்த பொன்மொழி மிகப்பெரிய மாயையாகிப் போய்விட்டதை அறிவீர்களா?

ஒரு காலம் இருந்தது, தென்னை மரத்தில் தேள் கொட்டினால் பனை மரத்தில் நெறி கட்டுமாம். ஈழத்தில் தமிழனுக்கு ஒன்று என்றால் தமிழகமே கொதித்துப் போகும். அப்படிப்பட்ட தொப்புள் கொடி உறவு அது. திரைப்படத்தில் நாட்டுத் தலைவர்களையும் தேச பக்தர்களையும் கொல்ல வருபவர்களான தீவிரவாதிகளை நீங்கள் உங்கள் உயிரைப் பணயம் வைத்து அழித்தொழிப்பீர்கள். ஆனால் நிஜத்தில் 100 கோடி மக்களை வழிநடத்திய ஓர் பிரதமரை - தனது தாய்த் தேசமான பாரதத்தை உலகின் வல்லரசாக்க வேண்டும் என கனவு கண்டு அயராது பாடுபட்ட அந்த இளந்தலைவன் ராஜீவ் காந்தியை - கோரமாகக் கொலை செய்தவரை, அவர் வெற்றி பெறும்வரை நீங்கள் பிறந்த நாள் கொண்டாட மாட்டீர்களாம். உண்மையில் நீங்கள் அரசியல்வாதியாகி விட்டீர்கள். தாராளமாகக் கட்சி நடத்தலாம். ஏனெனில் சொல் ஒன்றும் செயல் ஒன்றுமாக இருப்பதுதானே சாக்கடை அரசியலுக்கு அழகு.

விடயத்திற்கு வருகின்றேன். பயங்கரவாதத்தைக் காரணம் காட்டி புலிகளைத் தடை செய்த பின்னர், ஈழத் தமிழர் வேறு, புலிகள் வேறு என வக்காலத்து வாங்கிய தமிழக அரசியல் கட்சிகள் பல பாசாங்கு காட்டின. நீங்களோ ஒருபடி மேலே போய் தமிழகத்தில் புலிகள் தடை செய்யப்பட்ட இயக்கம், எனவே அதைப்பற்றிக் கதைக்காமல் பிரபாகரனை மட்டுமே கதையுங்கள் என்கின்றீர்கள். நல்ல விளக்கம்தான். அப்போ நீங்களும் பிரபாகரன் ஒரு தனி மனிதன் என ஏற்றுக்கொண்டு விட்டீர்களா?

ஐயா விஜயகாந்த் அவர்களே! புலிகள் இயக்கம் நீங்கள் சொல்வது போல தமிழகத்தில் மட்டும் தடை செய்யப்பட்ட ஓர் இயக்கம் அல்ல. இந்திய மத்திய அரசினால் தடைசெய்யப்பட்டு விட்டது மட்டுமல்லாமல், இந்திய அரசினால் தேடப்படும் குற்றவாளி தான் பிரபாகரன். உங்களுக்கு அரசியலில் நடிக்கத் தெரியாது என்றும் கூறியுள்ளீர்கள். அப்படியாயின் பிரபாகரனிடமே நேர்மையாக நேரடியாகவே வேண்டுகோள் விடுக்க முடியுமா உங்களால்? அதாவது பிரபாகரனை, நீங்கள் நேசிக்கும் பாரத அரசிடம் சரணடைந்து விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கித் தன்னை ஓர் நிரபராதி என நிரூபிக்கும்படி? முதலில் அதைச் செய்யுங்கள்.



ஈழத் தமிழர் போராட்ட வரலாற்றில் (உங்களுக்கு அதைப்பற்றித் தெரிந்திருந்தால்) ஒன்றை மட்டும் கேட்க விரும்புகின்றேன். அல்பிரட் துரையப்பா முதல் லக்ஷ்மன் கதிர்காமர் வரை சிங்களப் படையினரால் கொல்லப்பட்ட ஓர் ஈழத் தமிழ்த் தலைவரை உங்களால் காட்ட முடியுமா? ஒருவருமில்லை ஐயா, ஒருவருமில்லை. அனைவரும் பிரபாகரனினால் கொல்லப்பட்டவர்கள்தான். அனைவரின் பெயரையும் எழுத முற்பட்டால் எனக்கு இந்தப் பந்தி போதாது.

தமிழ்த் தலைவர்களின் கொலை என்பது பிரபாகரனின் நடவடிக்கைகளில் ஓர் பகுதி. ஈழத் தமிழர் போராட்டம் திசை மாறியது பற்றியும், ஈழத் தமிழருக்கு பிரபாகரன் செய்த, செய்து கொண்டிருக்கின்ற சேவைகள் பற்றியும் எழுத எனக்கு ஒரு நீம் பேப்பரும் போதிய காலமும் வேண்டும்.

இறுதியாக, உங்களால் உண்மையான அரசியல்வாதியாக முடியாவிட்டால், முதலில் ஓர் உண்மையான மனிதனாக எமது ஈழத் தமிழர் போராட்டத்தின் யதார்த்தத்தினை உணர்ந்து கொள்ளுங்கள். நீங்கள் போலி விளம்பரத்திற்காகப் பயன்படுத்தப்படும் பிரபாகரனினால் ஈழத் தமிழர் போராட்டம் எவ்வாறு திசை மாறியது என்பதை நன்கு படியுங்கள். அதன் பின் உங்கள் பிறந்த நாளைக் கொண்டாடலாமா இல்லையா என்பதை நீங்களே உணர்வீர்கள்.

*இப்படிக்கு*
*உங்களை திரையில் காணும் ரசிகனாக மட்டும்*
*மணிமாறன்.*


தினமுரசின் அபிமான வாசகர்களே! உங்களுக்காக சனிப் பெயர்ச்சியின் பின்னரான பலாபலன்களை விரிவாக கணித்துத் தந்துள்ளார் உலக மாந்திரீக சித்தர் பேராசிரியர் டாக்டர் பி.கே.சாமி ஐயா அவர்கள். அறிந்து அனுகூலமடையுங்கள். இதோ அவரது ஆசியும், அருளும்.

# சனிப் பெயர்ச்சி பலன்கள்

**இந்தப் பகுதியில் சனிப் பெயர்ச்சியையும் குரு மாற்றத்தையும் கலந்து எழுதியுள்ளேன். பொதுவாக ராசி வாரியாக கொடுத்து இருந்தாலும் தீய பலன் உள்ளவர்கள் பயப்பட அவசியம் இல்லை. காரணம் உங்கள் குடும்பத்தைச் சேர்ந்த ராசி நேயருக்கு இந்த சனிப் பெயர்ச்சி நன்மையாக இருந்தால், நீங்களும் தீய பலனில் இருந்து விலக வாய்ப்பு இருக்கின்றது. நல்ல திசைகளும் துணைக் கிரகங்களின் பார்வைகளும் நன்மையாக இருந்தால் தீய பலன் வருவதற்கு வாய்ப்பு இல்லை.**

**ஓம் சத் மத் யத் மத்**

## துலாம்



**துலா ராசி - 10இல் சனி**

24.06.2005 முதல் ராசிமாறி உங்கள் ராசிக்கும் பத்தாமிடத்திலும் சஞ்சரிக்கிறார். பத்தாமிடம் சனியின் சஞ்சாரத்திற்கு உகந்த இடமல்ல.

என்ன செய்ய முடியும். அவரது சஞ்சாரத்தை மாற்ற நம்மால் முடியுமா என்ன? அதெல்லாம் முடியாது. அவரது பிடியிலிருந்து தப்ப ஏதாவது வழி வகை உண்டா என்று பார்ப்போம்.

எந்த வேலையுமே எடுத்தோம் முடித்தோம் என்றிருக்காது. அனுமாருக்கு வால் நீண்டது போல நீண்டு கொண்டே போகும். நீங்களும் சோர்ந்து போவீர்கள். சிலருக்குப் பதவி இழப்பு ஏற்படலாம். கிடைத்த வேலையை விட்டு விடவும் நேரிடலாம்.

பத்தாமிடம் காரிய ஸ்தானமாதலால் காரியக் கஷ்டங்கள் இருக்கவே செய்யும். உத்தியோகஸ்தர்களுக்கு வேலைப்பளு உயரும். உங்களின் கவனம் திசை திரும்பும். வேலையில் ஆர்வமும் கவனமும் செலுத்த முடியாமல் போகும். யாராவது ஆசைகாட்டித் திசை திருப்பி விடுவார்கள். உழைக்க வேண்டிய காலத்தில் உழைக்காமல் கடைசி நேரத்தில் அரக்கப் பறக்கச் செய்வதும் அதனால் தடை, தாமதம் ஏற்படுவதும் வாங்கிக் கட்டிக் கொள்வதும் சகஜமாகிவிடும்.

பன்னிரண்டாமிடத்தைப் பார்ப்பதால் தேவையற்ற விரயச் செலவுகள் ஏற்படலாம். வேளா வேளைக்குச் சரியாகச் சாப்பிடவோ தூங்கவோ முடியாத நிலை ஏற்படலாம். மூத்த சகோதரர்களின் பேச்சினால் சில வம்பு வழக்குகள் உருவாகலாம்.

இந்தக் காலகட்டத்தில் சனி பகவானுக்குப் பூஜை செய்து வருவது நல்லது. வாரம் தோறும் சனிக்கிழமைகளில் சனீஸ்வரனுக்கு எள், எண்ணெய் தீபம் போட்டு அர்ச்சனை செய்து வரவும். நவக்கிரக ஸ்தோத்திரங்கள் பாராயணம் செய்யவும். முடிந்தால் ஏழைகளுக்கு வஸ்திர தானம் செய்யவும். இவ்வாறு செய்து வந்தால் கொஞ்சம் பலன் கிடைக்கும். அவருடைய கோபம் கொஞ்சம் தணியும்.

அடுத்து வியாழனைப் பற்றிப் பார்ப்போம். வியாழன் வருட ஆரம்பம் முதல் 19.09.2005 வரை உங்கள் ராசிக்கு பன்னிரண்டாமிடத்தில் சஞ்சரிக்கிறார். இது குருவின் சஞ்சாரத்திற்கு உகந்த இடமல்ல.

மொத்தத்தில் குருவைப் பொறுத்த வரை இவ்வாண்டு முழுவதுமே உங்களுக்குச் சாதகமாகச் செயற்படப் போவதில்லை என்று தெரிகிறது. அதற்காகக் கலக்கமுறத் தேவையில்லை.

என்றாலும் வியாழக்கிழமை தோறும் குரு பகவானை வழிபட்டு ஸ்தோத்திரங்கள் சொல்லுங்கள். அவருடைய அருளைப் பெறலாம்.

எப்போதுமே ஒரு கை அடித்தால் மறு கை அணைக்கும் என்பது உங்களுக்குத் தெரியாதா?

எனவே சனி, குருவை மட்டுமே நினைத்து பயந்து போகாதீர்கள்.

ராகு, கேதுக்கள் இருக்கிறார்கள். அவர்களும் கை விட்டால் மாதக் கிரகங்கள் துணை புரிவார்கள். அவர்கள் நிச்சயம் கைகொடுப்பார்கள். எனவே கவலையை விட்டுத் தள்ளுங்கள்.

இனி பலன்களைப் பார்ப்போம்.

தேவையில்லாத செலவினங்கள் அடிக்கடி ஏற்பட்டு கையிருப்பைக் கரைக்கும். எடுத்த காரியங்கள் உடனே முடியாமல் ரப்பர் போல் இழுபடும். அனாவசிய அலைச்சல், திரிச்சல்களைத் தவிர்க்க முடியாது. உடல் ஆரோக்கியத்திலும் குறைவு ஏற்படலாம். துயரம் தரும் செய்திகள் வந்து சேரலாம். குடும்பத்தினரை விட்டுப் பிரிந்து இருக்கும்படி நேரிடலாம்.

குரு நாலாமிடத்தைப் பார்ப்பதால் சுகக் குறைவு ஏற்படலாம். தாயாருடன் கருத்து வேறுபாடு உண்டாகலாம். அவர் வழி உறவினர்களின் ஆதரவு குறையலாம். தாய் வழிச் சொத்தில் வில்லங்கம், விவகாரம் ஏற்பட்டு அவற்றைச் சரிக்கட்ட கணிசமான பணத்தைச் செலவிடுவதோடு, அதிக அலைச்சல், திரிச்சல்களும் ஏற்படும். வாகனங்கள் விபத்தைத் தரலாம்.

பொதுவாக வாகன விபத்துக்களுக்கு அதிக சான்ஸ் உண்டு என்பதை உணர்ந்து நடந்து கொள்வது நல்லது. சொந்த வாகனம்தானே என்று கன்னாபின்னாவென்று ஓட்டக் கூடாது. போக்குவரத்து விதிகளை மீறவே கூடாது. சிக்னல் கிடைப்பதற்கு முன் பாயக்கூடாது என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவும். நடந்து செல்பவர்கள் மரியாதையாக பிளாட் பாரங்களை உபயோகப்படுத்துவதே உகந்தது.

குரு ஆறாமிடத்தைப் பார்ப்பதால் உடல் ஆரோக்கியம் அடிக்கடி குறைவுபடும். மருத்துவச் சிகிச்சை செய்ய வேண்டிய சூழ்நிலை உண்டாகலாம். அநாவசியச் செலவுகளால் கடன்பட வேண்டிய நிலை வரலாம். எதிரிகள் பலம் பெற்று எதிர்க்கத் துணிவார்கள். சிவனே என்று வீடுதேடி வந்து எனக்கும் சோறுபோடு என்று கதவைத் தட்டும்.

குரு எட்டாமிடத்தைப் பார்ப்பதால் சிறு சிறு விபத்துக்கள் ஏற்படலாம். எதிர்பாராத நோய்களின் தாக்குதல் ஏற்பட்டு, பெட் ரெஸ்டில் இருக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்படலாம். தகப்பனாரின் தொழிலில் நஷ்டம் உண்டாகலாம்.

இத்தகைய பலன்களைக் கொடுத்து வந்து குரு பகவான் 19.09.2005 முதல் ராசிமாறி உங்களின் ஜென்ம ராசியிலேயே சஞ்சரிக்கவுள்ளார். இதுவும் குருவின் சஞ்சாரத்திற்கு உகந்த இடமல்ல.

செய்தொழில், வியாபாரம் அல்லது உத்தியோகம் காரணமாக குடும்பத்தை விட்டுச் சிலகாலம் பிரிந்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். உங்களின் கௌரவம், செல்வாக்கு, அந்தஸ்து முதலியவற்றிற்கு பங்கத்தை உண்டு பண்ணுவார் இந்தக் குரு பகவான். தேவையில்லாத விஷயங்களில் தலையிட வைத்து வம்பு வழக்குகளை ஏற்படுத்துவார். எனவே கால மறிந்து செயல்படுவது உங்கள் கையில் தான் இருக்கிறது.


குரு ஐந்தாமிடத்தைப் பார்ப்பதால் முன்னோர்கள் தேடிவைத்த பூர்வீகச் சொத்துக்களில் வில்லங்கம் ஏற்படலாம். ஸ்திரி புத்திரர்களின் உடல் நலம், படிப்பு, வேலை, தொழில், உத்தியோகம் முதலியவற்றில் சில பாதிப்புகளை ஏற்படுத்துவார்கள்.

ஏழாமிடத்தைப் பார்ப்பதால் கணவன் மனைவி உறவில் விரிசல் உண்டாகும். தாம்பத்திய சுகம் பெறுவதிலும் தடை ஏற்படக் கூடும். உப்புப் பெறாத விஷயங்களுக்குக் கூட சண்டை சச்சரவு தோன்றும். திருமண முயற்சிகளுக்கு இது உகந்த காலமல்ல.

ஒன்பதாமிடத்தைப் பார்ப்பதால் தாய் தந்தையரின் உடல் நலம் பாதிப்படையலாம். மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற வேண்டிய நிலை உருவாகலாம். கிடைக்க வேண்டிய பாக்கிகளுக்குச் சில தடைகள் உண்டாகும். பாக்கிகளை கடிந்து கேட்கப் போனால் வம்பு வழக்குகளே மிஞ்சும். முள்ளில் போட்ட துணியைப் பக்குவமாகத்தான் எடுக்க வேண்டும்.

*(அடுத்த வாரம் விருச்சிக ராசியைப் பற்றி பார்க்கலாம்...)*





தருவாயே என்று பணிந் தேத்திப் - பல
வாறா நினதுபுகழ் பாடி - வாய்
ஓயேனாவதுண ராயோ? - நின்
துண்மை தவறுவதோர் உலகோ?


- சுப்பிரமணிய பாரதியார்

# பொன்னுரங்கனும் மகன்களும்

பாப்பா முரசு சிறுகதை

பொன்னுரங்கன் ஏராளமான சொத்துக்களோடு வாழ்ந்து வந்தார். தனது காலத்திற்குப் பின்னர் தனது சொத்துக்களை தகுதியானவர் ஒருவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று முடிவு செய்தார்.

பொன்னுரங்கனுக்கு இரண்டு மகன்கள் இருந்தனர். இருவரும் வளர்ந்து வாலிப வயதை எட்டி



இருந்தனர். மூத்த மகனின் பெயர் நாராயணன். இளைய மகனின் பெயர் நரசிம்மன்.

தன்னுடைய இரண்டு மகன்களில் சொத்துக்களைப் பெற்றுக்கொள்ள யாருக்குத் தகுதி இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள ஆவல் அடைந்தார் பொன்னுரங்கன்.

உடனே அவர் தன்னுடைய இரண்டு மகன்களையும் அழைத்தார்.

"மகன்களே! இதுவரையிலும் நம்மிடம் இருந்து வந்த சொத்துக்களை எல்லாம் நான் நல்ல முறையிலே பாதுகாத்து வந்தேன். இனி மேல் அந்த சொத்துக்களை அடைய உங்களில் யாருக்குத் தகுதியிருக்கிறது என்பதை அறிந்தால்தான் மேற்கொண்டு நான் சொத்துக்களை ஒப்படைக்க முடியும். இல்லையேல் ஒரு போதும் நான் சொத்துக்களைக் கொடுக்க முடியாது. எனவே நீங்கள் ஏதாவது ஓர் சாதனையைச் செய்து காட்டுங்கள். நீங்கள் என்ன சாதனை செய்தீர்கள் என்பதை எனக்குத் தெரியப்படுத்துங்கள். யார் செய்த சாதனை எனக்குப் பிடிக்கின்றதோ நான் அவர்களிடமே சொத்தினை ஒப்படைத்து விடுவேன்!" என்று கூறினார்.

இதனைக் கேட்டதும் நாராயணனும், நரசிம்மனும் தன் தந்தையாரிடம் ஆசி பெற்றுக்கொண்டு வீட்டை விட்டு வெளியேறினார்கள்.

இருவரும் வெவ்வேறு பாதைகளில் பிரிந்து சென்றனர்.

பாதிதூரம் சென்ற பின்னர் மூத்தவனான நாராயணனுக்கு மனதில் ஓர் எண்ணம் தோன்றியது. உடனே அவன் தன் தம்பி நரசிம்மனைப் பின் தொடர்ந்தான்.

'நம் தம்பி நம்மைவிட மிகவும் அறிவாளியாக இருக்கின்றான். எனவே நாம் அவனைப் பின் தொடர்ந்து என்ன செய்கிறான் என்பதை அறிந்து கொண்ட பின்னர் தந்தையிடம் சென்று அவன் அந்தச் செயலை தெரிவிக்கும் முன்னரே நாம் சென்று அதனைச் செய்து முடித்து விட்டதாகத் தெரியப்படுத்த வேண்டும். அவனுக்குத் கிடைக்கவேண்டிய பாராட்டும் பரிசும் நமக்குக் கிடைத்துவிடும். நாம் சொத்தும் கூட நம் கைக்கு வந்து சேர்ந்துவிடும்!" என்று முடிவு செய்தான்.

உடனே தன் தம்பிக்குத் தெரியாமல் அவனைப் பின்தொடரத் தொடங்கினான்.

நரசிம்மன் தான் நடந்து செல்லும் பாதையில் ஒரு முதியவரைக் கண்டான்.

அந்த முதியவர் மிகவும் தள்ளாடிய நிலையில் பசியோடு வந்து கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் அவருக்கு மயக்கம் வரும் நிலை ஏற்பட்டது.

நரசிம்மன் அவரை தாங்கிப் பிடித்தான். உடனே அவர் மயக்கமான நிலையில் நரசிம்மன் கையில் சாய்ந்தார்.

நரசிம்மன் அருகில் இருந்த உணவு விடுதிக்கு அவரை கைத்தாங்கலாக அழைத்துச் சென்றான். உடனே அவர் நாற்காலியில் அமர்ந்து கொண்டார்.

நரசிம்மன் தன் சட்டைப் பையில் இருந்து பணத்தை எடுத்துக் கொடுத்து உணவுகளை வரவழைத்தான்.

அந்த முதியவர் அந்த உணவுகளை எல்லாம் சாப்பிட்டு முடித்தார். பின்னர் நரசிம்மன் அவர் கையில் சிறிது பணத்தையும் கொடுத்து அவர் இருப்பிடத்திற்கு அனுப்பி வைத்தான். இதனை தன் தந்தையிடம் தெரிவிக்க வேண்டும் என்று நினைத்தான்.

உடனே வீட்டை நோக்கிப் புறப்பட்டான் நரசிம்மன்.

இக்காட்சியினை எல்லாம் மறைந்திருந்தபடி கவனித்துக் கொண்டிருந்தி நாராயணனோ மின்னல் வேகத்தில் வீட்டையடைந்து தன்னுடைய தந்தையாரை சந்தித்தான்.

"தந்தையே! நான் ஒரு நல்ல காரியத்தைச் செய்து வந்துள்ளேன். மிகவும் பசியோடு இருந்த முதியவர் ஒருவருக்கு உணவளித்தேன். அவரின் மயக்கத்தையும், பசியையும் போக்கியதோடு மட்டுமில்லாமல் அவரின் கைச்செலவுக்கு சிறிது பணமும் கொடுத்து அனுப்பினேன்" என்றான் நாராயணன்.

"மகனே! வயதான முதியவர்க்கு உதவி செய்வது பெரிய தொண்டாகும். நீ செய்த தொண்டையே நான் உயர்ந்ததாகக் கருதுகி ன்றேன்" என்றார் பொன்னுரங்கன்.

அதனைக் கேட்ட நாராயணன் மகிழ்ச்சியடைந்தான். 'நம் தந்தை நமக்கேதான் சொத்தை தரப்போகிறார்' என்று உள்ளுக்குள் மகிழ்ச்சியடைந்தான்.

அந்த நேரத்தில் அங்கே நரசிம்மன் வந்தான்.

"தந்தையே இன்று நான் ஒரு சிறந்த தொண்டினைச் செய்து வந்தேன். அது என்ன தொண்டு என்று கேட்டால் நீங்களே ஆச்சரியப்படுவீர்கள்" என்றான்.

"அப்படியா! கேட்பதற்கே மகிழ்ச்சியாக இருக்கின்றது. நீ என்ன காரியம் செய்து வந்தாய்!" என்று கேட்டார் தந்தை.

அவன் செய்ததையெல்லாம் சொன்னான்.

இதனைக் கேட்டதும் பொன்னுரங்கன் வியப்படைந்தார். இதே மாதிரியான நற்செயலைத்தான் உன் அண்ணனும் செய்த தாகச் சொன்னான். இதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் இருவரில் யாருடைய செயல் உயர்ந்தது என்று முடிவெ டுக்க முடியாத நிலையில் இருக்கிறேன். இனி அடுத்த முறை யார் செய்து வந்த செயல் உயர்ந்தது என்று பரிசீலனை செய்து அவர்களிடம் நான் சொத்துக்களை ஒப்படைக்கிறேன்" என்றார்.

உடனே நாராயணனும் நரசிம்மனும் வீட்டை விட்டுக் கிளம்பினார்கள்.

நரசிம்மன் ஓர் மாந்தோப்பின் வழியாகச் சென்று கொண்டிருந்தான்..

அந்த மாந்தோப்பின் வேலியோரத்தில் கிளி யானது தன் இறக்கைகளை விரித்துப் பறக்க முடியாமல் முள் வேலியில் இறக்கைகளை சிக்கவைத்துக்கொண்டு உயிருக்காக போராடிக் கொண்டிருந்தது.

நரசிம்மன் ஓடிச்சென்று அந்தக் கிளியை எடுத்தான். இறக்கையில் அதற்கு ஏற்பட்ட காயத்திற்கு மருந்திட்டான்.

பின்னர் மரத்தில் ஏறி ஒரு கூடு கட்டினான். அந்தக் கூட்டில் கிளியை அமரவைத்தான். மரத்தை விட்டு கீழே இறங்கி, தன் தந்தையார் இருப்பிடம் நோக்கிப் புறப்பட்டான்.

இந்தக் காட்சியினை எல்லாம் மறைந்தி ருந்தபடி கவனித்துக் கொண்டிருந்த நாராயணன் உடனே மின்னல் வேகத்தில் அவனுக்கு முன்பே தன் தந்தையாரை வந்தடைந்தான். தன் தந்தையிடம் நரசிம்மன் செய்ததை எல்லாம் தான் செய்தது போல் கூறினான்.

அதனைக் கேட்ட பொன்னுரங்கன் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

சிறிது நேரத்தில் அவருடைய இளைய மகனான நரசிம்மன் அங்கு வந்தான். அவனும் நாராயணனைப் போலவே கூறினான்.அதனைக் கேட்டதும் பொன்னுரங்கன் வியப்படைந்தார்.

"மகனே! நீ செய்வதற்கு முன்னரே உன் அண்ணன் அதனைச் செய்து வந்துவிட்டான். இனி அடுத்த முறை உங்களை நான் பரிசீலனை செய்கிறேன்" என்றார்.

நரசிம்மன் புறப்பட்ட பின்னர் நாராயணனும் தன் தந்தையிடம் இருந்து விடைபெற்றுச் சென்றான்.

இருவரும் சென்ற பின்னர் பொன்னுரங்கன் சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்தார். அவர் மனதில் சிந்தனை உருவானது.

உடனே தாமதிக்காமல் நாரயணனைப் பின் தொடர்ந்தார்.

நாராயணனோ வழக்கம் போல் நரசிம்மனைப் பின்தொடர்வதைக் கண்டு நம் எண்ணம் சரியாகத்தான் இருக்கும் என்று உறுதி செய்து கொண்டார். எனவே நாராயணனுக்குத் தெரியாமல் அவனைப் பின்தொடர்ந்தார்.

நாராயணனின் முன்னே சென்று கொண்டிருந்த நரசிம்மன், ஆடு ஒன்று நடக்க முடியாமல் கால் காயத்துடன் தெருவோரத்தில் படுத்திருப்பதைப் பார்த்தான். உடனே அந்த ஆட்டை வைத்தியரிடம் எடுத்துச்சென்று அதன் கால்களுக்கு எண்ணெய் தடவி, கட்டுப்போட்டு உரியவரிடம் அதனை ஒப்படைத்தான்.

நாராயணன் இதனையெல்லாம் மறைந்த படி பார்ப்பதை பொன்னுரங்கன் கவனித்தார்.

உடனே நாராயணன் வேகமாக அங்கிருந்து கிளம்பினான்.

நாராயணண் இங்கிருந்து செல்லும் முன்னரே நாம் வீட்டிற்குச் சென்றுவிட வேண்டும் என்று முடிவு செய்த பொன்னுரங்கன் குறுக்குப் பாதையின் வழியோகப் படுவேகமாக தன் வீட்டை வந்தடைந்து விட்டார்.

சிறிது நேரத்தில் நாராயணன் மூச்சிறைக்க வீட்டினுள் நுழைந்தான்.

பொன்னுரங்கன் ஏதும் அறியாதபடி வேறொன்றும் காட்டிக்கொள்ளாதவராய் அவனைப் பார்த்தார்.

"தந்தையே! நான் வழியில் கிடந்த ஆடு ஒன்றினைக் காப்பாற்றினேன். ஆட்டின் கால் காயத்திற்கு மருந்திட வைத்தியரிடம் தூக்கிச் சென்றேன். பின்னர் உரியவரிடம் அந்த ஆட்டை ஒப்படைத்து விட்டேன்!" என்று கூறினான்.

அதனைக் கேட்ட பொன்னுரங்கன் பதில் எதுவும் தெரிவிக்காமல் அமைதியாக இருந்தார்.

சிறிது நேரத்தில் அங்கே நரசிம்மன் வந்தான். "தந்தையே! இன்று நான் ஒரு ஜீவகா ருண்யச் செயலைச் செய்து வந்தேன்!" என்றான்.

"மகனே! நீ செய்த ஜீவகாருண்யச் செயலை நான் என் கண்களால் பார்த்தேன். உன் அண்ணன் நாராயணன் செய்த செயலையும் என் கண்களால் பார்த்தேன். எனவே என் சொத்துக்களை யாரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று முடிவு செய்துவிட்டேன்" என்று கூறினார் பொன்னுரங்கன்.

அதனைக் கேட்ட நாராயணன் திடுக்கிட்டான். நரசிம்மனோ புன்சிரிப்போடு தன் தந்தையை நோக்கினான்.

"தந்தையே! என்ன இருந்தாலும் அண்ணன் தான் என்னைவிட உயர்ந்த செயலைச் செய்திருப்பார்! அவருக்கு இணையான செயலை நான் ஒருபோதும் செய்திருக்க மாட்டேன். எனவே அவருக்குத்தான் நீங்கள் சொத்துகளைக் கொடுக்கப்போகின்றீர்கள் என்று நான் நம்புகிறேன். அண்ணன் சொத்துகளை அடைவதை நான் பெருந்தன்மையுடன் வரவேற்கிறேன்!" என்றான் நரசிம்மன்.

நரசிம்மனின் பெருந்தன்மையான பேச்சைக் கேட்டு பொன்னுரங்கன் மகிழ்ச்சியடைந்தார்.

"மகனே நரசிம்மா! உன்னுடைய செயலைத்தான் நான் உயர்ந்த செயல் என்று முடிவு செய்தேன்! இப்போது உன்னுடைய பேச்சுக் கூட உயர்ந்ததாகவே இருக்கிறது. உன்னுடைய உயர்ந்த செயலினை நான் மனம் திறந்து பாராட்டுகின்றேன்! உனக்குத் தான் நான் சொத்துகளைக் கொடுக்கப் போகிறேன்" என்றார்.

அதனைக் கேட்ட நரசிம்மன் வியப்போடு அவரை நோக்கினான்.

பொன்னுரங்கன் நாராயணனைப் பார்த்தார் "மகனே! நீ குறுக்கு வழியில் என்னுடையச் சொத்துகளை எல்லாம் அடைய நினைத்தாய்! நான் உன்னிடம் சொத்துக்களை ஒப்படைத்தால் அவைகளை எல்லாம் குறுக்கு வழியிலேயே செலவு செய்து விடுவாய்! எனவே நான் உன்னிடம் சொத்துக்களை ஒப்படைக்க மாட்டேன். நீ உன்னைவிடச் சின்னவனைத் துரத்தி காரியத்தை சாதித்துக்கொள்ளலாம் என்று நினைத்தாய்! அது உன்னால் முடியாமல் போய்விட்டது" என்றார்.

நராயணனோ வெட்கத்துடன் தலை குனிந்த படியே நின்றான்.

## அதிசய உலகம்

### சிலி பாராளுமன்றத்துக்கு 75 மைல் நடந்து வந்த 24 அந்தகர்கள்!

வேலையில்லாத 24 அந்தகர்கள் சன்டியாகோ என்ற இடத்திலிருந்து 75 மைல்கள் நடந்து, சிலி பாராளுமன்றத்தை அடைந்துள்ளார்கள். இவர்கள் தமக்கு வேலை கோரி பாராளுமன்றத்துக்கு வந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

பார்வையற்ற தொழிலாளர்களின் தேசிய சங்கத் தலைவர் ஒலாண்டோ வராஸ், பாராளுமன்றக் கூட்டம் நடைபெறும் வல்பரைஸோ எனும் இடத்தில் பத்திரிகையாளர்களைச் சந்தித்த போது, இவ்வளவு நீண்ட தூரத்தை நடப்பதென்பது மிகவும் சிரமமானதாகவும், தியாக உணர்வுகொண்டதாகவும் காணப்பட்டது. நடந்து வருகையில் உடல் ரீதியாக மிகவும் பயங்கரமான அனுபவத்தையே பெற்றோம். ஆனால் அது உள்ளத்துக்கு புத்துணர்ச்சி தரக்கூடியதாக இருந்தது என்று கூறினார்.

## ஆத்திசூடி

### சித்திரம் பேசேல்

நீ அலங்கார வார்த்தைகளால் உண்மையை மறைத்து பொய்யை மெய்போலக் கேட்பவர் நம்பும்படி பேசாதே!

எஸ் நிரஞ்சலா, கண்டி. -ஔவையார்

## உங்கள் பொது அறிவு எப்படி?

### வரலாற்றில் புகழ் பெற்ற பிரமுகர்கள்

| | |
|---|---|
| 01. வில்லியம் ஷேக்ஸ்பியர் | - உலகப் புகழ் பெற்ற ஆங்கில நாடகாசிரியர். |
| 02. பெர்னாட்ஷா | - ஆங்கில இலக்கியத்துறையில் உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர். |
| 03. ஆபிரகாம் லிங்கன் | - ஐக்கிய அமெரிக்காவின் 18ஆவது ஜனாதிபதி. |
| 04. ஜோர்ஜ் வாஷிங்டன் | - ஐக்கிய அமெரிக்காவின் முதல் ஜனாதிபதி. |
| 05. ஹிட்லர் | - நாஸிஸக் கொள்கையை வகுத்த ஜேர்மனியச் சர்வாதிகாரி. |
| 06. சோக்கிரட்டீஸ் | - தலைசிறந்த கிரேக்க தத்துவஞானி (கி.மு) |
| 07. டேவிட் பென்கூரியன் | - சியோனிஸ இயக்கத்தின் தந்தை. |
| 08. இடி அமீன் | ஆபிரிக்க அரசியலில் திருப்பங்களை உண்டு பண்ணிய உகண்டா நாட்டின் தலைவன். |
| 09. ராஜேந்திரபிரசாத் | - இந்தியாவின் முதல் ஜனாதிபதி. |
| 10. யூரி ககாரின் | - முதல் விண்வெளிப் பயணி. சொந்த நாடு ரஷ்யா. |

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 24.08.2005

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 609**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு.**

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 607


**பரிசுக்குரியவர்:**
யோ.சரண்யா, தரம் 9A,
தி/கலைமகள் வித்தியாலயம், அன்புவழிபுரம், திருகோணமலை.

**பாராட்டுக்குரியவர்கள் :**

| | |
|---|---|
| ஜோ.சதீஸ், பிச்சமல்வத்த, பாம் வீதி, மட்டக்குளிய. | ர.வினோ, ரி.வி.கே. மில் வீதி, செங்கலடி. |
| ரி. ஜெசிகா பானு, 21, புனித பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம். | சு.துருஷாந்தன், தரம் 2, கொ/விபுலானந்தா தமிழ் வித்தியாலயம், கொழும்பு - 9. |
| பி. அனோஜன், தரம் 2, தூய தோமையர் கல்லூரி, பண்டாரவளை. | டானியா, கண்டி வீதி, கம்பளை. |
| என்.எம். பாதிமா ஹப்சா, வெலிகே பொல, பறகஹதெனிய, வேஉட. | பாத்திமா அஸ்பா ஜிப்ரி, புனித தோமையார் பெண்கள் பாடசாலை, மாத்தளை. |
| மர்ஸியா நாபிர், 11/2,ஏ. பாகிர் மாகார் அவனியூ, மருதானை, பேருவளை. | நிசாக் நியாஸ், 4ஆம் குறுக்குத் தெரு, அறபா நகர், தில்லையடி, புத்தளம். |

# தகவல் பெட்டி

## வித்தியாசம்




கூடைப்பந்து விளையாட்டு வீராங்கனைகள் இவர்கள். நியூயோர்க் லிபர்ட்டி அணியில் விளையாடும் பேகீவாவை, கனேக்டிகட் சன் அணி வீராங்கனையான 7 அடி உயரமுள்ள மார்கோ அருகில் வைத்தால் வானமும் பூமியும் போல் இருப்பார்கள். ஆனாலும் விளையாட்டில் ஒருவருக்கு மற்றவர் சளைத்தவரல்ல என்று குறிப்பிடுகிறார்கள் கூடைப்பந்து விளையாட்டு ரசிகர்களும் ஆய்வாளர்களும்.




## முத்தம்

பிரித்தானிய அரச பரம்பரையைச் சேர்ந்த வில்லியம் இளவரசருக்கு முத்தமிடுவது நினைத்தவுடன் செய்யக்கூடிய காரியமல்ல. ஆனாலும் இந்த முத்தத்திற்கு இளவரசர் எந்த உணர்ச்சியையும் வெளிப்படுத்த வில்லை. ஏனெனில் இது ஒரு மெழுகுச் சிலை என்பதனாலாகும். இங்கிலாந்தின் பிரபலமான மெடம் டுசேட்ஸ் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள வில்லியம் இளவரசரின் மெழுகுச் சிலைக்கு ஒரு யுவதி முத்தமிடும் காட்சியே இது.



## முதல்வன்

குளோனிங் முறையில் உருவாக்கப்பட்ட உலகின் முதல் நாய்க் குட்டியே இதுவாகும். தென் கொரிய சியோல் நகரில் பிறந்த இந்த நாய்க் குட்டியின் பெயர் 'ஸ்னபி'. ஸ்னபியை உருவாக்கியிருப்பது தாய் என்ற பெயருடைய ஹன்கன் ஹவுண்ட் இனத்தைச் சேர்ந்த ஓர் நாயினது உயிர் அணுக்களைக் கொண்டே என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.



## இசையும் கிரிக்கெட்டும்

இற்றைக்குப் பல வருடங்களுக்கு முன்னர் பிரபல்யமான 'பீடல்ஸ்' இசைக்குழுவின் அல்பம் ஒன்றுக்கு விசேடமான உறையொன்று (Cover) நிர்மாணிக்கப்பட்டது. அண்மையில் அந்த உறையைப் பிரதிபலிக்கும் வகையில் இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி வீரர்களான மைக்கல் கஸ்பரோச், ஜேசன் கிலஸ்பீ, பிரேட் லீ, க்ளேன் மக்ராத் ஆகிய நால்வரும் லண்டனில் அபே வீதிக் கடவைக்குக் குறுக்காக நடந்து சென்றபோது பிடித்த படம் இது.



## சாதனை சாரதி

இயன் ஹோஷேக் என்பவர் சாரதி வம்சத்தின் முப்பாட்டனாராகக் கருதக் கூடிய ஒருவர். இங்கிலாந்து ஆர்கில் பிரதேசத்தில் வாசம் செய்யும் இவருக்கு வயது 100ஐக் கடந்து விட்டது. இவரது சாரதி அனுமதிப் பத்திரத்துக்கே 76 வயதாகிறது. 'எனது உடல் ஆரோக்கியம் அனுமதி வழங்கும் வரை சாரதியாக இருப்பேன்' என்று ஓய்வு பெற்ற இந்த வங்கி ஊழியர் கூறுகிறார்.



அற்புதத் தீவே

## வில்லனை பாராட்டிய ஜனாதிபதி!

வள்ளி படம் மூலம் திரையுலகில் அறிமுகமானவர் அலெக்ஸ். இதுவரை இவர் நடித்து 60 படங்களுக்கு மேல் வெளி வந்துள்ளன. தற்பொழுது விஜயகாந்த்துடன் 'சுதேசி', சரத்குமாருடன் 'காக்கி', பாக்யராஜுடன் 'யாமிருக்க பயமேன்', கார்த்திக்குடன் 'அதிர்ஷ்டம்', டி.ராஜேந்தருடன் 'வீராசாமி' உட்பட முப்பது படங்களுக்கு மேல் நடித்து வருகிறார். பெரும்பாலான படங்களில் வில்லனாகவே நடித்துள்ளார்.

இவர் கடந்த வருடம் திருச்சியில் கலெக்டர், மேயர், துணைமேயர், காவல்துறை உயர் அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் உலகிலேயே முதன்முதலாக மேஜிக் கலையில் தொடர்ந்து இடைவிடாமல் 24 மணிநேரம் மேஜிக் நிகழ்ச்சி நடத்தி சாதனை புரிந்தார். இந்த சாதனையை உலக கின்னஸ் நிறுவனம், 'உலக கின்னஸ் சாதனையாளர்' என்று பாராட்டி சான்றிதழ் அனுப்பி கின்னஸ் சாதனையாளர் புத்தகத்திலும் வெளியிட்டது.



## இன்னொரு அந்நியன்?

நடிகர் ரவிச்சந்திரன் கதை - திரைக்கதை - வசனம் எழுதி தயாரித்து இயக்கும் படம் 'மந்த்திரன்'. ஏற்கனவே சில படங்களில் ஹீரோவாக நடித்து பெரிய அளவில் ஜொலிக்க முடியாமல் போன அம்சவர்த்தன், கடந்த 2 ஆண்டுகளாகக் கடுமையான பயிற்சிகளை எடுத்துக்கொண்டு இந்தப் படம் மூலம் கதாநாயகனாகிறார். படத்தில் அம்சவர்த்தனின் கெட்டப்பே மிரட்டலாக இருந்ததால், டைரக்டர் ரவிச்சந்திரனிடம் பேசினோம்.

'கிராமத்திலிருந்து பட்டணத்திற்கு வேலை தேடி வரும் இளைஞன். வந்த இடத்தில் சூழ்நிலைநிமித்தம் மூன்றுவிதமான கெட்டப்புகளை ஏற்கவேண்டி வருகிறது. அது என்ன சூழ்நிலை? என்பதுதான் கதை. படத்தில் இதுவரை இல்லாத அளவுக்கு வித்தியாசமான சண்டைக் காட்சிகளை க்ராபிக்ஸில் பண்ணிவருகிறோம். காலை மட்டுமே உபயோகித்து ஒரு வித்தியாசமான சண்டைக் காட்சி இப்படத்தில் வருகிறது. சூப்பர்ஹிட் படவரிசையில் 'மந்த்திரன்' இடம் பெறும் என்பது நிச்சயம்.



நமீதா ஆணை

'பம்பரக்கண்ணாலே' படத்தின் ஷூட்டிங் கோயம்பேடு மார்க்கெட் வளாகத்தில் நடைபெற்றது. இதில் ஹீரோ ஸ்ரீகாந்த்துடன் படு கவர்ச்சியான உடையில் கிளுகிளுப்பு பாடல் காட்சி ஒன்றில் ஆடிக்கொண்டிருந்தார் நமீதா. இதை வேடிக்கைப் பார்க்க பெரிய கும்பலே கூடிவிட்டது. கும்பலில் சில இளசுகள் நமீதாவின் கிளாமரைப் பார்த்து சில்மிஷத்தில் இறங்க படப்பிடிப்புக் குழு கூடுதல் பொலிஸ் பாதுகாப்புக் கேட்கும் அளவுக்கு நிலைமை போய்விட்டது.

பொது இடங்களில் இப்படி அரைகுறையாய் டிரஸ் போட்டுக்கொண்டு வந்தால் இரசிகர்களின் செய்கையும் இப்படித்தான் இருக்கும் என கமெண்ட் அடித்தார் ஒரு இரசிகர்.

பிரசாந்த் - தியாகராஜன் இணைந்து நடித்திருக்கும் 'அடைக்கலம்' படத்தை இயக்கியுள்ள ஆர்.புவனராஜா அந்தப் படம் வெளிவருவதற்குள்ளாகவே அடுத்து ஒரு படத்தையும் இயக்குகிறார். ராஹ்ஸ் இண்டர்நேஷனல் எனும் படநிறுவனத்தைச் சேர்ந்த ரகுநாதன் தயாரிப்பில் 'பிருந்தாவனத்தில் நந்தகுமாரன்' எனப் பெயர் சூட்டப்பட்டிருக்கும் இப்படத்தில் 'கற்க கசடற' கதாநாயகன் விக்ராந்த் தான் ஹீரோ. இரண்டாவது நாயகனாக கவுதம் எனும் புதுமுகம் நடிக்கிறார். கதாநாயகி தேர்வும் மற்ற கதாபாத்திர தேர்வும் நடந்து வருகிறது.

கார்த்திக் - பாண்டியராஜன் - ராதாரவி மூவரும் இணைந்து கலக்கும் புதிய படத்தின் பெயர் 'அதிர்ஷ்டம்'. ஸ்ரீ அஷ்டலட்சுமி பிலிம்ஸ் சார்பில் பி.சம்பூர்ணம் தயாரிக்கும் இப்படத்தில் அலெக்ஸ், சண்முகசுந்தரம், ஜெயரேகா, பயில்வான் ரங்கநாதன், சுருளிமனோகர், காஜாஷெரீப், ஜெயகோவிந்தன் இன்னும் பலர் நடிக்கின்றனர்.

'ஒன்மேன் ஷோ' என்ற மலையாளப் படத்தை தழுவி எடுக்கப்படும் இதன் கதைக்கரு என்ன தெரியுமா? "அது இஷ்டம் போல் வருவதால் அதிர்ஷ்டம். அதுவாகவே வந்து அதுவாகவே சென்றுவிடும். கதைநாயகன் அந்த அதிர்ஷ்டத்தை தன்னிடம் தக்கவைத்தானா? இல்லையா? என்பதே அதன் கதைக் கருவாகும்" என்கிறார்கள் இரட்டை இயக்குநர்களான பிரதீப் - ரவி.

## கவர்ச்சிக்கு தடா போடும் ரம்பா!

தன் தொடை அழகால் ஒரு கலக்குக் கலக்கியவர் ரம்பா. ரஜினியோடு ரம்பா, கமலோடு ரம்பா, சரத்தோடு ரம்பா, சத்யராஜோடு ரம்பா, கார்த்திக்கோடு ரம்பா, பிரபுவோடு ரம்பா, அர்ஜுனோடு ரம்பா, அப்புறம் அஜீத்தோடு ரம்பா, விஜய்யோடு ரம்பா....இப்படி கலக்கு கலக்குன்னு கலக்கிய ரம்பா, 'த்ரீ ரோஸஸ்' சொந்தப் படம் எடுத்து நொந்து நூலானார். இதனால் ஏகப்பட்ட ஃபைனான்ஸ் நெருக்கடி, ஃபைனான்ஸியர் நெருக்கடி என சிக்கல்களை அனுபவித்தார். ஃபீல்டை விட்டே விலகியிருந்த ரம்பா, 'ஒரு காதலன் ஒரு காதலி' படம் மூலம் மீண்டும் வருகிறார். அதிலும் சந்திரன் என்கிற புதுமுகத்திற்கு ஜோடியாக.

பூஜைக்கு வந்த ரம்பாவை குறுக்கே விழுந்து மறித்தோம்.

*பெரிய பெரிய ஆர்ட்டிஸ்டோடு நடிச்சிட்டு இப்ப புதுமுகத்தோட நடிக்கிறீங்களே?*

"நான் கதாநாயகியாக நடிக்கிறேன். அதாவது....கதைக்கு நாயகியாக நடிக்கிறேன். ஆரம்பத்தில் பெரிய ஹீரோக்களுடன் நடித்தால்தான் பிரபலமாக முடியும். இப்போது நான் சீனியர். நல்ல அனுபவம் கிடைத்திருக்கிறது. இனிமேல் விதவிதமான பாத்திரங்களைத் தேர்வு செய்து நடிப்பதுதான் நியாயம். இனியும் மோசமாக கவர்ச்சி காட்டிக்கொண்டிருக்க முடியாது. வெறுக்கத்தக்க காட்சிகள் எடுத்து இளைஞர்களை சீரழிப்பதில் எனக்கு உடன்பாடில்லை. நல்ல கதை இருந்து நீங்கள்தான் ஹீரோ என்றால் உங்களுக்கு ஜோடியாகக் கூட நான் நடிப்பேன் அதில் ஒன்றும் தப்பில்லை."

## சி னி வி சி ட்

*கவர்ச்சித் திலகமான நீங்கள் இளைஞர்களை கெடுக்கிற மாதிரி படம் எடுக்கக்கூடாது என்று போதனை சொல்கிறீர்களே?*

"நான் கவர்ச்சியாகத்தான் நடிப்பேன். இரசிக்கும்படியாகத்தான் நடிப்பேன். ஆபாசமாகவோ, அருவருக்கத்தக்க விதமாகவோ நடிக்கவில்லை என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது" என நெத்தியடியாகப் பதில் சொன்னார் ரம்பா.




பதினான்கு மொழிகளில் ஒரு படம் உருவாகிறது. கதாநாயகன் கதாநாயகி இருவர் மட்டுமே நடிக்கும் அந்தப் புதிய படத்திற்கு இன்னும் பெயரிடப்படவில்லை. தயாரிப்பாளர் துவாரகீஷ் இந்தப் படத்தை டைரக்ட் செய்கிறார். இம்மாதம் படப்பிடிப்பு துவங்கி இடைவிடாமல் நடைபெற உள்ளது.



எஸ்.ஜே.சூர்யா - நிலா
அ.... ஆ....

தமிழில் 'பாய்ஸ்' படம் மூலம் அறிமுகமான ஹரிணிக்கு அதன் பிறகு எதிர்பார்த்த (என்ன எதிர்பார்த்தாராம்?) இடம் கிடைக்காததால் ஆந்திர கரையோரம் ஒதுங்கினார். அங்கு 'பாய்ஸ்' பெற்ற பெரிய வெற்றி, பெரிய ஹீரோயின் அந்தஸ்தும் கிடைத்துவருகிறது. அதைப் பார்த்து 'சச்சின்' படத்தில் ஜெனிலியா எனும் ஹரிணியின் இயற்பெயரில் விஜய் ஜோடியாக ரீ.எண்ட்ரி கொடுத்தனர் அம்மணிக்கு. ஆனால் அந்தப் படத்திற்குப் பிறகும் அம்மணி ஹரிணி வசம் தமிழ்ப்பட வாய்ப்புகள் வந்துசேரவில்லை. அதன் விளைவு இனி கோடம்பாக்கமே வேண்டாம் என்று நிரந்தரமாக ஹைதராபாத்தில் செட்டில் ஆகிவிட்டாராம். பாவம் ஜெனிலியா அலைஸ் ஹரிணி.

இந்திரன் இயக்கத்தில் 'மலைச்சாரல்' படமெடுத்த அவரது உடன்பிறப்பு ரவி தனது ஹிமாலயா இண்டர்நேஷனல் தயாரிப்பில் 'நீலகிரி' எனும் புதிய படமொன்றை தயாரிக்கிறார். தற்போது 'நீயே நிஜம்' எனும் பெயரில் ரிலீஸுக்குத் தயாராக இருக்கும் புதுப்படத்தையும் 'என் கண்ணில் ஏன் விழுந்தாய்' எனும் பெயரில் ஆரம்பத்தில் தயாரித்தது இவர்தான் என்பது தெரிந்ததுதானே?



நிரஞ்சன் - காஞ்சனா
சூர்யா

## பழைய டி.ஆர்.மர்யகயா

டி.ராஜேந்தர் தனது வீராசாமி படத்திற்காக கார்டனில் ஒரு மிகப்பெரிய செயற்கை நகரத்தையே உருவாக்கியிருக்கிறார். இந்தப் படத்தில் வக்கீல் தாதாவாக டி.ஆர்.நடிக்கிறார். ஜோடி சாயாக்கடை சரசுவாக மும்தாஜ். படப்பிடிப்பின்போது டி.ஆரை மனதில் வைத்துக்கொண்டு "சித்தப்பா நீ இப்ப செத்தப்பா, சாயா கடை சரசு, என்னைய கொஞ்சம் ஒரசு" என மச்சி பஜ்ஜி ஸ்டைலில் நடிகர்கள் பேச....டென்ஷன் ஆகிவிட்டார் டி.ஆர்.

"யோவ்...இப்படி அடுக்குமொழி, எகணைக்கு மொகணை பேசுற பழைய டி.ராஜேந்தர் செத்துட்டான்யா. நான் இப்போ புது விஜய டி.ராஜேந்தர். இந்த மாதிரி வசனங்கள் இல்லாம புதுமாதிரி இருக்கும் 'வீராசாமி' படம்" எனச்சொல்லி சாதாரண வசனங்களையே பேசச் சொல்லியிருக்கிறார் டி.ராஜேந்தர்.



பரத் - மல்லிகா கபூர்
அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது

முன்பு சிம்ரனுக்கும் ஜோதிகாவிற்கும் இடையில் நடந்த 'நம்பர் ஒன்' போட்டி இப்போது அசினுக்கும் நயன்தாராவுக்கும் இடையில் மறைமுகமாகவும் நேர்முகமாகவும் (?!) நடந்து வருகிறது. இத்தனைக்கும் இந்த இருவருமே கேரள சேச்சிகள். ஆனால் இருவரும் நேருக்கு நேர் சந்தித்துக்கொண்டால் கூட முனு ஜென்மத்து பங்காளி, பகையாளி மாதிரி முகத்தை ஒருவெட்டு வெட்டி வேறு பக்கம் திருப்பிக்கொண்டு சென்றதெல்லாம் பழைய கதை. நீயா, நானா ஒரு கை பார்த்துவிடுவோம் என்று இப்பொழுது 'கஜினி' படத்தில் சூர்யா ஜோடியாக நடிக்கும் இருவரும் போட்டி போட்டுக்கொண்டு கச்சைக்கட்டி கவர்ச்சி காட்டி களம் இறங்கிவிட்டனர். அதிலும் நயன்தாரா ஒருபடிமேலே போய் ஒருபாடல் காட்சியில் ஜட்டி - பிரா என்று டு - பீஸில் கலக்கோ கலக்கென்று கலக்குகிறார். இதற்கான படப்பிடிப்பை சமீபத்தில் ஏவி.எம்.ஸ்டுடியோவில் கண்ட கோலிவுட் புள்ளிகள் பலரும் நயன்தாரா எதற்காக, எப்பொழுது, தாராளமயமாக்கல் கொள்கைக்கு தாவினார்? என்று புரியாது தங்களது தாவாங்கட்டையில் கைவைத்து யோசிக்க ஆரம்பித்துவிட்டனர் என்றால் பாருங்களேன்.

இது ஒருபுறமிருக்க...த்ரிஷாவுக்கும் அசினுக்குமிடையேயும் குடுமிப்பிடி நடந்துகொண்டிருக்கிறது. தெலுங்கில் செம பிஸியாக இருக்கும் த்ரிஷா, தமிழில் முக்கியமான படங்களை மட்டுமே ஒப்புக்கொள்கிறார். விஜய்யின் சொந்தப்படமான 'ஆதி'யிலும் சூர்யாவின் 'ஆறு' விலும் ஏ.எம்.ரத்னம் பண்ணப்போகிற 'விக்ரம்' படத்திலும் ஜோடி சேருகிறார் த்ரிஷா. இது அசினுக்கு டென்ஷனை ஏற்படுத்திவிட்டது. இதனால் த்ரிஷாவுக்கு தெலுங்கில் தொடர்ந்து வாய்ப்பு தரும் எம்.எஸ்.ராஜா, ஏ.எம். ரத்னம் மற்றும் எஸ்.ஏ.சந்திரசேகரன் ஆகியோரை சென்று சந்தித்து, 'எனக்கும் சான்ஸ் கொடுங்கள்' என்று கேட்டிருக்கிறார்.

இப்போதைக்கு இருக்கிற எல்லா மெயின் ஹீரோக்களுடனும் நடிப்பது அசின்தான் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனாலும் ஒரு புதுமுகம்போல் வாய்ப்புகளைத் தேடி ஓடிக்கொண்டிருக்கிறார் அசின்.

## சூர்யா செய்த ரகளை!

விதவிதமாய் சாப்பாடு கேட்டு வீட்டில் ரகளை செய்திருக்கிறார் சூர்யா. பிதாமகன் படத்துக்காக சூர்யாவை கன்னம் உப்பச் சொல்லியிருந்தார் டைரக்டர் பாலா. ஆனால் கஜினி படத்துக்காக ஒட்டிய கன்னமும் விலா எலும்பு தெரியிற மாதிரியும் இளைக்க வேண்டும் என டைரக்டர் ஏ.ஆர்.முருகதாஸ் சொல்லிவிட்டார். இயக்குநரின் கட்டளைப்படி கடந்த 6 மாதமாக அரிசி சாப்பாட்டையே தொடவில்லை சூர்யா. வெறும் காய்கறிகளை மட்டுமே தின்றுவந்தாராம். வீட்டில் மற்றவர்கள் சிக்கன், மட்டன் என விதவிதமாய் வெட்ட.....அவர்களையெல்லாம் ஒருமுறை முறைத்துவிட்டு முட்டைக்கோஸ், கேரட் என்று தின்றிருக்கிறார். கடந்தவாரமும் இதேபோல் காய்கறிகளை நறுக்கி வைத்திருக்கிறார்கள் சூர்யாவுக்கு. உள்ளே நுழைந்த சூர்யா, சும்மானாச்சுக்கும் மூஞ்சியை டென்ஷனாக வைத்துக்கொண்டு ஏன் இந்த கோழிக்குருமா, கோலா உருண்டையெல்லாம் செய்யமாட்டீங்களா? வாய்க்கு ருசியா காரசாரமா செஞ்சுப்போட வேண்டியதுதானே என சமையற்கட்டுக்குள் போய் அம்மாவிடம் ரகளை செய்துவிட்டு தனது அறைக்குள் போய் ஒளிந்துகொண்டாராம். அப்புறம்தான் தெரிந்திருக்கிறது....கஜினி பட ஷூட்டிங் டோட்டலாய் முடிஞ்ச விஷயம். அப்புறமென்ன.... விதவிதமாய் பிள்ளைக்கு சமைத்துப்போட்டிருக் கிறார் சூர்யாவின் அம்மா.

இது ஒருபுறமிருக்க.... சூர்யாவின் தம்பி கார்த்தி 'பருத்தி வீர'னில் ஹீரோவாக நடிக்கிறார் அல் லவா? அவரைக்கூப்பிட்ட டைரக்டர் அமீர், என்ன செய்வியோ தெரியாது. இப்படி வெள்ளப் பழுத்த மாதிரி இருக்காம, கன்னங்கரேல்னு வரணும் எனச் சொல்லிவிட்டாராம். இதற்காக டவுசர் மட்டும் போட்டுகொண்டு பெசன்ட் நகர் பீச்சில் மத்தியான வேளையில் தினசரி காய்ந்திருக்கிறார் கார்த்தி.

தன் மகன்கள் இப்படி கேரக்டருக் காக உடலை வருத்திக்கொள்வதைப் பார்த்து சந்தோஷத்தில் கண்கலங்கி யிருக்கிறார் அப்பா சிவகுமார். அப்பப்பா!



மாதவன் - பூஜா
தம்பி

## 'என்றும் இளமை'

'என்றும் இளமை' இது விக்ராந்த் ஹீரோவாக நடிக்கும் ஒரு புதிய படத்திற்கான நாமகரணம். பிரவின்காந்த் - ஷக்திசிதம்பரம் ஆகியோரிடம் இயக்குநர் பயிற்சி பெற்ற கோபி முதன்முதலாக இயக்கும் இப்படத்தின் ஹைலைட். விக்ராந்துடன் இணைந்து அவரது பெரியப்பா எஸ்.ஏ.சந்திரசேகரனும் ஒரு கதாநாயகனாக நடிப்பதுதான் 'என்றும் இளமை' எஸ்.ஏ.சி.க்கு எத்தனை பொருத்தம்.

## டைரக்டராகும் மீடியேட்டர்

பிரபல படத்தயாரிப்பாளர் ஸ்ரீசூர்யா மூவிஸ் ஏ.எம்.ரத்னத்திடம் இயக்குநர் லிங்குசாமியை அழைத்துச் சென்று அறிமுகம் செய்து வைத்து அவருக்கு 'ரன்' பட வாய்ப்பை வாங்கித் தந்தவர் மீடியேட்டர் எஸ்.ராமச்சந்திரன். பிரபல மீடியேட்டர் என்றாலும் இவருக்கு இயக்குநர் ஆக வேண்டும் என்பது ஆசை. லிங்குசாமியிடம் 'ரன்' படத்திலும், 'என்னமோ புடிச்சிருக்கு' படத்தில் மீனாட்சி சுந்தரத்திடமும் இயக்குநர் பயிற்சி பெற்ற எஸ்.ராமச்சந்திரன், தனது நீண்டநாள் கனவை நனவாக்கிக் கொள்ளும் விதமாக சமீபத்தில் புதிய படம் ஒன்றிற்கு 'புரொடெக்ஷன் நெ.1' என அறிவித்து பூஜை போட்டுள்ளார். ஒரு பெரிய நடிகரோட இரசிகன் பவர்ஃபுல் நடிகராக வளர்வது மாதிரியான வித்தியாசமான கதையை புதுமுக ஹீரோவாகவும் அசின் மாதிரி கதா நாயகியும் தேடிக் கிட்டிருக்கார். வயசுப் பசங்க தாராளமா அப்ளிகேஷன் போடலாம். ஐந்து பாடல்கள் இரண்டு ஃபைட்டுன்னு பெரிய பட்ஜெட்ல எடுக்கப்படும் இந்தப் படத்திற்கு 'சொல்லாமலே' படத்திற்கு இசையமைத்த பாபி தான் மியூசிக். ரகுநாதரெட்டி காமிரா. 'தவசி', 'திருப்பாச்சி' இதெல்லாம் இவர் ஆரம்பத்தில் பண்ணி வச்சிருந்த டைட்டில் என்பது குறிப்பிடத்தக்க கூடுதல் தகவல்.



ரம்பா
ஒரு காதலன் ஒரு காதலி

## யார் இந்த 'பருத்திவீரன்'

மதுரை பகுதியில் வாழ்ந்த ஒரு மனிதன்தான் 'பருத்தி வீரன்' ஏற்கனவே கரிமேடு கருவாயன், சீவலப்பேரி பாண்டி, மலையூர் மம்பட்டியான்.....என வாழ்ந்த மனிதர்களின் கதையை படமாக்கியிருக்கிறார்கள். அந்த வரிசையில்....'பருத்தி வீரன்'. இது அமீரின் 3-வது படம்.

'மௌனம்பேசியதே' வித்தியாசமான காதலைச் சொன்னது. 'ராம்' அம்மா - மகன் பாசத்தைச் சொன்னது. 'பருத்தி வீரன்' முரட்டுத்தனமான கிராமத்து இளைஞனின் ஈரமனசை யதார்த்தமாகச் சொல்லப்போகிறது. எந்தப் பாசாங்கும் இல்லாமல் வெள்ளந்தியாக வாழ்கிற கிராமத்து மக்களின் வாழ்க்கையை, தமிழர்களின் அடையாளத்தை உண்மைக்கு வெகு அண்மையில் இருந்து படம் பிடித்துக் காட்டவிருக்கிறார் அமீர்.

இந்தப் படத்தின் அழைப்பிதழ் இண்டஸ்ட்ரியையே மிரட்டி எடுத்தது. கிட்டத்தட்ட ஒருவாரம் ஒரு ஷூட்டிங் போலவே நடத்தி, அழைப்பிதழுக்கான படங்களை தயார் செய்தாராம் அமீர். அழைப்பிதழைப் பார்த்த பாரதிராஜா, 'ஏய்...என்னய்யா இது' என ஆச்சரி யத்தில் புருவம் உயர்த்தியிருக்கிறார். அதிலும் அவரின் சொந்த ஊரான தேனிக்குப் பக்கத்திலேயே சில லொகேஷன்களை தேடிப்பிடித்து புகைப்படங்கள் எடுக்கப் பட்டிருக்கிறது. அந்த லொகேஷன்கள் தன்னுடைய ஏரியாவிலிருந்தும் தனக்குத் தெரியாமப் போச்சே என மேலும் ஆச்சரியத்தை வெளிப்படுத்தினார்ாம் பாரதிராஜா.

சிவகுமாரின் இரண்டாவது மகன் கார்த்தி இதில் கதாநாயகனாக அறிமுகமாகிறார். ஜோடி ப்ரியாமணி. இதுபோக கஞ்சா கருப்பு உட்பட 'பருத்திவீரன்' காலத்தில் வாழ்ந்த சில மனிதர்களும் நடிக்கிறார்கள்.



கார்த்தி - ப்ரியாமணி
பருத்தி வீரன்




## மெகாஹேட்ஸ் புன்னகை மிரட்டல்..!

நுரையீரலை
நனைத்துச் செல்லும்
நுஸ்ரத் பஹ்தி
அலிகானின்
பாடலோடு.....
காத்திருப்புக்களில்
களங்கம் தெளித்து
என் படுக்கையில்
முட்கள்
தூவிச் சென்றவள்
பற்றிய
முறைப்பாடுகளுடன்...!

வெள்ளி
ஓடைகளுக்கு
நடுவே - என்
வெப்ப
உணர்வுகளை
சிலாகிக்கத்
தெரியாத
அவளின்
சிரிப்பொலிகள்...!

ஆபத்து நிறைந்த -
இந்த
உறவில் நான்
எத்தனையாவது
உயிரென்று
தெரியவில்லை..!

நெருஞ்சி முள்
காட்டிற்குள் நேசப்
பயிர்களை
விசயம் தெரியாமலே
விதைத்து விட்டேன்...!

அழுக்கு படிந்த -
அவள்
இதயமும் - ஓயாமல்
தேய்ந்து
கொண்டிருக்கும்
என் தேடல்களும்
இன்னும்
மரணிக்கப்
போவதில்லை என
மார் தட்டிக்
கொள்கிறது....!

அன்பே....
உன்
மெகா ஹேட்ஸ்
புன்னகையால் - என்
கசங்கிய மனசினையும்
கொஞ்சம்
கவனித்துக்
கொள்ளடி......!

—புத்தளம் நஸீம்ரூமி.

## ஊமையாகிப் போனேன்

உன்
உன்னதமான உணர்வு
என் உள்ளத்தை
தொடுவதால் தானோ
உன்னையே நான்
தொடமுடியாத
தூரத்தில் இருக்கிறேன்.

வாழ்வின் வசந்தத்தைத் தேடி
வரட்சியில் நடக்கும்
நடைப் பிணமாக
நான் மாறிய போதும்
அன்று நீ
எனக்காகச் சிந்திய
வார்த்தைகளையே
இன்று நான்
காற்றலைகளில் தேடியலைகிறேன்!

அன்று நாம்
ஊர் உறங்கிய வேளையிலே
சாலையோரத்தில்
சாய்ந்து பேசிப்பார்த்தோம்
இன்று நீயே....

உறங்கிப் போன
சில உண்மைகளுக்காக
நான் இப்போது
ஊமையாகிப் போனேன்!

—எம்.ஏ.றமீஸ்,
அட்டாளைச்சேனை – 10.

## எனை விட்டுச் செல்கிறாய்....

செல்கிறாய்....
சில ஞாபக ஈரங்களை
மட்டும்.....
விட்டுவிட்டு....

கண்ணீர் மீதூர
நீ போகும் வழி பார்த்து
விழி பந்து உருளும்....
விரிந்து கிடக்கும் துயர்
மிகும் வெளி
இனியெனக்கு....

மிருதுவாய் வியாபித்திருந்த
என் யாவும்
இறுகி நாறும்....

இதுவரைக்கும் பகிரப்பட்ட
தனிமை
ஊன் கரைக்கும்...

முடியவில்லை
நீயில்லா வெளிக்குள்
ஒற்றையாய்
ஒன்றும் செய்ய....

மூளைக்குள் செதுக்கி
வைத்த
உன் உரு
வந்து வந்து
வதைக்கையிலும்
வலியில் அலறும்....
எனை விட்டுச்
செல்கிறாய்.....
சில ஞாபக ஈரங்களை
மட்டும்....
விட்டு விட்டு.....!

—சண்முகம் சிவகுமார்,
பத்தனை.

## மிகச் சிறந்த கவிதையின் மரணம்

இளந்தாரிப் பருவத்தில்
அல்லது கிழடு தட்டி
நிர்வாணமாய்
நின்றிருக்கையில்
இயற்கையாகவோ
செயற்கையாகவோ
இறந்திருக்கக்கூடும் இந்த
மரம்.

இப்படி கறையான்
நுணைத்து
மரவட்டை கூடுகளென
உளுத்து உருமாறிப்போய்
அனாதரவாய் கிடக்குதிந்த
மரம்.

இலையும் கிளையும்
கூடும் குஞ்சுகளுமென
ஒரு குட்டிச் சரணாலயமாய்
இதன் கடந்த காலம்
மிகவும் பசுமைகள்
அடர்ந்தது.

பாம்பொன்றின் பிடியிலிருந்து
தப்பித்த எலியொன்றை
வயிற்றினுள் மறைத்ததில்
தன் பிறவிப்பயனை
இந்த மரம் அடைந்திருக்கும்.

ஒரு பனி மனிதன்
இதை எரித்து குளிர்காயுமுன்
யாரேனும் வந்திங்கு
வசந்த காலம் பற்றி
வினவுங்கள்.

—றகுமான் ஏ.ஜமீல்,
மருதமுனை.

## காதல் நினைவாக...!

காதலியே,
நம் காதல் நினைவாக
நீ பொன், பொருளோ
புகைப்படமோ
தரத் தேவையில்லை.
உதிரும் உன்
தலைமுடியில்
ஒன்றைத் தருவாயா?
அந்த முடியின்
நினைவுடன்
என் வாழ்கையை
வாழ்ந்து
முடித்துக்கொள்வேன்.

—தி.அசோக்,
யாழ்ப்பாணம்.

## முகவரியற்ற காதலி!

ரயிலோசையா?
இல்லையது தான் உயிரோசையா?
செவிகளில் மெல்ல
ஒலித் தட்டுப்படுகிறது
நெஞ்சம் கனத்து
உயிர் போகிறது.

ஒடிந்து போகும்
உடல் நாளங்களில்
வலி கசிகிறது.





இதயம் சுருதி மாறி
முனகலினால்
இசை வடிக்கிறது
இயலாமை அதில் வெளிப்படுகிறது.

இரத்த ஓட்டம் அடங்கியதால்
உணர்வுகள்
செயலற்றுக் கிடக்கின்றன.
இன்னும் பாதங்கள் மட்டுமே
உயரப் பறக்கிறது
அந்தரத்தில் ஆடி நின்று.....இது
அத்தனையும்
காதலின் ரணங்கள்!
காற்றோடு கலந்து வரும்
பூவாசமாய்
முதல் உரை தந்து முடிவுரையாகு
முகவரி இல்லா காதலியே....

—திருமலை நதார், ஜின்னாநகர்.

## குறு(ம்புக்)ங் கவிதைகள்

### பேனை

என்னால்
தொட முடியாத
சிகரங்களையும்
குன்று குழிகளையும்
கிஞ்சித்தும்
தடையின்றி
தொட்டுவிடுகிறதே
என் பேனா!

### கைக்குட்டை

உன் முகம்
துடைத்த - என்
கைக்குட்டையைக்
கழுவிவிடாதே.....
என் ஞாபகம்
மறந்துவிடும்
உனக்கு!

### சிகரட்

கோபிக்காதே,
இதுதான் கடைசி.....
இனிமேல் புகைக்க
மாட்டேன்!
இனி -
உன் இருமல் பாணிக்கு
அவசியமில்லை
தூக்கி அதைத் தூர
வீசு!!

### இளவேனில்

அட!....
பூக்களெல்லாம்
பூக்கின்றனவே....
தூரத்தே
உன் கொலுசுச்
சத்தம்!

### விடியல்

உன் சம்மத
சமிக்ஞை
வந்தது...
நான் இப்போது
நானில்லை!!

—வாலிப்பிரியன்,
தாராபுரம்.

## கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

### சிறப்புக் கவிதையும் — கவிஞரும்

முதலில் கவிதையினது இடம் பற்றி ஜமாலன் அவர்கள் கூறுவதைப் பார்க்கலாம். புரிந்துகொள்ளச் சிரமமாக இருந்தாலும் கூட, இதைவிட எளிமையான மொழியில் இதைப் புரியவைத்துவிட முடியாதென்பதால், இது தவிர்க்க முடியாத சிரமம்தான்:

"மனித உடலானது தான் எதிர்கொண்ட பொருட்களைக் குறிபிட்டு, பெயரிட்டதன் மூலம், பொருட்களின் மீதான விரிவான அதிகாரக் களத்தைக் கட்டமைக்கிறது. இந்நிகழ்வின் எதிர்வினையாக மொழியும், மொழி சார்ந்த சொல்லாடல்களும் மனித இருப்பை நிர்ணயிப்பதாக உருமாறுகின்றன.

பெயரிடப்பட்ட பொருட்களினை அர்த்தங்களாக (குறிப்பீடுகளாக) மாற்றியமைத்ததன் மூலம் – பெயரிடுதல் தொழில்நுட்பம் அமைப்பாக்கத்திற்கு உட்படுத்தப்பட்டு, மொழியின் இரண்டாம் நிலை வினையாக அறிவுருவாக்கம் நிகழ்கிறது. பொருட்கள் பெயரிடப்பட்டவுடன், அவற்றைப் புரிந்துகொள்வதற்காக...புதிய அறிதலுக்கு உட்படுத்தி...பொருளின் மீது மேலும் பல புனைவுகளை உருவாக்குவதே அறிவுருவாக்கம் ஆகும். இக்கட்டத்தில் பொருளினைப் பற்றிய புதிய அறிதலானது, புதிய அறிவு நிலைகளாகக் கிளர்ச்சியுறுகிறது. இக்கிளர்ச்சியே பொருளையும், மனிதனையும் வித்தியாசப்படுத்த முனைகிறது. இதன் விளைவாக 'மனம்' – என்கிற தொழில்நுட்பத்தின் உருவாக்கம் நிகழ்கிறது.

அமைப்பாக்கத்தின் செயல்வெளியாக 'மனித உடல்' – இருக்கும் போது, செயல் உத்தியாக 'மனம்' – இயக்கமடைகிறது. எனவே, மனம் சார்ந்த மொழி கொண்டு எழுதப்படும் கவிதை ஒருவகையில் சமூக அமைப்பாக்கத்திற்கு இணையாகவே செயற்படுவதுடன், சமூக அறிவுருவாக்கத் தளத்தின் அமைப்பாக்க உத்தியாகவும் இயக்கமடைவதை நம்மால் அறியமுடிகிறது. அமைப்பாக்கம், சார்பற்ற முழுமுதல் பொருட்களை நோக்கியே தனது வினையின் விளைபொருளைக் கட்டமைக்கிறது. இவ்வாறு முழுமுதல் பொருளை அறிதலே அல்லது குறித்தலே மதம் சார்ந்த மொழியாக அறியப்படும் போது, கவிதையின் குறித்தலும் இதே செயற்பாடாக இயக்கமடைகிறது. எனவே, மதத்தின் 'கடவுள்' நோக்கிய தேடல் தொழில்நுட்பமே, கவிதையில் 'அழியாத்தன்மை கொண்ட முழுமையான மனிதன்' என்ற தொழில் நுட்பமாக இணை வடிவம் கொள்கிறது. இந்நோக்கில் கவிதையின் இடமும், கடவுளின் இடமும் ஒப்புநோக்கக் கூடியவை என்பது நிரூபணமாகிறது."

கவிஞர் ஆசைத்தம்பியின் மூன்று கவிதைகள்.

### என்னைப் பற்றி ஏதும் தெரியாத ஒரு தெரு

அழகான தெருவொன்றில்
வசிக்கிறாய்
எனினும் உன் பெயர்
எனக்குத் தெரிவதில்லை.

கடந்து போகும் போதெல்லாம்
உன் தெரு அழகாகத்தான்
இருக்கிறது.

உன்னைப் பற்றி நான்
தெரிந்து வைத்திருப்பதெல்லாம்
இந்தத் தெருவில் நீ
வசிக்கிறாய் என்பதுதான்.

தெருவைப் பற்றித்
தெரிந்ததும் அவ்வளவே.
வேறு வீதிகளில் கூட
உன்னைப் பார்த்திருக்கிறேன்.

ஆனால்
இந்தத் தெருவில் மட்டும்
நீ அழகாக இருக்கிறாய்.

என்னைப் பற்றி ஏதும்
தெரியாத ஒரு தெருவில்
வசிக்கிறாய் நீ.

அந்தத் தெரு
அழகான தெருவாக இருக்கிறது
எனக்கு.

### சிறகின்மை

அழகான இறகொன்றை எடுத்துக்
காது குடையும்போது கேட்டேன்
அதில் பதிவாகியிருந்த
காற்றின் பெருங் குரலை
சிறகசைப்பின் பிரயத்தனங்களில்
உருவான துடிப்பொன்று
அதன் வழியே இறங்கியோடி
என்னுள் கலக்கிறது
கூட்டிலிருந்து விரிந்து செல்லும்
ஆகாயம்
என் செவிக்குள்
விகசித்துக் கொண்டிருக்கிறது
ஒரு வானம் முழுவதும்
அலைந்த இறகு
என் காதில் விட்டுச் செல்கிறது
சிறகின்மையின் வெறுமையை.

### ஒரு வண்டிக்காரன் பாட்டு

வண்டியிலிருந்து சிதறிய
நெல் மணிகள்
பயிராகிவிட்ட பாதையில்
அறுவடைக்கு
அதே வண்டிகள்
வரவேண்டும் மீதேறிப் போக.

நின்று இளைப்பாற
நேரமற்ற
வண்டிக்காரனின் பாடல்
ஒரு கனத்த சுமையாகிவிட்டது
இழுக்கின்ற மாடுகளுக்கு.

எல்லா ஊருக்கும்
சரியானபடி பாதைகள்
இருக்கின்றன.

எந்த வண்டியும்
சரியான நேரத்திற்கு
வருவதில்லையென்று
சந்தையில் அலுத்துக்
கொள்கிறார்கள்.

எல்லா நேரத்திலும் கூட்டம்
இப் பாதையில்
மழைக் காலத்தில்
ஆடு மாடுகள் அதிகம்.

மிதித்து மிதித்து
பாதைகள் சேறாய்
கலங்கலாய் ஆனபின்
ஒரு கோடைகாலம் வரும்


கட்டிப்பட்ட இடத்திலெல்லாம்
மாடுகளின் கால் அளவுகள்
அப்படியே பதிந்து போய்
பிறகு காய்ந்துவிடும்.

பார்க்கிற இடங்களிலெல்லாம்
முளைவிடும் சிறு சிறு புற்கள்.


எப்பொழுதும் போல
சிந்திக்கொண்டு போகின்றன
நெல் மணிகள்.

வண்டியைப் பிடித்துக் கொண்டு
நடையாகவே
இன்றும் உன்னைப் பார்க்க
வருகிறேன்.


## பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி




பெயர் : எம்.எப்.எம். முஹியி
வயது : 18
முகவரி : 14, கண்டி வீதி,
பாலையூற்று, திருகோணமலை.
பொழுதுபோக்கு:
வழமையானவை.



பெயர் : அ. சதீஸ்வரன்.
வயது : 24
முகவரி : P.O.Box 10513,
Doha, Qatar, A.G.F.
பொழுதுபோக்கு : பாடல் கேட்டல்



பெயர் : சி.திலீபன்.
வயது : 25
முகவரி : 54, Becket
Avenue, Eastham, London,
E66 AF, U.K.
பொழுதுபோக்கு : பத்திரிகை,
ரி.வி., கணனி.



பெயர் : தேவரமேஷ் பர்னா.
வயது : 35
முகவரி : 'ஆதித்தன் வளவு',
பழைய வீதி, கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.
பொழுதுபோக்கு : இயற்கையை
இரசித்தல், சோகப் பாடல் கேட்டல்.





# ஆல்கஹாலுக்கும், புற்றுநோய்க்கும் என்ன தொடர்பு?

மதுவுக்கும், சில வகையான குறிப்பிட்ட புற்றுநோய்களுக்கும் இடையே என்ன மாதிரியான தொடர்பு உள்ளது? என்ற கேள்வி நீண்ட காலமாக இருந்து வருகிறது. இந்நிலையில் அமெரிக்க விஞ்ஞானிகள் இதற்கு தற்போது விடை கண்டுபிடித்து உள்ளனர்.

ஆல்கஹாலில் இருக்கும் Acetaldehyde என்ற பொருள், உடம்பின் வளர்சிதை மாற்றத்தைச் சிதைத்து, கார்சினோஜென் புற்றுநோய் செல்களை உண்டாக்குகிறது. நம்முடைய உடம்பில் இயற்கையாகவே காணப்படும் Polyamines எனும் பொருள் செல்களின் வளர்ச்சிக்கு அவசியமாக உள்ளது. இது செல்கள் ஆக்ஸிஜனேற்றம் அடைந்து அழிந்து விடாமல் பாதுகாக்கிறது. ஆனால் அசிட்டால்டிஹைடுடன் இது சேர்வதால் உருவாகும் Crotonaldehyde மிருகங்களில் புற்றுநோய் உண்டாகக் காரணமாகிறது. இந்தக் குறிப்பிட்ட வேதிப்பொருள் மரபணு அமைப்பை மாற்றி, வழக்கத்துக்கு மாறான மரபணுக்களை உண்டாக்குகிறது.



இந்த வினைதான் சில வகையான புற்றுநோய்கள் வருவதற்குக்




காரணமாக அமைகின்றது.

ஆல்கஹால் சார்ந்த வகையில் உணவுக்குழாய் புற்றுநோயும், இன்னும் வேறு சில புற்றுநோய்களும் வருவதாக மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.


# வயாகராவினால் பெண்களுக்கு தொல்லை...!

ஆண்மைக் குறைவால் அவதிப்படும் ஆண்களுக்கு வயகரா ஒரு வரப்பிரசாதம் தான். இருப்பினும், வயாகரா சாப்பிட்ட ஆண்கள் அதிக அளவில் செக்ஸ் உறவை விரும்புவதால் பெண்கள்



பாதிக்கப்படுவதாக ஒரு ஆய்வு கூறுகிறது.

கேட்டன் பெர்ரி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆனி பாட்ஸ் என்ற ஆராய்ச்சியாளர், வயாகரா பயன்படுத்துவதால் ஆண் - பெண் உறவில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து நீண்ட ஆய்வு நடத்தினார். அப்போது வயாகரா பயன்படுத்தி உறவு கொண்ட ஆண்களின், மனைவி மற்றும் பெண் நண்பிகளிடம் கேள்விகள் கேட்டனர். அதில் பெரும்பாலான பெண்கள் வயாகராவினால் தங்களுக்குக்



கூடுதலான செக்ஸ் டார்ச்சர் ஏற்படுவதாகத் தெரிவித்தனர்.

வயாகரா மாத்திரை வாங்கிய ஆண்கள், கொடுத்த பணம் வீணாகப் போகக் கூடாது என்பதால் பெண்களைக் கட்டாயப்படுத்தி உறவு கொள்கின்றனராம். இதில் பெண்ணின் விருப்பங்கள் என்ற பேச்சுக்கே இடமில்லை. ஆண்கள் தங்கள் விருப்பம் போல நடந்துகொள்வதாக மேற்படி பெண்கள் தெரிவித்தனர்.


வயாகரா மாத்திரைகள், வழக்கமான செக்ஸ் உறவில் பெரும் பாதிப்புக்களை உண்டு பண்ணுவதாக ஆராய்ச்சியாளர் ஆனி பாட்ஸ் தனது ஆய்வின் முடிவில் கூறியுள்ளார்.

வழக்கத்துக்கு மாறான செக்ஸ், படபடப்பு, தகவல் பரிமாற்றத்தில் பாதிப்பு, பயம் போன்ற பல்வேறு சிக்கல்களை வயாகரா உண்டு பண்ணுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

# பாப் கார்ன் தொழிலாளர்களுக்கு நுரையீரல் நோய்...!

பாப் கார்ன் தயாரிக்கும் இடங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குக் கடுமையான நுரையீரல் நோய்கள் உண்டாக அதிகமான வாய்ப்புகள் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். பாப்கார்னுடன் நறுமணத்திற்காகச் சேர்க்கப்படும் பொருட்கள் தான் இப்பிரச்சினைக்குக் காரணம் என்று அவர்கள் கூறியுள்ளனர்.

இந்த நறுமணப் பொருட்கள் காற்று







செல்லும் வழியில் அடைப்புக்களை ஏற்படுத்தி விடுவதால், நுரையீரலில் சரி செய்ய முடியாத அளவுக்குப் பாதிப்புகள் ஏற்படும். குறிப்பாக மைக்ரோவேவ் அடுப்புகள் மூலம் தயாரிக்கும்போது பாதிப்பு சர்வ நிச்சயம். பாப் - கார்ன் தொழிலாளர்களின் சளியைச் சேகரித்து ஆய்வு செய்த போது, நறுமணப் பொருட்களில் இருந்து வெளியான மணம், மூச்சுக் குழாய் பகுதியில் கணிசமான செல்களைச் சிதைத்து இருப்பது தெரியவந்தது.

# சிறுநீர்ப்பை புற்றுநோயை காலி பிளவர் தடுக்கும்?

சமையலில் பயன்படுத்தப்படும் காலி பிளவருக்கு, சிறுநீர்ப்பை புற்று நோயைத் தடுக்கும் ஆற்றல் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அமெரிக்க விஞ்ஞானிகள் நடத்திய ஆய்வு மூலம் இது தெரிய வந்துள்ளது.

காலி பிளவரில் இருக்கும் Isothio cyanates என்ற வேதிப்பொருள் சிறுநீர்ப்பை புற்றுநோய் செல்களை மேற்கொண்டு பரவ விடாமல் தடுக்கிறது அல்லது அதன் வளர்ச்சியை தாமதப் படுத்துகிறது என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். குறிப்பாக, மிகவும் தீவிரமாக உள்ள புற்றுநோய் செல்கள் மீது இந்த வேதிப் பொருள் இன்னும் கூடுதலான வீரியத்துடன் செயல் புரிவ தால், சிறுநீர்ப்பை புற்றுநோய் சிகிச்சை யில் புதிய



திருப்பங்கள் ஏற்படும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். எனினும் எவ்வளவு காலிபிளவர் சாப்பிட்டால் நன்மை கிடைக்கும் என்பது போன்ற துல்லியமான விவரங்களை இப் போதைக்குச் சொல்ல முடியாது என் றும், அதுபோன்ற விஷயங்களை தெரிந்து கொள்வதற்கு இன்னும் பெரிய அளவில் ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்றும் விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

அமெரிக்காவில் ஆண்டு தோறும் சிறுநீர்ப்பை புற்றுநோய் காரணமாக 13 ஆயிரம் பேர் உயிரிழப்பதாகப் புள்ளி விவரம் தெரிவிக்கிறது. அதே சமயம் காலி பிளவரை ரெகுலராகப் பயன்படுத்துபவர்களுக்கு, புற்றுநோய் பரவுவதற்கான வாய்ப்புக் குறைவாகவே உள்ள தாம்.

பொதுவாக நமது அன்றாட உணவில் காய்கறிகள் மற்றும் பழங்களை அதிக அளவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* —ஷோபா—

## வெள்ளை பர்பி

***தேவையானவை:-***

| | |
|---|---|
| ஜவ்வரிசி மாவு | - 3 கோப்பை |
| கடலை மாவு | - 1 கோப்பை |
| நெய் | - 1 கோப்பை |
| சர்க்கரை | - 4 1/2 கோப்பை |
| ஏலம் | - 6 |

***செய்முறை :-***

* ஜவ்வரிசியில் ஒரு டீஸ்பூன் நெய் விட்டு வறுத்துக் கொள்ளவும். கை பொறுக்க சூடு வந்ததும் இறக்கி வைத்து ஆற விடவும். வீட்டில் மிக்ஸியிலோ அல்லது வெளியே மிஷினிலோ கொடுத்து மாவாக அரைக்கவும். அந்த மாவுடன் லேசாக வறுக்கப்பட்ட கடலை மாவையும் சேர்த்து சலிக்கவும். ஏலக்காயைப் பொடிக்கவும்.

* ஒரு கோப்பை ஜலம் விட்டு சர்க்கரையைப் போடவும். சர்க்கரை கரைந்து, அழுக்கு வந்ததும் வடிகட்டவும். அடுப்பில் வைத்து கம்பிப் பாகு பதம் வந்ததும் தயார் செய்து வைத்திருக்கும் மாவை தூவினாற்போல் கொட்டி கைவிடாமல் கிளறவும். பர்பி மிருதுவாக இருக்க வேண்டுமானால் நெய் 2 கோப்பை விடலாம். சர்க்கரை அளவு குறைச்சலாக இருப்பதாகத் தோன்றும். ஆனால் ஜவ்வரிசி மாவினால் அது கெட்டியாகி விடும். இனிப்பு சற்று அதிகம் வேண்டுமானால் சர்க்கரை 5 கோப்பை போடலாம், கைவிடாமல் கிளறி ஏலப் பொடியைப் போட்டு, பதம் வந்ததும் நெய் தடவிய தட்டில் கொட்டி, ஆறினவுடன் துண்டங்கள் போடவும்.

# முதலுதவி டிப்ஸ்

### வெட்டுக்காயம்

காயத்தைத் தண்ணீரால் கழுவி, அதன் மேல் டிங்சர் அயோடின் அல்லது டெட்டால் தடவவும். தேவைப்பட்டால் பேண்ட் எய்ட் போடவும்.

### மூக்கிலிருந்து இரத்தம் வடிதல்

சம்பந்தப்பட்ட நபரை சற்றே மேல் நோக்கிப் பார்த்தவாறு உட்காரச் செய்யவிடவும். அவரை வாயால் மூச்சு விடச் சொல்லவும். மூக்கின் மேல் குளிர் ஒத்தடம் கொடுக்கவும். மூக்கின் மென்மையான பகுதியை விரல்களால் விட்டு விட்டு அழுத்திப் பிடிக்கவும். கழுத்தின் பின் பக்கத்தில்



அல்லது நெற்றியில் குளிர் ஒத்தடம் கொடுப்பதும் பலன் தரும்.

### குழந்தை எதையாவது விழுங்கி விட்டால்.....

படபடப்பாக வேண்டாம். குழந்தையைக் குப்புறப்படுக்க வைத்து, அதன் பின் பக்கத்தில் தட்டினால் அது விழுங்கிய பொருள் வெளியே வரலாம். குழந்தை எதை விழுங்கியது என்றே தெரியாமல் அல்லது அதை எடுப்பதில் சிரமம் இருந்தால் உடனடியாக மருத்துவரிடம் அழைத்துச் செல்லவும்.

### விலங்குக் கடி

வீட்டில் வளர்க்கிற பிராணிக் கடி என்றால் கடிபட்ட இடத்தை நன்றாகக் கழுவி, உடனே டெட்டனஸ் ஊசி போட்டுக் கொள்ள வேண்டும். வேற்று விலங்குகள் என்றால் கடிபட்ட இடத்தைக் குழாயின் அடியில் காட்டிக் கழுவி, ஆன்டிசெப்டிக் சோப் அல்லது டெட்டால் தடவி மீண்டும் கழுவி, தாமதிக்காமல், ரேபிஸ் ஊசி போட்டுக்கொள்ள வேண்டும்.

### மயக்கம்

மயக்கமடைந்த நபரைக் கீழே படுக்க வைத்து நெஞ்சு மற்றும் வயிற்றுப் பகுதி ஆடைகளைத் தளர்த்த வேண்டும். தலையை ஒரு பக்கமாகத் திருப்ப வேண்டும். கால்களை லேசாக உயர்த்த வேண்டும். உடனடியாக குடிக்கவோ, சாப்பிடவோ எதுவும் கொடுக்கக் கூடாது. மயக்கம் தெளிந்த பிறகு கொஞ்சமாகக் குடிக்க ஏதேனும் கொடுத்து, சில நிமிடங்கள் உட்கார வைத்துப் பிறகே எழுந்திருக்க அனுமதிக்க வேண்டும்.

"கொஞ்ச நேரத்தில் அவளை ரெகவரி அறைக்குக் கொண்டுபோய் விட்டு விடுவார்கள். அங்கே யாருக்கும் அனுமதி கிடையாது. நீங்கள் வீட்டுக்குப் போய்க் கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் கூப்பிடுகிறோம்."

"பிரச்சினை ஏற்படுமென்று நினைக்கிறீர்களா?" பேஜுக்குத் தொண்டை அடைத்தது. சற்றுத் தயங்கிவிட்டு டாக்டர் சொன்னார்:

"எதுவும் சொல்வதற்கில்லை. நான்கு நாட்களுக்குள் இரண்டாவது மேஜர் ஆபரேஷன் நடந்திருக்கிறது. முன்னைக் காட்டிலும் பலவீனமாக இருக்கிறாள். பார்க்கலாம். எல்லாம் நல்லபடி ஆகும் என்று நம்புவோம்."

# ஒரு தாய் மகள் 44

நல்லபடி...! நல்லபடி...! நல்லபடி...! அந்த வார்த்தையைக் கேட்டுக் கேட்டு வெறுத்துவிட்டது பேஜுக்கு.

டாக்டர் போய் விட்டார். பிராட் ஒரு பெருமூச்சுடன் நாற்காலியில் விழுந்தான். இருவருமே கடலில் மூழ்கவிருந்து, மூச்சுத் திணறலுடன் பிழைத்து, கரையிலே கிடப்பவர்களைப் போலத் தோன்றினார்கள்.

"வீட்டுக்குப் போகலாமா?" என்றான் அவன்.

மறுத்துத் தலையசைத்தாள் பேஜ். "நான் இங்கேதான் இருக்கப் போகிறேன்."

"எதற்காக? எப்படியும் அவர்கள் உன்னை அனுமதிக்கப் போவதில்லை. ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் போன் செய்வதாகச் சொன்னார்களே?"

"இங்கே இருப்பதுதான் எனக்கு மனசுக்கு ஆறுதலாக இருக்கிறது" என்றாள் அவள் பிடிவாதமாக. தன் மன நிலையை வார்த்தைகளால் எப்படி விளக்குவதென்று அவளுக்குத் தெரியவில்லை. ஆண்டி எட்டாவது மாதத்திலேயே பிறந்து இன்குபேட்டரில் வைக்கப் பட்டிருந்த சமயம் இப்படித்தான் இருந்தது அவளுக்கு. குழந்தையை விட்டு இம்மியும் நகரப் பிடிக்கவில்லை. அதே போல்தான் இப்போதும். ரெகவரி அறைக்குள் அவளை அனுமதிக்காவிட்டால் பரவாயில்லை. ஆலிஸன் இருக்கும் இதே ஆஸ்பத்திரியில் எங்காவது ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தால் போதும்....

"ஆண்டி தனியே இருக்கிறான். நேற்று மாதிரி பயப்படுவான். நீங்கள் போங்கள்." என்றாள்.

பிராட் எழுந்து கொண்டான். "வேண்டுமென்றால் இருக்கிறேன்" என்றான் மீண்டும் ஒருமுறை.

"வேண்டாம்" என்றாள்.

காலையிலிருந்து அவனுடன் இருந்த நேரம் மொத்தமும் முள்ளின் மேல் உட்கார்ந்திருக்கிற மாதிரி இருந்தது அவளுக்கு. என்னென்னவோ சொல்ல வேண்டும்.... என்னென்னவோ கேட்க வேண்டும்.... எத்தனை நாளாக இந்தத் திருட்டுத்தனம் நடந்து கொண்டிருக்கிறது? ஏன் பொய் சொன்னீர்கள்? என்னிடம் என்ன குறை கண்டீர்கள்? என் மீது உங்களுக்குத் துளி கூடக் காதல் இல்லையா?

இப்படி எவ்வளவோ கேட்கலாம். கேட்டு என்ன ஆகப் போகிறது? இதயத்துக்குள்ளேயே எல்லாவற்றையும் அமுக்கிக் கொண்டு விட்டாள்.

"நாளைக் காலை கூப்பிடுகிறேன்" என்று சொல்லிவிட்டுப் பிராட் போய் விட்டான்.

அவன் போன பிறகுதான் ஞாபகம் வந்தது.

ஒருமுறை கூட அவளை அவன் தொடவில்லை. போகும் போது முத்தமிட்டு விட்டுப் போகவில்லை.... எல்லா பந்தங்களும் முறிந்தாயிற்று!

அந்த அறையில் ஒரு சிறிய பெஞ்ச் இருந்தது. அதில் முடங்கிப் படுத்துக் கொண்டாள்.

நடுவே ஒருமுறை தாரென்ஸன் தன் மகன் பிஜானுடன் வந்தான். "தைரியமாக இரு" என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

யாரும் இல்லாதபோது மனசில் சிறிது அமைதி ஏற்பட்டது. சில சமயம் யாரும் அனுதாபம் காட்டாமல் இருப்பதே பெரும் ஆறுதல். 'பாவம் ஆலிஸன்' என்று யாராவது சொன்னால் துக்கம் நெஞ்சைப் பிளக்கிறது.

கண்ணை மூடிக் கொண்டாள். எண்ணங்கள் அலை மோதின. பிராடும் தானும் எத்தனை சந்தோஷமாக இருந்தோம்....

ஆலிஸன் பிறந்த போது எவ்வளவு மகிழ்ச்சி! குழந்தை என்ன அழகு!

ஆலிஸன் மறுபடி சின்னக் குழந்தையாக மாறி, அம்மா என்று கூப்பிட்டுக் கொண்டு, தளர்நடையில் அந்த அறைக்குள் வருவது போல.....

"மிஸஸ் பிராட்?"

நர்ஸ் அவளை மெல்லத் தட்டினாள். எல்லாம் சொப்பனமா? இல்லை. நிஜமாகவே நர்ஸ் கூப்பிடுகிறாள். திடுக்கிட்டு எழுந்தவள், "என்ன ஆயிற்று?" என்று தடுமாறினாள்.

"உங்கள் பெண்ணுக்கு கொஞ்சம் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது....."



எழுதியது: டேனியல் ஸ்டீல்
தமிழில்: ரா.கி. ரங்கராஜன்

"டாக்டர்? டாக்டரைக் கூப்பிட்டீர்களா?" பேஜின் முகம் பிரேதம் போல வெளுத்தது.

"அவர் வந்து கொண்டிருக்கிறார். நீங்கள் வந்து ஆலிஸனைப் பார்ப்பதானால் பார்க்கலாம். என்னுடன் வாருங்கள்."

"அதாவது.... அதாவது.... உயிர் பிரிந்து கொண்டிருக்கிறது என்கிறீர்களா?"

ஒரு நிமிடத் தயக்கத்துக்குப் பின், "அப்படியில்லை.... நாடித் துடிப்பு அடங்கிக் கொண்டிருக்கிறது.... எதுவும் நேரலாம்...." என்றாள் நர்ஸ். டாக்டர் வருகிற வரையில் உயிர் நிற்குமா என்ற அவநம்பிக்கை அவள் முகத்தில் தெரிந்தது.

"என் கணவரைக் கூப்பிட வேண்டும்...."

"நாங்கள் கூப்பிடுகிறோம். டெலிபோன் நம்பர் தெரியும். நீங்கள் போங்கள்" என்றாள் நர்ஸ்.

இன்னொரு நர்ஸ் அவளை லி∴ப்டில் அழைத்துச் சென்றாள்.

ஒருநிமிடம் கூட வீணாக்க விரும்பவில்லை பேஜ். இந்த நிமிடம் போனால் இன்னொரு நிமிடம் வராது. 'போய் வா, கண்ணம்மா போய் வா....' என்று ஆலிக்கு விடை கொடுத்து அனுப்ப வேண்டும்.... எத்தனை எத்தனையோ தூரத்துக்கு அவள் போயிருந்தாலும் சரி, அது அவளுக்குக் காதில் விழும்.

ரெகவரி அறைக்கு வெளியே அவளுக்கு அங்கியும் முகமூடியும் மாட்டியபின் உள்ளே அனுப்பினார்கள்.

தலை மொத்தமும் கட்டுப் போட்டு, கருவிகளும் ட்யூப்களும் சூழ்ந்திருக்கப் படுத்திருந்தாள் ஆலிஸன். திடீரென்று அவள் மிகவும் சின்னவளாக ஆகிவிட்ட மாதிரி இருந்தது. இதற்கு முன் எப்போதும் காணப்படாத அமைதி அவள் முகத்தில் தவழ்வது போல இருந்தது.

ஒரு முக்காலி கொண்டு வந்தார்கள். அதில் உட்கார்ந்து, "ஆலி... என் கண்ணே...." என்று சொன்னபடி அவளுடைய விரல்களைப் பிடித்துக் கொண்டாள்.

விரலும் கையும் விறைத்துப் போயிருப்பது தெரிந்தது. மூளை பாதிக்கப் பட்டிருப்பதன் விளைவு அது என்று பேஜுக்குப் புரிந்தது.

ஒரு நர்ஸ் அவளிடம் குனிந்து, "உங்கள் கணவரைப் போனில் கூப்பிட்டோம்" என்றாள்.

"வருவதாகச் சொன்னாரா?"

"இல்லை. உங்கள் பையனைத் தனியாய் விட்டுவிட்டு வர முடியவில்லை என்றார்."

(தாய் தொடர்வாள்.....)

**சென்ற வாரம்**

இரவு பேஜ் பிராட்டுடன் தூங்கவில்லை. காலையில் ஆஸ்பத்திரிக்குச் சென்று அங்கு ஆலிஸனுக்கு ஆபரேஷன் செய்ய அனுமதி அளித்து விட்டு முடிவுக்காகக் காத்திருக்கையில் டாக்டர்கள் ஆபரேஷனை வெற்றிகரமாக முடித்திருந்தார்கள். ஆனாலும் ஆலிஸன் இன்னும் கோமா நிலையிலேயே இருக்கிறாள்...

# ஒரு கிராமத்துப் பறவையும் சில கடல்களும்



3

சார்பு வாழ்க்கை உடைகிற போது பந்தபாசம் எனும் பழைய விலங்குகள் உடைந்தே தீரும்.

நம்முடைய சமூக மரபில் பாசம் கண்ணீர் என்று கோயில் கட்டிக் கும்பிடுகிறோமே - அவை பெரும்பாலும் சொத்துக்களோடும் மரணங்களோடும் சம்பந்தப்பட்டவை.

உத்தரவாதமற்ற ஒரு வாழ்க்கை அமைப்பில் அச்சத்தில் பிறக்கிறோம்; அச்சத்தில் வாழ்கிறோம்; அச்சத்தில் இறக்கிறோம்.

கல்யாணத்துக்கும் சாவுக்கும் ஆள் சேர்க்கும் ஆசையில் நித்தம் ஒருமுறை செத்துப் பிழைக்கிறோம்.

பணம் இல்லாதவன் பிணம் என்பதனால் பணம் சம்பாதிக்கவே பிணமாகிறோம்.

முதுமையின் மருத்துவச் செலவுக்கு இளமையை விற்கிறோம்.

உழைத்து உழைத்துத் துய்க்காமல் சேர்த்து வைத்த காசை உழைக்காத பிள்ளைகளுக்கு விஷமாக்கி விட்டுப் போகிறோம்.

கடவுள் - அரசாங்கம் - உறவுகள் - சக மனிதர்கள் யாரும் தர முடியாத உத்தரவாதத்தைத் தேடித் தேடியே தேய்ந்து கழிக்கிறோம்.

அந்த ஜன்னலோர மூதாட்டி எனக்குள் ஆயிரம் அலைகளை எழுப்பினாள்.

அவள் கணவன் இருக்கிறானா இல்லையா தெரியாது. அவளுக்குப் பிள்ளைகளின் உறவு உண்டா தெரியாது.

அவள் உள்ளமென்ற கிண்ணத்தில் ஊற்றிவைத்த வாழ்க்கை நிறைந்து நிற்கிறது. அவள் உலகம் முழுக்க அவளுடையது.

அவன் தன் கிரெடிட் கார்டை எடுத்து அலட்சியமாக நீட்டுவதைப் பார்த்தால் யாருடைய தயவும் அவளுக்குத் தேவையில்லை.

அவளிடம் உதவிகோரும் நிலையிலும் உறவுகளோ உலகமோ இல்லை.

எனவே, போலிகள் அவளைச் சுற்றிப் புற்று கட்டவில்லை.

அநேகமாகக் கல்லறைக்கும் கூடக் காசுகட்டி முன்பதிவு செய்திருப்பாள்.

காட்டுப் பழங்களில் செய்த கேக் ஒன்று சாப்பிட்டோம்; காபி குடித்தோம்.

வெளியே ஒரு மினி மழை. ஆசைப்பட்டது மனது.

நனையலாமா? கூடாதா? யார் பார்ப்பது? யார் கேட்பது?

ஓடிப்போய் தலைகொடுத்தேன்; குளிர்ந்தது; ஓடிவந்துவிட்டேன்.

சொர்க்கம்தான்!

பொன்னை உரமிட்டுப் பூ வளர்க்கும் பூமிதான்!

வளமான வாழ்வுதான்!

ஆனாலும் புறத்தில் மகிழ்ச்சியிருந்தும் அகத்தில் மகிழ்ச்சியில்லாமல் இருக்கிறார்கள் ஈழத் தமிழர்கள்.

உயிர் - ஈழத்தில் முட்களோடு;

உடல் - சொர்க்கத்தின் பூக்களோடு.

தாயகக் கனவுகள் குறையவில்லை கண்ணில்; அகதி என்ற வடு ஆறவில்லை நெஞ்சில்.

புங்குடு தீவு மக்கள் விழிப்புணர்வு ஒன்றியக் கலை விழாவில் அந்த அகதி என்ற சொல்தான் என்னை ஆவேசம் கொள்ள வைத்தது. விழாவின் நிறைவுரையில் சொன்னேன்.

"சொல்லாதீர் தமிழர்களே! அகதி என்று சொல்லாதீர்கள்!"

இந்த அரங்கம் வழியவழிய தமிழ்ப் பண்பாட்டோடும் இன அடையாளங்களோடும் கூடி நிற்கும் தமிழர்களே! உங்களில் யாரையும் அகதி என்று சொல்லாதீர்கள்!

வட சொற்கள் சிலவற்றில் மொழி முதலில் அகரம் சேர்த்தால் எதிர்ப்பதமாகும். நீதி - அநீதி, தர்மம் - அதர்மம், சுத்தம் - அசுத்தம் என்ற வரிசையில் கதி அற்றவன் அகதி என்று சுட்டப்படுகிறான். உங்களில் யாரும் கதி அற்றுப் போகவில்லை. நீங்கள் தாயகத்தைத்தான் விட்டு விட்டு வந்தீர்களே தவிர, தமிழை விட்டுவிட்டு வரவில்லை; தன்னம்பிக்கையை விட்டு வரவில்லை. தாய்மொழியையும் தன்னம்பிகையையும் இழந்தவன் எவனோ அவனே அகதியாகிறான்.

யாழ்ப்பாணத்திற்கருகே சிதறிக் கிடக்கும் சிறு தீவுகளுள் ஒன்றான புங்குடுதீவிலிருந்து புறப்பட்டு வந்த இலட்சிய இளைஞர்கள் மண்ணையும் ஊரையும் மறக்காமல் தங்கள் ஊர்ப்பெயர் கொண்டே அமைப்பை நிறுவியிருக்கிறீர்கள். உங்கள் அனைவருக்கும் குறிப்பாக என்னைச் சென்னையில் கண்டு வற்புறுத்தி வரவழைத்த மீசை வைத்த குழந்தையான நண்பர் வடிவேலுவுக்கும் என் வாழ்த்துக்கள்.

புங்குடு தீவு என்பதன் பெயர்க் காரணம் கேட்டேன். ஆளுக்கொன்று சொன்னார்கள்.

"புங்குடு தீவு" என்பது ஒரு காலத்தில் "பொன் கொடு தீவு" என்று இருந்திருக்கலாம். அல்லது "பூங்கொடித் தீவு" என்று இருந்திருக்கலாம். புங்கை மரங்கள் அங்கே மிகுந்திருப்பதாகவும் சொன்னார்கள். எனவே 'புங்கைத் தீவு' என்றும் இருந்திருக்கலாம். காலப்போக்கில் இவையாவும் மருவி புங்குடுதீவு என்று ஆகியிருக்கலாம். இவை எல்லாவற்றையும் விடப் புதியதொரு காரணப் பெயர் புலனாகிறது. தமிழ்ப் புலிகளின் தனிப் பெரும் தலைவர் பிரபாகரனின் துணைவியார் பிறந்தது புங்குடுதீவுதானாம். எனவே புங்குடுதீவு என்பதை இன்றைய சூழலில் 'பிரபாகரனுக்குப் பெண் கொடு தீவு' என்று கருதவும் இடமிருக்கிறது" என்றேன்.

அரங்கம் பொங்கி வழிந்து என்மேல் சிந்தியது; தொடர்ந்து பேசினேன்.

தமிழ்நாட்டின் உணர்வுள்ள தமிழர்கள் இலங்கைத் தமிழர்கள் மீது பரிவோடும் பாசத்தோடும்தான் இருக்கிறார்கள்.

*(தொடரும்...)*

*நன்றி :– திருமதி வைரமுத்து*

# குட்டை ஏணியில் ஏறியவர்

கிரமி விருது பெற்ற புகழ்பெற்ற பாடகியான அசான்த்தி தனக்கு வஞ்சகம் செய்துவிட்டதாக இசைத்தட்டு தயாரிப்பாளரான 'ஜெனாட் பாக்கர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அசான்த்தி தனது ஏணியின் ஊடாக ஏறியதாகக் கூறும் பாக்கர், அசான்த்திக்கு எதிராக டொலர் மில்லியன்கள் பல கோரி தற்போது வழக்குத் தாக்கலும் செய்துள்ளார்.

38 வருடங்களுகத்கு முன்பதாக பாடலொன்றைப் பாடவோ, ஏன் 'மைக்கைப் பிடிப்பதற்குக் கூடத் தெரியாமல் இருந்த அசான்த்திக்கு அனைத்தும் கற்பித்துக் கொடுத்தது. நான் தான் என்றார் பாக்கர்.

அசான்த்தியின் முதலாவது பாடல் அல்பம் இரண்டும் 6 மில்லியன் பிரதிகள் வரை விற்பனையாகியுள்ளன. இதில் ஒரு சதமேனும் தனக்குக் கிடைக்கவில்லை என்பது தான் பாக்கரின் குற்றச்சாட்டு. இந்தக் குற்றச்சாட்டை அசான்த்தி நிராகரித்துள்ளார்.

"நான் அவரது ஏணியில் ஏறிச் சென்றது உண்மை என்றாலும் நானதை எட்டி உதைக்கவில்லை. அதுவும் அது ஒரு குட்டையான ஏணி" என்கிறார் அசான்த்தி.



# உரிமை மடல்...21

மலை தடை கடந்து
புயலிடை எழுந்து
உங்களுக்காக
ஓர் உரிமை மடல்!

உண்மை எதுவென உரத்த குரலெடுத்து
உன்னத வழிகாட்டி எழுதும்
உரிமை மடல்!

இது
செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ்
தேவானந்தா அவர்கள்
இடர் படும் எம் தேசத்து மக்களுக்காக எழுதும்
தொடர் மடல்!...

அன்பான எம் தேசத்து மக்களே!

என் உயிரினும் மேலான பாச மிக்க எம் தோழர்களே!

உலகெங்கும் பரந்து வாழும் எம் தாயகத் தேசத்து உறவுகளே!

***உங்களுக்கு வணக்கம்!....***

இந்த உரிமை மடல்! எனது குரல் மட்டுமல்ல!

மாற்றத்தை விரும்பும் மக்களாகிய உங்களது மகிழ்ச்சிக்காக இந்த மண்ணில் என்றும் இருக்கும் ஈ.பி.டி.பி.யின் குரல்!

இது ஈ.பி.டி.பி.யின் குரல் மட்டுமல்ல!... எமது தாயக தேசத்தின் குரல்!

மக்களாகிய உங்களது மாற்றுக் குரல்! உங்களது உரிமைக் குரல்!

மீண்டும் ஒரு உரிமை மடலில் உங்களைச் சந்திக்கின்றேன்!

துப்பாக்கிக் குழாயிலிருந்து பிறக்கின்ற அரசியல் அதிகார வெறிக்கு முடிவுகட்டவே நாங்கள் விரும்பி உழைக்கிறோம்! ஏனென்றால் மக்களாகிய உங்களது இன்றைய விருப்பங்களும் அதுதான்!

ஆனாலும், யுத்தத்தின் மீதும் துப்பாக்கிக் குழாயிலிருந்து பிறக்கின்ற வன்முறை மீதும் மோகம் கொண்டவர்கள் மக்களாகிய உங்களது விருப்பங்களுக்குத் தடையாக எழுந்து நிற்கின்றார்கள்!

புரிந்துணர்வு ஒப்பந்தம் எழுதப்பட்டும் இதுவரை எண்ணற்ற மனித உயிர்கள் புலிகளால் குருதியில் சரிக்கப்பட்டன!

இது சமாதான காலம்! அல்லது புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கும் காலம் என எண்ணி நீங்கள் நிம்மதியான நித்திரையை இதுவரை கண்டதாக இல்லை!

விடிந்தால் எங்கு கொலை விழும்?... எங்கிருந்து மரணச் செய்தி வரும்? என்ற ஏங்கங்களோடு மட்டும்தான் நீங்கள் நித்திரைக்குச் செல்கின்றீர்கள்!

இவைகள் குறித்து ஈ.பி.டி.பி.யினராகிய நாம், மக்களாகிய உங்களோடு சேர்ந்து உங்கள் துயரத்தில் - ஏக்கத்தில் பங்கெடுத்துக் கொள்கின்றோம்!

இந்த மண்ணில் தொடரும் கொலைப் பட்டியலில் இறுதியாக நடந்த படுகொலை வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மீதான படுகொலையாகும்!

வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்டமை ஒரு அப்பட்டமான மனித உரிமை மீறலாகும்!

மனிதப் படுகொலைகளை யார்மீது யார்தான் நிகழ்த்தினாலும் அதை நாகரீகமடைந்த எந்தவொரு மனித சமூகமும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை!

சமாதானத்தை உளப்பூர்வமாக நேசிக்கும் எந்தச் சக்தியும் இந்தக் கொலையைப் புரிந்திருக்க வாய்ப்பில்லை!

இவ்வாறான படுகொலைகளை ஈ.பி.டி.பி.யினராகிய நாம் அன்றிலிருந்து இன்று வரை - அதை யார் செய்தாலும் - வன்மையாகக் கண்டித்தே வந்திருக்கிறோம்!

அந்த வகையில் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட அமைச்சர் கதிர்காமர் மீதான படுகொலையை ஈ.பி.டி.பி.யினராகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்!

இனப் பிரச்சினைத் தீர்வுக்காக ஆற்ற வேண்டிய பணிகள் நிறையவே உண்டு! அதற்காகக் கனிந்து வந்த சந்தர்ப்பங்களைச் சரிவரப் பயன்படுத்த வேண்டிய கடமையும் எம்முன்னால் விரிந்து கிடக்கின்றது.

சந்தர்ப்பங்களைச் சரிவரப் பயன்படுத்தி இனப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காணும் முயற்சிக்கான பாதையை முழுமையாக இறுக மூடிவிட்டு, இதுபோன்ற படுகொலைகளை நடத்துவதன் மூலம் வஞ்சம் தீர்த்துக்கொள்ள முடியுமே அன்றி மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியாது!

தனி மனிதப் படுகொலைகள் மூலம் குறித்த இலக்கை அடைய முடியுமென்றால் புலிகள் என்றோ அந்த இலக்கை எட்டியிருக்கவேண்டும்!

1970களின் நடுப் பகுதியில் புலிகளால் ஆரம்பித்து வைக்கப்பட்ட படுகொலை கலாசாரம் என்பது இன்றுவரை தொடர்ந்த வண்ணம் உள்ளது! ஆனால் இத்தகைய படுகொலைகள் மூலம் எந்தவொரு இலக்கையும் அல்லது முன்னேற்றத்தையும் புலிகள் இதுவரை கண்டிருக்கவில்லை!

இதனால் தீர்வின்றி இழுபட்டுச் செல்லும் இனப் பிரச்சினை என்பது மேலும் சிக்கலுக்கு உள்ளாக்கப்பட்டு வருகிறது என்பதே உண்மையான விடயமாகும்!

மேலும் கொலையினைப் புரியும் சக்திகள்மீது சர்வதேச உலகம் பயங்கரவாதிகள் என்ற முத்திரை குத்தவே இக்கொலைகள் வழி வகுக்கும்!

அண்மையில் மக்களாகிய உங்கள் மத்தியிலிருந்து என் தேசத்து சாதாரண குடிமக்கள் சிலர் என்னைச் சந்தித்துப் பேசினார்கள்!

அதில் ஒருவர் பேசிய கருத்துக்கள் என்னையும் அதிர்ச்சியில் உறைய வைத்தன!

புலிகளின் ஜனநாயக விரோத நிலைப்பாட்டை எதிர்த்து கருத்துக் கூறும் அந்த மனிதர் கூறிய வார்த்தைகளை உங்களோடு பகிர்ந்து கொள்ளலாம் என நினைக்கின்றேன்!

அந்த மனிதர் என்னிடம் கூறிய வார்த்தைகள் என்னை அதிர வைத்தன!

**“பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியை புலிகள் படுகொலை செய்ததை நான் வரவேற்கின்றேன்” என்றார்!**

**“ஏன் அப்படிக் கூறுகிறீர்கள்?.... அது ஒரு அப்பட்டமான - யாரும் ஏற்றுக்கொள்ள முடியாத - படுகொலை தானே!... அதை நியாயப்படுத்தி ஏன் கதைக்கிறீர்கள்?” என்று அவரிடம் கேட்டேன்!**

**“இல்லை! ராஜீவ்காந்தியை புலிகள் படுகொலை செய்திருக்காவிட்டால் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு சர்வதேச நாடுகள் செங்கம்பளம் விரித்து வரவேற்பு நடத்தியிருக்கும்!**

**புலிகளின் உண்மை முகம் அறியாமல் அவர்களுக்கு சர்வதேச நாடுகள் அங்கீகாரம் வழங்கியிருக்கும்! ஒரு போலியான தலைமைக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைப்பதன் ஊடாக அவர்கள் எங்களை அடக்கி ஆள்வதற்கான சர்வதேச அங்கீகாரத்தையும் பெற்றிருப்பார்கள்” என்றார் அவர்!**

அவருடைய கருத்தை நான் ஏற்றுக்கொண்டிருக்கவில்லை! ஆனால் அவரது மனத் தாக்கத்தினை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது!

அவர் இறுதியாக என்னிடமிருந்து விடைபெறும்போது, பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி மீதான படுகொலை என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றுதான்! ஆனால் அந்தக் கொலையின் தாக்கத்தைப் புரியும்படியாக தான் எடுத்துக் கூறியதாக என்னிடம் கூறிச் சென்றார்!

அவரது கருத்தைக் கேட்கும்போது எனக்கு ஒரு வகையான அதிருப்தி ஏற்பட்டது என்பது உண்மைதான்!

ஆனாலும் புலிகள் புரிந்த ஒரு படுகொலையானது எமது போராட்டப் பாதையில் எந்த வகையான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதைத்தான் அவர் சூசகமாக எனக்கு எடுத்து விளக்கி, என்னிடமிருந்து விடைபெற்றுக் கொண்டார்!

அந்த இடத்தில் புலிகள் குறித்து நான் கொண்டிருக்கும் கருத்து சரியான ஒன்றுதான் என்பதை மறுபடியும் உறுதிப்படுத்தியிருந்தேன்!

புலிகள் பொல்லைக் கொடுத்து அடி வாங்கும் பேர்வழிகள் என்பதை நான் மறுபடியும் உறுதி செய்து கொண்டேன்!

**எம் இனிய மக்களே!**

பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தியை புலிகள் கொன்றொழித்த பின்புதான் எமது நட்பு நாடான இந்தியா புலிகளைத் தடைசெய்து பயங்கரவாத இயக்கமாகப் பிரகடனப்படுத்தியிருந்தது!

அன்று - பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியை புலிகள் படுகொலை செய்திருக்காவிட்டால்.....

அமெரிக்கா புலிகளைத் தடை செய்திருக்காது!

கனடா புலிகளைத் தடை செய்திருக்காது!

பிரித்தானியா புலிகளைத் தடை செய்திருக்காது!

அவுஸ்திரேலியா புலிகளைத் தடை செய்திருக்காது!

மலேசியா புலிகளைத் தடை செய்திருக்காது!

ஆனால் இன்று...... புலிகள் இந்தியாவில் கால் வைக்க முடியாது!

கனடாவில் கால் வைக்க முடியாது!

அவுஸ்திரேலியாவில் கால் வைக்க முடியாது!

மலேசியாவில் கால் வைக்க முடியாது!

பிரித்தானியாவில் கால் வைக்க முடியாது!

‘புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அந்த நாட்டுப் பிரஜை என்ற காரணத்தினால், அவரைத் தவிர,

யானை தனது தலையில் புழுதியை அள்ளிப் பூசிக்கொண்டது போல் புலிகளும் நடந்து கொண்டார்கள்! இன்னமும் நடந்து வருகின்றார்கள்!

புலிகள் தாங்கள் பயங்கரவாதிகள் தான் என்பதை மறுபடி ஒரு முறை நிருபிப்பதற்காகவே இன்று வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை படுகொலை செய்திருக்கிறார்கள்!

புலிகள் பயங்கரவாதிகளாக சர்வதேச நாடுகளில் தங்களைத் தாங்களே முத்திரை குத்திக்கொண்டது வேறு விடயம்!

புலிகள் தங்களைப் பயங்கரவாதிகளாகக் காண்பிக்கும் அதே வேளை, மக்களாகிய உங்களையும் பயங்கரவாதிகளாகவே இன்று காண்பித்து வருகின்றார்கள்!

ஆனால் ஈ.பி.டி.பி.யினராகிய நாம், புலிகள் வேறு; மக்களாகிய நீங்கள் வேறு என்பதைத் தான் சர்வதேச சமூகத்திடம் தெளிவாக விளக்கி வருகின்றோம்.

எமது மக்களாகிய உங்களுக்கு ஒரு கௌரவமான அரசியல் தீர்வு வழங்கப்படவேண்டும் என்று கருதி இன்று சர்வதேச நாடுகள் பலவும் ஊக்கமுடன் செயற்பட்டு வருகின்றன. அதற்காகவே சர்வதேச நாடுகளின் பார்வை இன்று எமது தேசத்தின் பக்கம் குவிந்து நிற்கின்றது!

ஆனால் தாம்தான் தமிழ் பேசும் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்றும் மக்களெல்லாம் தம் பக்கம் என்றும் சர்வதேச உலகுக்குக் கூறி வருவதன் மூலம் புலிகள் மக்களாகிய உங்களது முகங்களில் பயங்கரவாத முத்திரையினைக் குத்தி வருகின்றார்கள்.

அன்பார்ந்த மக்களே!

தமிழ் பேசும் மக்கள் மனித நாகரீகத்தை விரும்புகின்றார்கள் என்பதை நீங்கள் உலகுக்கு உணர்த்த வேண்டும்!

மனிதப் படுகொலைகள்மீது வெறுப்புக் கொண்டவர்கள் என்பதை நீங்கள் உலகுக்கு உணர்த்த வேண்டும்!

எரிகின்ற இனப் பிரச்சினைக்குத் தீர்வு தேடுவோரே அன்றி, மனிதப் படுகொலைகளை அங்கீகரிப்பவர்கள் அல்ல என்பதை நீங்கள் உலகுக்கு உணர்த்த வேண்டும்!

மக்களாகிய நீங்கள் புலிகளிலிருந்து தொடர்ந்தும் விலகியிருப்பதன் ஊடாகவே அதை நீங்கள் உலகுக்கு உணர்த்த முடியும் என்பதை நான் கூறி வைக்க விரும்புகிறேன்!

இன்று அமைச்சர் கதிர்காமரின் படுகொலையை சர்வதேச சமூகம் வன்மையாகக் கண்டித்து வருகிறது!

இந்தப் படுகொலை குறித்து இந்தியா கண்டனம் தெரிவித்திருக்கிறது

அமெரிக்கா கண்டனம் தெரிவித்திருக்கிறது!

நோர்வே கண்டனம் தெரிவித்திருக்கிறது!

கொபி அனான் கண்டனம் தெரிவித்திருக்கிறார்!

கண்காணிப்புக்குழு கண்டனம் தெரிவித்திருக்கிறது!

சர்வதேச சமூகமே இன்று கண்டனம் தெரிவித்திருக்கின்றது!

இலங்கையின் அநேகமான அரசியல் கட்சிகளும் கண்டனம் தெரிவித்திருக்கின்றன!

இதனால் ஏற்படப்போகின்ற விளைவுகள் வேறொன்றும் இல்லை! தீர்வின்றி சிக்கலான பாதையில் இழுபட்டுச் செல்லும் எமது மக்களாகிய உங்களுக்கான விடுதலை என்பது மேலும் கேள்விக்கிடமாகி வருகிறது!

நேசத்திற்குரிய எம் தேசத்து மக்களே!

படுகொலைகளைப் புரிந்துவிட்டு புலிகள் இன்று அதை மறுத்து வருகிறார்கள்!

புலிகள் இதுவரை புரிந்த எந்தவொரு கொலைக்கும் உரிமை கோரியிருக்கிறார்களா என நான் கேட்கின்றேன்!

பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தி மீதான படுகொலைக்கு உரிமை கோரினார்களா?

ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் காமினி திசாநாயக்கா மீதான படுகொலைக்கு உரிமை கோரினார்களா?

லலித் அத்துலத் முதலி மீதான படுகொலைக்கு உரிமை கோரினார்களா?

றஞ்சன் விஜயரத்தின அவர்களின் கொலைக்கு உரிமை கோரினார்களா?

ஜனாதிபதி பிரேமதாசா அவர்கள் மீதான படுகொலைக்கு உரிமை கோரினார்களா?...


தமிழ் தேசியத் தலைவர் அமிர்தலிங்கம், சட்ட வல்லுனர் டாக்டர் நீலன் திருச்செல்வம், பாராளுமன்ற உறுப்பினர் தங்கத்துரை, யாழ். மாநகர சபை முதல்வர்கள் சறோஜினி யோகேஸ்வரன், பொன். சிவபாலன் - இவ்வாறு பலர். புலிகள் எந்தப் படுகொலைக்கும் இதுவரை உரிமை கோரவில்லை என்பதுதான் உண்மை!

**அண்மையில் நடந்த மற்றுமொரு மனதை உருக்கும் படுகொலை வானொலி அறிவிப்பாளர் றேலங்கி மீதான படுகொலையாகும்! பச்சிளம் குழந்தையொன்றை தவிக்க விட்டு இன்று தந்தையும், தாயும் புலிகளின் கொலை வெறிக்குப் பலியாக்கப்பட்டிருக்கிறார்கள்!**

**இவைகளுக்கெல்லாம் புலிகள் உரிமை கோரியிருக்கவில்லை!**

காற்றுப் புக முடியாத இடத்திலும் புகுந்து விளையாடுவார்கள் புலிகள் என்று வீரப்பிரதாபம் பேசும் புலிகள்.....

அதிக பாதுகாப்பு நிறைந்த வலயத்தினுள் சென்று அமைச்சர் கதிர்காமரை தாம் எப்படிக் கொலை செய்திருக்கமுடியும் என முன்னுக்குப்பின் முரணான கருத்தையே வெளியிட்டு வருகின்றார்கள்!



டக்ளஸ் தேவானந்தா

புலிகள் புரிந்து வரும் படுகொலைகள் எந்த விதத்திலும் நியாயப்படுத்த முடியாதவைகள் என்பதை புலிகளே ஏற்றுகொண்டு வருகிறார்கள்!

அவர்கள் புரிந்துவரும் படுகொலைகளில் நியாயம் இருக்குமென்றால் அக்கொலைக்கான பொறுப்பை அவர்கள் ஏற்றுக் கொண்டிருப்பார்கள்!

புரிகின்ற கொலைகள் மீது எந்த நியாயங்களும் இல்லை என்பதால் மட்டுமே அவர்கள் எந்தக் கொலைக்கும் உரிமை கோர மறுத்து வருகிறார்கள்!

நேசத்திற்குரிய எம் தேசத்து மக்களே!

புலிகளின் பாசிசப் போக்கை எதிர்ப்பவர்கள், தமிழ் பேசும் மக்களின் எதிரிகளாகப் புலிகளால் காண்பிக்கப்பட்டு வருவது என்பதே இன்று வரையிலான புலிகளின் வரலாறாகும்!

புலிகளின் பாசிசப் போக்கிற்கு எதிரான நிலைப்பாட்டினைக் கொண்டிருந்த அமைச்சர் கதிர்காமர் அவர்களும் தமிழ் பேசும் மக்களின் எதிரியாகவே புலிகளால் சித்திரிக்கப்பட்டு வந்தவர் ஆவார்!

ஆனால் இறுதியாக ஜனாதிபதி அவர்கள் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் பொதுக் கட்டமைப்பு குறித்து எடுத்திருந்த உறுதியான நிலைப்பாட்டினை அமைச்சர் கதிர்காமர் அவர்கள் வெளிப்படையாக ஆதரித்து நின்றவர்.

ஆகவே இதுபோன்ற படுகொலைகள் இனப் பிரச்சினை தீர்வுக்கு எதிராக தென்னிலங்கையில் இருக்கும் எச்ச சொச்ச பேரினவாதத்திற்கு இன்னமும் உரமூட்டுவதாகவே அமையும்!

படுகொலைகளை நிறுத்துவதற்காக சர்வதேச சமூகமும் மனித உரிமை அமைப்புகளும் விரைந்து செயலாற்ற வேண்டும்! இன்றேல் சிக்கலடைந்து இறுகிப் போயிருக்கும் இனப் பிரச்சினைக்கான தீர்வு நோக்கிய பாதை என்பது இன்னமும் இருட்டில் தள்ளப்படும் ஆபத்தே இதில்காத்திருக்கும்!

மீண்டும் மறுமடலில் திட்டங்களோடு சந்திப்போம்!

***திட்டங்கள் எங்களது! தீர்மானங்கள் உங்களது!***
***மத்தியில் கூட்டாட்சி! மாநிலத்தில் சுயாட்சி!***
*எமது தாயக பூமிக்கு விசேட அதிகாரங்கள்!*
*முஸ்லிம் மக்களுக்கு அகச்சுயாதிக்க அலகு!*
*மலையக மக்களுக்கு அரசியல் அதிகார ஏற்பாடு!*
*தேசத்திற்காகத் தியாகங்களை ஏற்போம்!*
*என்றும் நாம் மக்களுக்காக!*

*பிரியமுடன்.......*
*செயலாளர் நாயகம்*

*தோழர் டக்ளஸ் தேவானந்தா...*

நன்றி :- இதயவீணை

# மூட்டப் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## புளொட் இயக்கத்தை இலங்கை அரசு சீரழித்தது

சென்னையில் செயற்பட்டுவந்த தமிழீழ இயக்கங்களுக்குள் ஊடுருவி நிலைமைகளை புலனாய்வு செய்யும் பொறுப்பைக் கையேற்றதிஸ்ஸ ஜெயக்கொடி கொழும் பில் தேசிய பந்தோ பஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலியையும் ஜனாதிபதி ஜெயவர்த்தனவையும் சந்தித்துப் பேசிய பின்னர் சென்னை திரும்பி தனது அலுவல்களை ஆரம்பித்தார். தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. ஆகியவற்றில் அங்கம் வகித்த பலரோடு ஜெயக்கொடி நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார். தி.மு.க.வின் முக்கிய பிரமுகரான நாஞ்சில் மனோகரனுடன் நெருங்கிய தொடர் புகளை ஏற்படுத்திக் கொண்டார். ஆனால் தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதியோடு உறவுகளை ஏற்படுத்த அவர் எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. புதுடில்லியில் உயர் ஸ்தானிகராக இருந்த பேர்னாட் திலகரட்னவுக்கும் தமிழக முதல்வர் எம்.ஜி. இராமச்சந்திரனுக்கு மிடையில் பல சந்திப்புக்களை அவர் ஏற்படுத்திக் கொடுத்தார். இவ்வாறான முதல் சந்திப்பு 1985ஆம் ஆண்டின் ஆரம்ப காலங்களில் இடம்பெற்றது. இச் சந்திப்பின்போது கண்டியில் தான் வாழ்ந்த ஆரம்பகால நினைவுகளையும் இலங்கை மீது தான் கொண்டிருக்கும் மதிப்புப் பற்றியும் எம்.ஜி.ஆர்., உயர் ஸ்தானிகர் பேர்னாட் திலகரட்னவுக்கு எடுத்துக் கூறினார். தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண இலங்கை அரசாங்கம் ஏதாவதொரு வகையில் முயற்சிக்குமென்றால் தான் வெளிப்படையாகவே திஸ்ஸ ஜெயக்கொடிக்கு உதவத் தயாராக இருப்பதாக எம்.ஜி.ஆர். உறுதியளித்தார். உயர் ஸ்தானிகர்களுடன் தான் நடத்திய பேச்சுவார்த்தை குறித்து தனது கைப்படவே குறிப்பொன்றினை எழுதி ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு அனுப்பி வைப்பேனென்றும் எம்.ஜி.ஆர்.சொன்னார். ஆனால், உயர் ஸ்தானிகர் களுக்கும் எம்.ஜி.ஆருக்குமிடையில் நடந்த சந்திப்புகளின் மூலம் எவ்வித பயனும் ஏற்படவில்லை.




ஈரோஸ் இயக்க முக்கியஸ்தர்களான இரட்ன சபாபதி மற்றும் பாலகுமார் ஆகியோருடன் திஸ்ஸ ஜெயக்கொடி உறவுகளை ஏற்படுத்திக்கொண்டார். புளொட் அமைப்பைச் சேர்ந்த உமா மகேஸ்வரன் மற்றும் ஷேர்லி கந்தப்பா ஆகியோருடனும் ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பைச் சேர்ந்த வரதராஜப்பெருமாள் ஆகியோருடனும் உறவுகளை ஏற்படுத்திக் கொண்டார். ஆனால், புலிகள் இயக்கம் மற்றும் ரெலோ அமைப்பு முக்கியஸ்தர்களுடன் அவரால் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள முடியவில்லை. திஸ்ஸ ஜெயக்கொடி சென்னைக்கு அனுப்பப்பட்டபோது இலங்கை வாழ் தமிழர்கள் மத்தியில் புளொட் இயக்கமே பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தது. இந்த இயக்கம்தான் அப்போது மிகச் சிறந்த முறையில் ஸ்தாபனமயப்படுத்தப்பட்டிருந்தது. கூடியளவு ஆயுத, உபகரண வசதிகளையும் கொண்டிருந்தது. இந்த இயக்கத்தைப் பலவீனப்படுத்துவதும் இதன் மீது இந்தியா கொண்டிருந்த செல்வாக்கை இல்லாமல் செய்வதுமே அப்போது கொழும்பு அரசாங்கத்தின் பெருவிருப்பாக அமைந்திருந்தது. இந்த இரு இலக்குகளையுமே

**புளொட் இயக்கத்தைப் பலவீனப்படுத்தும் நடவடிக்கைகள் இலங்கை அரசினால் ஜெர்மனியிலேயே மேற்கொள்ளப்பட்டன. இதற்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர்கள் அமைச்சர் அத்துலத்முதலியும் மார்க் பெர்னாண்டோ என்பவரும்தான். பிராங்போர்ட் விமானநிலையத்திலும் சுவிஸ் எல்லைக்கருகிலுள்ள ஜெர்மனிய கிராமமொன்றிலும் இது தொர்டபான இரகசியப் பேச்சுகள் மேற்கொள்ளப்பட்டன. அப்போது செல்வாக்கும் சக்திமிக்கதாகவும் திகழ்ந்த புளொட் இயக்கத்தைச் சீரழிப்பது இலங்கையின் நோக்கமாகவிருந்தது. இதற்காக புளொட் இயக்கத்துக்கும் இந்தியாவுக்குமிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்துவதில் இலங்கை அரசு வெற்றி கண்டது.**

(அரசியல் தொடர்)

கொழும்பு அரசாங்கம் ஈட்டிக் கொண்டமை ஆச்சரியமானதுதான். இதற்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர்கள் மார்க் பெர்னாண்டோ என்பவரும். தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலியும்தான். பிராங்போர்ட் விமான நிலையத்தில் மார்க் பெர்னாண்டோ இது தொடர்பாகப் பல இரகசிய சந்திப்புக்களையும் கூட்டங்களையும் நடத்தினார். இதேவேளை சுவிற்சர்லாந்து எல்லைக்கு அண்மையிலுள்ள ஜேர்மன் கிராமமொன்றில் மார்க் பெர்னாண்டோவும் அமைச்சர் அத்துலத்முதலியும் பல தடவைகள் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர். இச்சந்திப்புகள் பற்றிய விபரங்கள் இலங்கை அரசாங்கத்தினால் பத்திரிகைகளுக்கு இரகசியமாக வழங்கப்பட்டது. இதன் மூலம் புளொட்டின் செயற்பாடுகள் குறித்து இந்தியாவுக்குச் சந்தேகங்கள் ஏற்படத் தொடங்கியது. இதன் எதிர் விளைவாக விரும்பத்தகாத நிகழ்ச்சியொன்றும் ஏற்பட்டது.

எல்.ரீ.ரீ.ஈ.க்கு அதுகாலவரை ஆயுதப் பயிற்சி வழங்க தயக்கம் காட்டிவந்த இந்திய உளவு அமைப்பான 'றோ' புலிகளுக்குப் பூரண ஆதரவு வழங்க முன்வந்தது. உலகிலேயே மிகச் சிறந்த கெரில்லா குழுவொன்றினை இந்தியா உருவாக்கியுள்ளதாக புலிகள் இயக்கத்தைப் பாராட்டும் வகையில் இந்திய பயிற்சியாளர் ஒருவர் பின்னர் தெரிவித்திருந்தார்.

இந்த இரகசியப் பேச்சு வார்த்தை விபரங்கள் பத்திரிகைகளுக்கு கசிந் தமை குறித்து ஜெயக் கொடி ஆதங்கப்பட்டார். புளொட் அமைப்பைப் பலவீனப்படுத்துவது அவருக்கு மகிழ்ச்சி தருவதாக இருக்கவில்லை. பிற்காலத்தில் இது குறித்து அவர் மிகவும் வேதனையடைந்தார். தமிழீழத் தீவிரவாத இயக்கங்களின் பட்டியலிலிருந்து புளொட் இயக்கம் படிப்படியாக அழிக்கப்பட்டமை குறித்து அவர் தனது கவலையை பலரிடம் வெளிப்படுத்தியிருக்கிறார். இருந்தபோதும் அவர் இறக்கும்வரை புளொட் அமைப்புடனும் ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்துடனும் அவர் தொடர்புகளைத் தொடர்ந்தும் வைத்திருந்தார். 'றோ' உளவு அமைப்பின் தென் பிராந்தியப் பிரிவுக்குள் திஸ்ஸ ஜெயக்கொடி வெற்றிகரமாக ஊடுருவிச் செயற்பட்டார். றோ அமைப்பின் சென்னைத் தலைவரான உமா கிருஷ்ணனோடு அவருக்கு ஏற்பட்ட தொடர்பு மிகப் பெரு வெற்றியை அளித்தது. 1985ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை தமிழ் தீவிரவாதக் குழுக்கள் இவை பற்றி எதுவும் அறிந்திருக்கவில்லை. இந்தியாவின் நிலைப்பாடு மாறியமைக்கு ரொமேஷ்

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

பண்டாரியே காரணமென்று இந்த இயக்கங்கள் நம்பிக்கொண்டிருந்தன. புதுடில்லியின் இந்தப் புதிய மாற்றத்தை எம்.ஜி.ஆர்.ஊடாகவே தடுத்து நிறுத்த முடியுமென்று தமிழ் தீவிரவாத இயக்கங்கள் நம்பின. புதுடில்லியுடன் எம்.ஜி.ஆர். கொண்டிருந்த பேரம் பேசும் சக்தியை அதிகரிப்பதன் மூலம் இதனைச் செய்ய முடியுமென்றும் அவை நம்பின. தமிழ் போராட்ட இயக்கங்கள் அனைத்தும் ஐக்கியப்பட வேண்டுமென்று எம்.ஜி.ஆர். 1984ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அறைகூவல் விடுத்திருந்தார். இந்த ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவதன் மூலம் எம்.ஜி.ஆரின் கருத்தைப் பலப்படுத்த முடியுமென்று தமிழீழ இயக்கங்கள் நம்பின. இந்த ஐக்கிய முயற்சிக்கு முக்கிய பங்கு வகித்தவர்கள் ஈ.பி.ஆர்.எல்.எப்.பின் பத்மநாபாவும் ஈரோஸின் பாலகுமாருந்தான். புளொட் இயக்கத்தைத் தவிர ஏனைய நான்கு இயக்கங்களையும் அணிதிரட்டுவதில் இவர்கள் வெற்றிகண்டனர். எல்.ரீ.ரீ.ஈ, ஈ.பி.ஆர்.எல்.எப்., ரெலோ, ஈரோஸ் ஆகிய நான்கு இயக்கங்களும் இணைந்து செயற்பட முன்வந்தன. உமா மகேஸ்வரனின் புளொட் இயக்கத்தை இந்த ஓரணிக்குள் கொண்டு வரக்கூடாதென்று பிரபாகரன் கடுமையான எதிர்ப்பு தெரிவித்தார். ஏனைய நான்கு இயக்கங்களையும் உள்ளடக்கிய புதிய அமைப்புக்கு ஈழ தேசிய விடுதலை முன்னணி (ஈ.என்.எல்.எப்) எனப் பெயரிடப்பட்டது.

இந்தியாவின் கொள்கை மாற்றம் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கமும் கவலை கொண்டிருந்தார். ஆனால் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் இந்தியாவின் பங்களிப்பு நேரடியாக இருக்க வேண்டும் என்ற தனது நிலைப்பாட்டில் அவர் உறுதியாக இருந்தார். 1985ஆம் ஆண்டு மே மாதம் பேச்சு வார்த்தைகள் புதிதாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற கருத்து மேலெழுந்தபோது அமிர்தலிங்கம் மூன்று முக்கிய நிபந்தனைகளை முன்வைத்தார். அவையாவன :-

01. எந்தவொரு பேச்சுவார்த்தையிலும் சகல தீவிரவாதக் குழுக்களும் பங்குபற்ற வேண்டும்.

02. பேச்சுவார்த்தைகள் இந்தியாவுக்கும் - இலங்கைக்குமிடையில் நடைபெற வேண்டும்.

03. எந்தவொரு தீர்வையும் இந்தியா உறுதிப்படுத்த வேண்டும் இவ்வாறு அமிர் வலியுறுத்தியிருந்தார்.

(தொடர்ந்து வழியும்....)




எலும்புக் கூட்டை அனைத்து மாணவர்களும் தேடிக் கொண்டிருக்கிறார்கள். மண்டை இல்லாத எலும்புக் கூடு ஒன்று ஸ்டோர் ரூமிலிருந்து எடுக்கப்படுகிறது. அதேவேளை இன்னொரு கல்லூரியில் மண்டையோடு இருக்கிறது. எலும்புக்கூட்டைக் காணவில்லை என்ற செய்தி கிடைக்கிறது. இதைப் பற்றி மேலும் விசாரணைகள் நடக்கின்றன...

ஏற்கனவே அங்கிருந்த எலும்புக்கூட்டின் தோள்பட்டை எலும்பிலும் அதே போன்ற விரிசல் இருந்தது. அந்த இரண்டும் ஒன்றோடொன்று பொருந்திப் போகிற மாதிரி பார்வைக்குத் தெரிந்தது.

"எனக்கொரு சந்தேகம், சரிதானான்னு டெஸ்ட் பண்ணிப் பார்க்கணும் சார்!" என்றார் ஜான்.

"அதை எப்படி சோதிச்சுப் பார்க்கிறது?" - பிரின்ஸிபால் கேட்டார்.

"..போரன்ஸிக் ஆளுங்க கண்டுபிடிச்சுச் சொல்லுவாங்க; அங்க என்னோட நண்பர் ஒருத்தர் - முரளின்னு பேர். அவரைக் கூப்பிட்டுக் கேட்டா உண்மை தெரிஞ்சுடும். கூட்டிட்டு



வரலாமா?", ஜான் கேட்டார்.

"எதுக்கு சார் நாம இந்த மாதிரி தலைவலியெல்லாம் இழுத்துப் போட்டுக்கணும்? பத்திரிகைக்காரங்களுக்குத் தெரிஞ்சா பரபரப்பா எழுதிடுவாங்க" - பிரின்ஸிபாலுக்கு ஜானுடைய ஐடியாவில அவ்வளவாக ஆர்வமில்லை.

"நீங்க குழப்பிக்காதீங்க, சார். நான் சொன்ன கோணத்தில யோசிச்சுப் பாருங்க. உங்க காலேஜ் லாப்ல இருந்து ஒரு மண்டையோடு காணாமப்

**எழுதுவது**
**சிவன்**

போகுது. அதே நேரம் எங்க காலேஜில எலும்புக்கூட்டோட மண்டையோட்டைத் தவிர மத்ததெல்லாம் காணாமப் போகுது. காணாமல் போன பகுதிகள் என்ன ஆச்சுன்னு யாருக்கும் தெரியலை. அதைவிட ஆச்சரியம், மிஞ்சியிருக்கிற ரெண்டையும் ஒண்ணு சேர்த்தா, பொருந்திப் போகுது! இந்தச் சம்பவம், ஏதோ திகில் படத்துல வர மாதிரி இருக்குது. யோசிச்சுப் பார்த்தா விபரீதமா ஏதோ நடக்கப்போறதுன்னு தோணுது. அந்த விபரீதத்தோட ஆரம்பம்தான் இந்தச் சம்பவம்னு ஏதோ உள்ளுணர்வு சொல்லுது" - ஜான் சர்க்காரியா பிரமிப்பு மாறாமல் கூறினார்.

பிரின்ஸிபால் குழம்பினார்.

"இந்தப் பரிசோதனை அவசியம்னா உங்க விருப்பப்படியே செய்யுங்க!" என்றார், அரைமனதுடன்.

எலும்புக்கூடு பற்றி ஆராய டாக்டர் முரளி வந்து சேர்ந்தார்.

அந்த எலும்புக்கூடும், மண்டையோடும் ஒரே ஆணினுடையதுதான் என்கிற முடிவுக்கு வந்தார்.

இந்தச் செய்தியும் அன்றைய மாலைப் பத்திரிகையில் வெளிவந்தது.

பலருடைய மனதிலும் தோன்றிய கேள்வி ஒன்று தான்.

'ஒரு கல்லூரியிலிருந்த எலும்புக் கூட்டின் மண்டையோடும், மற்றொரு கல்லூரியிலிருந்த எலும்புக்கூட்டின் உடல் பாகங்களும் எங்கே போய்விட்டன? எப்படி மறைந்தன?'

பிரின்ஸிபால் மாத்யூ ஆபிரகாமும் இதைப் பற்றித்தான் யோசித்தார். கடைசியில், குமார் வந்தபிறகு விசாரித்துக் கொள்ளலாம் என்று முடிவு கட்டி, அப்போதைக்கு அமைதியடைந்தார்.

அதே நேரம் ஏற்கனவே இரண்டு நாள் விடுமுறை விண்ணப்பித்திருந்த குமார், மேற்கொண்டு ஒரு வாரம் விடுமுறை கோரி கல்லூரிக்குக் கடிதம் எழுதினார்.

கோயிலிலிருந்து திரும்பும்போது அங்கு ஸ்ரீதேவிக் குட்டியைப் பார்த்த சம்பவம், அவரது மனத்திலிருந்து மறையாமலேயே இருந்தது.

அதைப்பற்றி அவர் வேறு யாரிடமும் மூச்சுவிடவில்லை. மறுபடியும் பிரபாகரனும் குமாரும் ஜோதிடர் கிருஷ்ண குறுப்பை பார்க்கச் சென்றனர்.

"எனக்குத் தெரிய வேண்டியதெல்லாம் ஒரேயொரு விஷயம்தான். எதற்காக தேவிக்குட்டியின் உடம்பில் சௌபர்ணிகா என்ற மோகினி ஆவேசித்தாள்?" என்று கேட்டார் குமார்.

"அதற்கான காரணத்தைத்தான் நான் ஏற்கனவே உங்களிடம் சொல்லிவிட்டேனே; இந்தச் சம்பவத்துக்கு முன்பு என்னென்ன நடந்திருக்கிறதென்று யாருக்குத் தெரியும்?" என்றார் குறுப்பு.

"என்னோட மாமா சந்துநாயர்தான் இந்தச் சம்பவங்களுக்குப் பின்புலமா இருந்திருக்கிறார். குஞ்சுராமன் அப்படித்தான் சொன்னார். அந்த நிமிஷத்துல இருந்து குமாரோட மனம் இதைப்பத்தியே நினைச்சு வருத்தப்படுறதாத் தோணுது. பாதிக்கப்பட்ட அந்தக் குடும்பத்துக்கும், குமாருக்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது. அப்புறம் எதுக்காக இதைப்பத்தியெல்லாம் கவலைப்படணும்?" என்று படபடப்பாகப் பேசினான் பிரபாகரன்.

"நான் நியாயத்துக்காகப் போராட நினைக்கிறேன். பிரபாகரா... உங்க தாய் மாமா இதுல சம்பந்தப்பட்டிருக்கிறதால உனக்கு ஏதாவது பிராப்ளமா?" என்றார் குமார்.

"நல்லா கேட்ட போ. எனக்கும் எங்க மாமாவுக்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது" என்றான் பிரபாகரன்.

"அப்ப ரொம்பவும் நல்லதாப் போச்சு. நான் உங்க மாமாகூட போராடுறதுன்னு தீர்மானிச்சுட்டேன்" என்று உறுதியான குரலில் சொன்னார் குமார்.

பிரபாகரன் சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்தான்!

(வாசனை வீசும்....)

# நடராஜரின் நடனம்!

பலர் சிகரெட் பிடிக்கிறார்கள்!

வேறு பலர் மது அருந்துகிறார்கள்!

இவர்களிடம் போய் "ஏன் சிகரெட் பிடிக்கிறீர்கள்? ஏன் மது அருந்துகிறீர்கள்?" என்று கேட்டுப் பாருங்கள்.

'போரடிக்கிறது.... சிகரெட் பிடிக்கிறேன். சோகத்தை மறக்க மது குடிக்கிறேன்' அல்லது 'ரிலாக்ஸ் பண்ணிக்கொள்ளத்தான் இந்தப் பழக்கம்' என்று காரணங்களைச் சொல்லுவார்கள். இவர்களின் மனநிலையும் உடல்



நிலையும் சோர்ந்து போகும்போது அல்லது டென்ஷனாக இருக்கும்போது அந்த நிலையை அவர்கள் மாற்ற விரும்புகிறார்கள்! இதைச் செய்வதற்கு அவர்களுக்குத் தெரிந்த வழிகள் இதெல்லாம்தான்.

Mind Rhythm அல்லது Body Rhythm இவை இரண்டும் நீண்ட நேரத்துக்கு ஒரே மாதிரியாக ஒரே அலைவரிசையில் இருந்தால் நிச்சயம் போரடிக்கத்தான் செய்யும். சோம்பல் வரத்தான் செய்யும். ஏன் அர்த்தமில்லாத ஒரு சோகம்கூட வந்து கவிந்து கொள்ளும். இந்த மாதிரி நிலை யாருக்கும் மகிழ்ச்சியைக் கொடுப்பதில்லை. அதனால் Mind Rhythm-மும் Body Rhythm-மும் ஏதாவது ஒரு மாற்றம் கிடைத்தால் உற்சாகம் பிறக்கும், மகிழ்ச்சி துளிர்க்கும் என்று சிலர் சிகரெட்டிடமும் மதுவிடமும் போய்ச் சரணடைகிறார்கள்!


சிகரெட்டும் மதுவும் Body Rhythm-ஐ மாற்றுகிறது என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், இவை இரண்டும் கூடவே பல தீய விளைவுகளையும் ஏற்படுத்துகின்றன அல்லவா? சரி, அப்படியென்றால் தீய விளைவுகளே இல்லாத அதேசமயம் Body Rhythm-ஐ மாற்றி உற்சாகம் தரக்கூடியது உலகில் ஏதாவது உண்டா?

உண்டு.... உண்டு.... உண்டு!

அதில் முக்கியமான ஒன்று நடனம்!

"என்னது? டான்ஸா?" என்று முகம் சுளிக்காதீர்கள்.

டான்ஸ் நமது கலாசாரத்துக்கு சரிவராது என்று சொல்லி ஒதுங்காதீர்கள்!




உண்மையில் பார்க்கப்போனால், நமது கலாசாரமும் நடனமும் பின்னிப் பிணைந்த ஒன்று!

பரதம், குச்சுப்பிடி, ஒடிஸி, மோகினி ஆட்டம் என்று பல நடன வகைகள் வேர்விட்டது நமது பாரத பூமியில்தான்! 'இந்து' என்ற வார்த்தைக்குப் பல அர்த்தங்கள் உண்டு. அதில் முக்கியமானது -

"நம்மை உற்சாகம் இழக்கச் செய்வது எதுவோ அதை அழிப்பது!" என்பதாகும். நமது உற்சாகத்தை - உத்வேகத்தை - தன்னம்பிக்கையை நம்மிடமிருந்து பறிக்கும் சக்தி எது? சோம்பல், சுயபச்சாதாபம் முதலியவை தானே! நாம் முதலில் இவற்றை அழிக்க வேண்டும்.

நமது நடராஜரின் சிலை உணர்த்துவதும் இதைத்தான்!

நடராஜரின் காலடியில் கிடக்கும் அரக்கன்தான் உற்சாகத்தை நம்மிடமிருந்து பறிக்கும் சக்தி!

நடனமாடும் நடராஜரின் கையில் தீ ஜுவாலை இருக்கிறதே, அது என்ன? புரிந்துகொள்ளும் அறிவைத்தான் நமது வேதங்கள் 'தீ ' என்று சிம்பாலிக்காகக் கூறுகின்றன. துறவிகள் நெருப்பின் வண்ணத்தில் இருக்கும் காவி உடையை அணிவதும் இதே காரணத்துக்காகத்தான்! நடராஜரின் இன்னொரு கையில் இருக்கும் உடுக்கை ஞானத்தைக் குறிக்கும்.

மூன்றாவது கையின் மூலம் நடராஜர் காட்டும் அபயமுத்திராவுக்குப் 'பயமின்றி வாழ்' என்று பொருள்.

நம்மைத் தாழ்மைப்படுத்தும் 'அரக்கன்' என்ற சக்தியை அழித்தால் துள்ளித் துள்ளி நடனமாடும் அளவுக்கு நமக்கு உற்சாகம் பிறக்கும்! உற்சாகம் பிறந்தால் மகிழ்ச்சி பிறக்கும்! இந்த நேரத்தில் நேர்ஸரிப் பள்ளிக்கூடங்களில் சொல்லித் தரப்படும் ஒரு பாடல் என் நினைவுக்கு வருகிறது.

'what is the time now?' என்று ஆரம்பிக்கும் இந்தப் பாடலின் அர்த்தம் என்ன தெரியுமா?

இது என்ன நேரம்?

இது மகிழ்ச்சியாக இருக்கவேண்டிய நேரம்!

மகிழ்ச்சியாக இருக்கவேண்டிய கணம் எது?

இதோ இந்தக் கணம்தான்!

மகிழ்ச்சியாக இருக்கவேண்டிய இடம் எது?

இதோ இந்த இடம்தான்!

'சு.ஃ.பி நடனம்' என்று தனிவகையான ஒரு நடனம் உண்டு!

இந்த நடனத்தின் ஸ்டெப்ஸே நம்மிடமிருக்கும் பிரச்சினைகளை எல்லாம் தூக்கித் தூர எறிவது போலத்தான் வடிவமைக்கப்பட்டிருக்கும். இந்த நடனத்தின் இறுதிக் கட்டத்தில், நம் உள்ளத்தில் பொங்கும் மகிழ்ச்சியை அட்சயபாத்திரம் ஏந்திய மணிமேகலை மாதிரி..... மகிழ்ச்சியே உருவான சாண்டாகிளாஸ் மாதிரி.... எல்லோருக்கும் கொடுப்பது போல் ஸ்டெப்ஸ் இருக்கும்.

"சுவாமிஜி! டான்ஸ் ஆடினால் Body Rhythm மாறும், உற்சாகம் பீறிடும் என்று சொல்கிறீர்களே? அப்படியென்றால் டிஸ்கோகிளப்களில் ஆடும் நடனத்துக்கும், நடராஜரின் நடனத்துக்கும் என்னதான் வித்தியாசம்?" என்று நீங்கள் கேட்கலாம்!

டிஸ்கோ கிளப்களில் ஆடும் நடனத்தில் 'ஞானம் - தன்னைத்தானே புரிந்து கொள்ளுதல்' இதெல்லாம் இல்லை! அங்கே இருப்பது வெறும் கொண்டாட்டம் மட்டுமே!

நடராஜர் மாதிரி தன்னைத்தானே புரிந்துகொண்டு, முழு ஞானத்தோடு நம்மைத் தாழ்மைப்படுத்தும் சக்திகளை வீழ்த்தி அதன் மேலே ஏறி நின்று நாம் நடனமாடினால், நடனமாடுபவர் கண்ணுக்குத் தெரியமாட்டார்! நடனம் மட்டுமே கண்ணுக்குத் தெரியும்!

சரி.... அப்படியெனில் எப்படி நடனம் ஆட வேண்டும்?

சந்தோஷத்துக்காக நடனம் ஆடினால் உங்களுக்கு மகிழ்ச்சி கிடைக்காது! ஆகவே, நீங்கள் ஆட ஆரம்பிக்கும்போதே சந்தோஷத்தோடு நடனமாடுங்கள்! ஆங்கிலத்தில் சொல்வதென்றால்....

Don't dance for happiness!
Dance out of happiness!

**நன்றி : சுவாமி சுகபோதானந்தா.**

(தொடர்ந்து வரும்........)

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.


**குறுக்கெழுத்துப் போட்டி இல. 132க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

அனிஷா அல் ஆஸாத், புன்னைக் குடா வீதி, ஏறாவூர் - 03

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. திருமதி எஸ். அசோகன், 18-2/5, கொலிங்வூட் பிளேஸ், வெள்ளவத்தை.
2. டி.எல். வினிதா ஜெரோம், லெஜர் வத்த குருப், நாரங்கலை.
3. எம்.சி. கலீல், 72, ஹனிபா வீதி, கல்முனை - 05.
4. எஸ். ஜோ, 19/3, மெக்கெய்ஸர் வீதி, உவர்மலை, திருகோணமலை.
5. நா. அனோஜினி, 209, மார்க்கண்டு வீதி, பாண்டிருப்பு - 01, கல்முனை.
6. யூ. செல்லத்தம்பி, 20, கோவில் வீதி, கல்முனை - 03.
7. என்.எஸ். லெட்சுமி, பிபிலை எஸ்டேட், பிபிலை.
8. த.யோகராசா, பொது நூலகம், கொடிகாமம்.
9. ப. பத்மராதிகா, 8/1, றம்ளின் மாவத்தை, குடாப்பாடு, நீர்கொழும்பு.
10. திருமதி. பி.எஸ்.ராணி, மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.

### குறுக்கெழுத்துப் போட்டி 134



### இடமிருந்து வலம்

1. நட்சத்திரத்தினை இவ்வாறும் அழைக்கலாம்.
5. யாவற்றினதும் தொடக்கத்தை இப்படிக் கூறுவர் (மாறியுள்ளது).
9. வாழை இனம் ஒன்று (மாறியுள்ளது).
17. கடலுக்கும் உண்டு. வேட்டிச் சேலையிலும் உண்டு (மாறியுள்ளது).
20. குரங்கின் மறுபெயர் (குழம்பியுள்ளது).
25. காவல் துறையினர் செய்வது.
29. வீட்டிற்கு வீடு உண்டு.
32. இந்தியாவில் இவரை தாதா என்று அழைப்பர் (குழம்பியுள்ளது).

### மேலிருந்து கீழ்

1. ஓர் மலர்.
3. மலர்களில் ஒன்று (தலை கீழ்).
5. உட்காரப் பயன்படும் ஓர் பொருள் (குழம்பியுள்ளது).
18. உள்ளதை உள்ளபடி காட்டும் (குழம்பியுள்ளது).
20. குறுக்குப் பாதை (குழம்பியுள்ளது).
29. பாய் பின்னப் பயன்படும் ஓர் புல்.

### குறுக்கெழுத்துப் போட்டி 132 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ஒ | 2 ட் | 3 ட | 4 க | 5 ம் | |
| 7 ன் | | 9 ம் | 10 தி | 11 ம | 12 ண் |
| 13 ஜ | 14 ய | 15 ம | | 17 ம | |
| | 20 ன் | | 22 தீ | | 24 வி |
| 25 ம | 26 ன | 27 ன் | 28 ன் | | 30 த |
| 31 தி | 32 ல் | 33 லை | | 35 கை | 36 ம |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 23.08.2005 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-134
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# தெளிவு



-மு.உமாகாந்த், மட்டக்களப்பு.

அன்று காலை கல்லூரியில் நடந்த நிகழ்வுகள் வசீயின் நெஞ்சை ஏதோ செய்தது. மறந்துவிடு என மூளை அறிவுரை வழங்கினாலும், மனது அதனை அசை போட்டுக் கொண்டே இருந்தது.

அழித்துவிட நினைத்த பதிவுகள் அவன் கண்முன்னே நிழலாடின. நிலாவும், வசீகரனும் நல்ல நண்பர்கள். இது அந்தக் கல்லூரியில் எல்லோரும் அறிந்த ஒன்றுதான். அக்கல்லூரியில் புதிதாகச் சேர்ந்தவன்தான் சுந்தர். அவன் பின்தங்கிய கிராமம் ஒன்றில் இருந்து உயர்கல்வியைத் தொடர்வதற்காக நகரத்துக்கு வந்தவன்.

நிலா, சுந்தரைப்பற்றி விசாரித்ததில், அவனுக்கு தாய், தந்தை இருவரும் இல்லை என்ற தகவலை அறிந்து கொண்டாள். நிலாவும் தாயை இழந்தவள் என்றபடியால், அவளுக்கும் அதன் வலி தெரியும். நிலா சுந்தர் மேல் அன்பு காட்டினாள் என்பதை விட நிறையப் பாசம் வைத்திருந்தாள் என்பதுதான் பொருந்தும்.

நிலா மூலமாக வசீயிற்கு சுந்தர் அறிமுகமானான். முதல் சந்திப்பிலேயே வசீயிற்கு சுந்தரைப் பிடித்துவிட்டது. தன்னுடன் தங்குமாறு கூறி, தான் தங்கியுள்ள அறையிலேயே சுந்தரைத் தங்க வைத்தான். அதுவரை நல்ல நண்பர்கள் இருவரைக் கண்ட கல்லூரி, மூன்றாவதாக சுந்தரையும் இணைத்துக்கொண்டது. ஆனாலும் இது நீண்ட நாள் நீடிக்க வில்லை. சுந்தருடன் பழகிய சில மாதங் களில் அவன் தன் நண்பன் என்ற போர் வையில், கூட இருந்து குழிபறிக்கிறான் என்ற எண்ணம் வசீயிடம் மேலோங்கியது. இதற்கும் காரணம் இல்லாமலில்லை.

சுந்தர் கல்லூரியில் சேர்ந்த ஆரம்ப காலத்தில் வசீயின் முன்னேற்றத்தில் அதிக அக்கறையாக இருந்தான். வசீயின் ஒவ்வொரு நகர்வையும் அவதானித்து, பிழைகளைத் திருத்தி, ஆலோசனை வழங்கி, வெற்றி பெறும்போது தட்டிக் கொடுத்து, நல்ல தோழனாக இருந்தான். ஆனால் சில மாதங்களில் எதிர்மாறாக நடந்துகொள்ளத் தொடங்கினான்.

வசீ எந்த வேலையைத் தொடங்கி னாலும் குறை கூறுவான். வசீ பேசும் ஒவ்வொரு வார்த்தையிலும் குற்றம் கண்டுபிடிப்பான். சிறுசிறு தவறுகளையும் பெரிதுபடுத்தி எல்லாரிடமும் சொல்லித் திரிந்தான். நின்றால் குற்றம், நடந்தால் குற்றம் என்ற நிலையில் வசீயினால் எதையும் சரிவரச் செய்ய முடியவில்லை. தனி மனித சுதந்திரம் கூட மறுக்கப்பட்ட அடிமை போல வசீ இருந்தான்.

இதைப்பற்றி நிலாவிடம், வசி எதையும் சொல்லவில்லை. இத்தனைக்கும் சுந்தர் ஒரு புத்தகப் பூச்சியாகவே இருந்தான். கல்லூரியில் படிப்பு தவிர, வேறு எந்த நிகழ்விலும் கலந்துகொள்வதில்லை. அதற்கான திறமையும் அவனிடம் இருக்கவில்லை. ஆனால் எடுத்ததற் கெல்லாம் வசீயைக் குறை கூறிக் கொண்டே இருந்தான்.

பலவீனன்தான் இவ்வாறு நடந்து கொள்வான். சுந்தரின் இயலாமைதான் இதற்குக் காரணம் என எண்ணி எல்லாவற் றையும் பொறுத்துக் கொண்டான். ஒருநாள் திடீரென வசீயின் அறையில் இருந்து தன் உடைமைகளை எடுத்துக்கொண்டு எங்கோ சென்றுவிட்டான் சுந்தர். அதுவரை நிலாவிடம் சுந்தரைப்பற்றி எதுவும் கூறாத வசீ, சுந்தர் அறையைவிட்டுப் போனதை நிலாவிடம் சொன்னபோது, அவள் எதுவித சலனமும் இல்லாமல் இருந்தாள். அவளின் மௌனத்தைக் கலைக்கும் முகமாக, "நிலா, சுந்தர் இப்படி மாறியதுக்கு, காரணம் என்னெண்டு உனக்குத் தெரியுமா?" என்றான். எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த நிலா அங்கிருந்து பார் வையை மீளப்பெறாமல், "ஆம்" என்றவாறு தலையசைத்தாள்.

தொடர்ந்தாள்.... "வசீ, நான் உன்னோட எப்படி ஒரு நல்ல நண்பியா பழகினனோ, அதே போலத்தான் அவனிடமும். எனக்கும் அம்மா இல்ல எண்டதால, அதன் வலி எனக்கு நல்லாவே தெரியும். அவனின் மனம் புண்படும் படியா ஏதும் கதைத்து விடக்கூடாது என்றதில அதிக கவனமா இருந்தன். ஒருநாள் என்னிடம் வந்து என்னைக் காதலிப்பதாகச். சொன்னான்" என்றாள்.

"அதுக்கு நீ என்ன சொன்னாய்?"- வசீ.

"நான் இத எப்படி ஏற்றுக்கொள்ளுறது. மறுத்துட்டன். இந்த ஏமாற்றமும், தாழ்வு மனப்பான்மையும் தான் அவனை இப்படி மாற்றியிருக்கு" என்றாள்.

வசீயிற்கு எல்லாம் புரிந்தது. நிலா அழகி என்று சொல்லக் கூடியளவு உடலாலும் உள்ளத்தாலும் அழகானவள் தான். அவளின் கபடமற்ற பேச்சும் பழகும் விதமும், அவளுக்கு ஒரு தனி மரியாதையை சக மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்திக் கொடுத்திருந்தது. பலர் அவளைக் காதலித்தாலும், யாருக்கும் அதனை வெளிப்படுத்த தைரியமிருக்கவில்லை.

'நாளை எப்படியாவது சுந்தரைச் சந்தித்து, அவனைச் சமாதானப்படுத்தி திரும்ப ரூமிற்கு கூட்டிப் போக வேணும்' என எண்ணிய வசீ, மறுநாள் காலை நேரத்துடன் கல்லூரிக்கு வந்தான். வந்தவனுக்குக் குழப்பம். எல்லோரும் இவனைப் பார்த்து ஒருமாதிரிச் சிரித்து விட்டுச் சென்றனர். உள்ளே சென்று பார்த்த போது, இவனையும் நிலாவையும் இணைத்து, கல்லூரிச் சுவர் எங்கும் அசிங்கமாக எழுதப்பட்டு இருந்தது. பார்த்த கணத்திலேயே சுந்தரின் வேலைதான் என்பது புரிந்தது. அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. இதை நிலா பார்த்தால்? சுந்தரின் கழுத்தை நெரிக்க வேண்டும் போல இருந்தது. வந்த ஆத்திரத்தில் சுந்தர் தங்கியுள்ள கல்லூரி விடுதியை நோக்கி வெறி பிடித்தவன் போல ஓடினான். அப்போது சுந்தர் யாருடனோ சிரித்துக் கதைத்துக் கொண்டு இருந்தான். வசீ, சுந்தருடன் நியாயம் பேச முயற்சிக்காமல் சென்ற வேகத்திலேயே சுந்தரை ஓங்கி உதைத்தான். அதற்குள் கல்லூரியே அங்கு கூடிவிட்டது. இருவருக்கும் நடக்க இருந்த சண்டையை எல்லோரும் சேர்ந்து விலத்தினர். நிலா மூச்சிரைக்க ஓடிவந் திருந்தாள். எதுவும் விபரீதம் நடக்க வில்லை என்ற நிம்மதிப் பெருமூச்சு நிலாவிடம் இருந்து வெளிப்பட்டது.

வசீயினால் அதற்குமேல் ஒரு விநாடி கூட அங்கு நிற்க முடியவில்லை. ஆத்திரமும் வெறுப்பும் மேலிட தன் அறையை அடைந்தான். என்னதான் நடந்த விடயங்களை மறந்து எண்ணங் களை திசைதிருப்ப முன்றாலும், அவ் விடயத்தில், அவன் மீண்டும் மீண்டும் தோற்றுக் கொண்டே இருந்தான்.

மீண்டும் மீண்டும் பழைய காட்சிகள் நினைவினுள் வந்து, அவனை வெறுப் பேற்றிக்கொண்டு இருந்தன. இவற்றை எல்லாம் எண்ணியவாறு படுக்கையில் சாய்ந்தான் வசீ.

ஆமாம். அது அவனுக்குப் பரிச்சய மான பாதைதான். பாதை ஓரமாக யாரது? சுந்தர்தான். 'அவன் இண்டைக்குச் செத்தான்' என எண்ணியபடி, சுந்தரை நெருங்கி, சுந்தரின் அருகில் நின்று கொண்டிருந்தவனை தள்ளிவிட்டு, டிரவுசர் பொக்கற்றில் இருந்த கத்தியை எடுத்து ஒரேயடியாக, சுந்தரின் வயிற்றில் ஏற்றி விடுகிறான். வசீயின் கையில், உடையில் எல்லாம் இரத்தம். சுந்தர் விழுந்து இறந்து போகிறான். 'கொலை செய்து விட் டோமே' என்று ஏங்கியபடி நடந்ததை நம்ப முடியாமல் சிலையாக நின்றிருந்த வசீயை, பொலிஸ் ஜீப்பில் ஏற்றிப் போகின்றனர்.

சிறைக் கம்பிகளின் பின்னால், படுத்தபடி கூரையைப் பார்த்துக் கொண்டிருந்த வசீயின் முகத்தில் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் ஓங்கி உதைக்கிறார்.

"அம்மா" என்று அலறியபடி, எழும்பினான் வசீ.

அப்போதுதான் தன் அறையில் உள்ள கட்டிலில் படுத்திருப்பது தெரிந்தது. வானொலிச் செய்தி காதை எட்டுகிறது. நேரத்தைப் பார்க்கிறான் கடிகாரம் மாலை 6.30ஐக் காட்டுகிறது.

செல்போனை எடுத்தபோது, நிலா எஸ்.எம்.எஸ். அனுப்பியிருந்தாள். 'உன்னைச் சந்திக்க வேண்டும்' என இருந்தது. வசீ 10 நிமிடங்களில் தயாராகி மோட்டார் சைக்கிளில் காற்றைக் கிழித்துக்கொண்டு, தன் நண்பியின் வீட்டை நோக்கிச் சென்று கொண்டி ருந்தான்.

இப்போது அவனுக்குள் - ஒரு தெளிவு.

# பொறுமை

வழக்கம் போல் அன்று காலையும் நண்பன் வரதன் என் வீட்டுக்கு வந்தான். நான் 'தினமுரசு' வாங்குவேன். அவன் வேறெதாவது நாளிதழ் வாங்குவான். இருவரும் படிப்பதற்கு அவ்வப்போது பேப்பரை மாற்றிக்கொள்வோம். அன்று அவன் தான் வாங்கிய பத்திரிகையை எனக்குக் கொடுத்துவிட்டு, என் பத்திரிகையை வாங்கிப் போனான். சிறிது நேரம் கழித்து வந்து அவன் "மெயின் வீதிக்குப் போகவேண்டும் வருகிறாயா" என்று என்னைக் கேட்டான். சரியென்று நான் அவனுடைய பைக்கில் புறப்பட்டேன்.

வரதன் எதுக்கும் பொறுமை இராதவன். தன்காரியம் எல்லாம் உடனே நடந்துவிட வேண்டும் என்ற ஒரு சுயநலம் கொண்டவன். வங்கியில், பஸ்தரிப்பு நிலையத்தில்கூட வரிசைப்படி போக அவனுக்குப் பிடிக்காது. சாலைகளில் சந்தியில் அமைந்திருக்கும் சமிக்ஞை விளக்குகளுக்கும் கூட அவன் கட்டுப்படமாட்டான். சில நேரம் சிவப்பு வெளிச்சம் விழுந்துவிடும் என்று அவசரமாகக் கடந்து, பொலிசாரிடம் அகப்பட்டுத் தண்டப் பணமும் கொடுத்திருக்கிறான். ஏனைய வாகனங்கள் பொறுமையுடன் காத்திருக்க, தனது வாகனத்தைத் தவறான பக்கமாகவும் நடைபாதையாலும் ஓட்டி மற்றைய வாகன சாரதிகளிடம் திட்டும் வாங்கியிருக்கிறான்.

அன்று அவனுக்கு அவசரமாகப் பணம் தேவைப்பட்டதால் தான் கணக்கு வைத்திருக்கும் வங்கியில் கார்ட் மூலம் பணமெடுக்க எண்ணி, தனது கார்ட்டையும் கொண்டுவந்தான். என்னை தனது பைகுடன் வெளியே நிற்கச் சொல்லிப் பணமெடுப்பதற்காக வங்கியின் வாசலிலிருந்த அந்த இயந்திரத்தின் சமீபமாக கார்ட்டுடன்




சென்றான். அதேசமயம் வேறு இருவர் தாங்களும் பணமெடுப்பதற்காக அந்த மெஷினைச் சமீபித்தனர். அவர்களைக் கண்டதும் வரதன் சற்றுப் பின்வாங்கி "பரவாயில்லை, நீங்கள் போய்வாருங்கள்" நான் பிறகு போகிறேன்." என்று பவ்யமாக அவர்களிடம் கூறினான். வந்த அந்த இருவரும் அவனுக்கு நன்றி கூறி மெஷினருகே போய் தங்கள் கார்ட்டைப் போட்டுப் பணம் எடுத்துப் போய்க் கொண்டிருந்தார்கள். இதுவரை பொறுமைகாத்த என் நண்பன் வரதன் அதன்பிறகே உள்ளேபோய் கார்ட்டைப் போய் யந்திரத்திலிருந்து தன் பணத்தையும் கார்ட்டையும், ரசீதையும் பெற்றுக்கொண்டு என் அருகில் வந்தான். என்னையும் பைக்கில் ஏற்றியபடி பைக்கைச் செலுத்தத் தொடங்கினான். இதுவரை இவைகளைப் பார்த்துக்கொண்டிருந்த நான் அவனுடைய மாற்றத்தால் ஏற்பட்ட குணங்களை எண்ணி நிலை குலைந்து போனேன். எதற்கும் அவசரப்படுகிற வரதனா இப்படிப் பண்புள்ளவனாக ஆகிவிட்டான் என்று என்மனதில் ஒரு போராட்டம். எதற்கும் அவனிடம் கேட்டுவிடுவோம் என்று எண்ணியபடி போகும் வழியில், அவனிடம் அந்த மாறுதலின் காரணத்தைக் கேட்டேவிட்டேன்.

அதற்கு அவன் 'நான் ஏன் பொறுமைகாத்து நின்றேன்'? அவர்களை ஏன் முதலில் அனுப்பினேன் தெரியுமா? ஒருமுறை காஷ் மெஷினில் எனது கார்ட்டைப் போட்டேன். பணமும் வரவில்லை எனது கார்ட்டும் வரவில்லை. நீண்ட நேரம் காத்து நின்று பணம் வராததால் நான் உள்ளே போய் என் நிலைமையை வங்கி உத்தியோகத்தரிடம் சொன்னேன். அதற்கு அந்த அதிகாரி" மெஷின் வேலை செய்யாது ரிப்பேர் பண்ணவேண்டும் கொஞ்சம் பொறுங்கள்" என்று எனக்குக் கூறிவிட்டுத்தன் வேலைகளை முடித்துவிட்டு ஒருமணி நேரம் கழித்த பின்னரே அந்த இடத்திற்குப் போய், அந்த அறைக்குள் நுழைந்து கார்ட்டை என்னிடம் கொடுத்தார். இதனால் அன்று ஒருமணி நேரம் கூடுதலாக நின்றதில் என் வேலைகளும் தடையாகிவிட்டன. இப்போ இரண்டு பேர் முதலில் பணமெடுத்துப் போனார்களல்லவா? அதனால் என் சந்தேகம் தீர்ந்தது. அதுதான் என் பொறுமைக்குக் காரணம்" என்று விளக்க ஒரு லெக்சரே அடித்துவிட்டான். நான் சுனாமி அலையால் ஏற்பட்ட அதிர்ச்சியை விட பேரதிர்ச்சிக்குள்ளானேன்.

-ச.இரா.பாலகிருஷ்ண ஐயர், கிராண்ட்பாஸ்.

# கனாக்காலம்

அந்த மாலைநேர ஆங்கில வகுப்பு அமைதியாக இருந்தது. காரணம் பயிற்சிகள் வழங்கப்பட்டு ஆசிரியர் வாசன் சரி பிழை பார்த்துக்கொண்டிருந்தார். நிரஞ்சனின் மனமோ ஒருநிலையில்லாமல் தவித்துக் கொண்டிருந்தது. பயிற்சிகளை திருத்திமுடித்த வாசன், நிரஞ்சனிடம் "இந்த கிளாஸ் உனக்கு சரியா விளங்கல்லபோல. அவ் வளவும் ரோங்கா இருக்கு" என்றபடி அவன் கொப்பியை எல்லோர் முன்னி லையில் தூக்கிப் பிடித்தார். சக மாணவர்கள்



அவனை ஏறிட நிரஞ்சன் தலைகவிழ்ந்தான். அதை அவ்வகுப்பிலுள்ள இன்னொரு உள்ளம் அவதானித்தது. தான்தான் அதற்குக் காரணமோ' என எண்ணலாயிற்று.

இரண்டு கிழமைக்கு முன்னர்தான் அருணா அந்த ஆங்கில வகுப்பில் புதிதாய் வந்து சேர்ந்திருந்தாள். உயர்தரம் கற்பவர்கள். அவளைக்கண்ட பொழுதிலிருந்தே நிரஞ்சன் அவன் வசமில்லை. யாருடனும் அதிகமாக பழகாத அருணாவின் சுபாவத்தினால் நிரஞ்சனுக்கு பேசவும் கிடைக்கவில்லை. பெரும் தவியாய் தவித்தவன் ஒருவாறு தன் நண்பன் ரவியிடம் விடயத்தைக் கொட்டினான். ரவியும் யோசித்து தன் தங்கையை தூதுபோக வேண்டினான். "எனக்கு அவளோட சரியா பழக்கமில்ல. அதோட மத்த பிள்ளங்க மாதிரி அவ நோர்மல் டைப்பும் இல்ல. எப்படி திடீர்னுபோய் இந்த மாதிரி விஷயத்தை சொல்றது" என ரவியின் தங்கை மாலினி மறுக்க, ரவியும் நண்பனுக்காய் தங்கையை ஒருவாறு தாஜா பண்ணி அனுப்பி வைத்தான். மாலினியும் ஒருவாரம் டைம் கேட்டாள். அதற்குள் பாடசா லையில் அருணாவுடன் வலியசென்று கதைத்து ஒரு சுமுகமான உறவை ஏற் படுத்தத்தொடங்கியிருந்தாள். பார்வைக்கு மிகுந்த 'சார்ம்' டைப்பாகத் தெரிந்த அருணா பழகுவதற்கு ரொம்ப இனிமை யானவளாய் இருந்தாள். மாலினியும் ஒருநாள் தன்னில் குறையில்லாதவாறு தான் ஏந்திய காதல் தூதை அவிழ்த்துவிட்டாள். திகைத் துப்போன அருணா, மாலினியிடம் கூட எதுவும் சொல்லாமல் கிளம்பினாள். அதன் பின் வந்த நாட்களில் மாலினியைக் கண்டு லேசாக புன்னகைப்பதோடு சரி. மாலினியும் மேலதிக மாக எதுவும் கேட்கவில்லை. ரவியிடம் நடந்ததைக் கூறி "மறுபடி எதுவும் நான்போய் கேட்கமாட்டேன். அவளா ஏதாவது சொன்னா பார்ப்பம்" என உறுதியாகக் கூற, ரவியும் நிரஞ்சனிடம் கொஞ்சம் விட்டுப்புடிப்பமே என்று விட்டான்.

'அவனுக்கென்ன சொல்லிவிட்டான். மனதுடன் போராடுவது நான்தானே' என தன் னையே நொந்தபடி நிரஞ்சன் நாளோட்டினான். ஆனால் தவறாது பாடசாலை நேரத்திற்கும் ஆங்கில வகுப்புக்கும் சென்றுவந்தான். அவ ளைப் பார்ப்பதிலாவது அவன் மனப்போராட்டம் சிறிது ஓய்வுபெற்றது. விடயம் காதுக் கெட்டியபின்தான் அருணா வகுப்பில் நிரஞ்சனிருப்பதையே தெரிந்து கொண்டாள். ஆனாலும் எந்த சலனமுமின்றி முன்னரைப் போன்றே தானுண்டு தன்பாடுண்டு என இருந்தாள். பரீட்சையும் முடிந்து "பெயா வெலின்போது ரவி அவளிடம் நேரிடையாகவே கேட்டான். நீண்ட மௌனம் நிலவ, அருணா - ரவி - நிரஞ்சன் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டனர். என்ன சொல்வாள்? என நிரஞ்சனின் உள்ளம் கேட்டுக்கொள்ள அரு ணாவோ ஏதோ பெண்ணைக்கண்டவுடன் இந்த வயதில் எந்தவொரு ஆணும் இப்படித்தான் என நினைத்தோம். ஆனால் இவன் இவ்வளவு நாளும் அதே உறுதியில் பொறுமையுடன் நினைத்தபடி தன்நிலைமையைச் சொன்னாள். தந்தையற்ற தன் குடும்பம், தம்பியின் படிப்பு தன்னை நாடி நிற்பதைக் கூறி "ஒங்க வீட்டா ரும் எங்கவீட்டாரும் எடுக்கறமுடிவுதான்" என்று சொல்ல ரவியும் நிரஞ்சனும் ஒருவித சந்தோ ஷத்துடன் விடைபெற்றனர். அதுவரை அருணா வின் முடிவை மாத்திரமே எதிர்பார்த்திருந்த நிரஞ்சனுக்கு தனது வீட்டாரிடம் பேசவேண்டிய நிலை வந்தபோதுதான் அது பூதாகரமாகத் தோன்றியது. அதனையும் ரவியின் தலையி லேயே வைத்தான்.

பரம்பரை பணக்கார குடும்பமான நிரஞ்சன் வீட்டார் ஒரு துளியும் ஒத்துக் கொள்ளவில்லை. ரவியும் நண்பனும் வாங்கிக்கட்டிக்கொண்டது தான் மிச்சம். வீட்டார் அத்தோடு நிற்கவில்லை. அருணாவின் தாயாரை அழைப்பித்து வாய்க்குவந்தபடி யெல்லாம் திட்டினார்கள்.

தாயின் புலம்பல் ஓலம் அருணாவை ஆட்டி விட்டது. சில மாதங்களுக்குள்ளேயே உறவினர் ஒருவர் அருணாவை பெண் கேட்க, உடனே திருமண மும் நிச்சயிக்கப்பட்டது. நிரஞ்சன் அனலிற் புழுவாய் துடித்தான். ரவியும் இம்முறை "உறுதியா நீ முடிவெடு உதவி வேணுனா நா செய்றேன்" என அகன்றுவிட்டான். அவனுக்கு தெரியாத நிரஞ்சனா? நாட்கள் உருண்டோட இப்போது அருணா ஒரு ஆண்குழந்தைக்குத் தாய், ஒரு ஆசிரியையும் கூட. ஆனால் நிரஞ்சன் ஏதோ வெளிநாட்டில் இருப்பதாக வீட்டார் சொல்லிக்கொண்டிருக் கிறார்கள். அவனுடன் ரூம்மேட்டாக இருப்பவர்களுக்குத் தான் தெரியும் அவன்பாடு. அருணாவின் திருமணத்தோடு ஊரைவிட்டு வெளிநாடு சென்றவன் ஐந்தாண்டாகியும் நாடு திரும்ப வில்லை. அந்த எண்ணமும் அவனுக்கில்லை. பகலில் வேலை, இரவில் போத்தல், கண்ணில் ஒரு நிரந்தர சோகம், முகத்தில் தாடி. இதுதான் இப்போதைய நிரஞ்சனின் வாழ்வியற்கோலம்.

- ம.பாஹிரா,புத்தளம்.

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

# கொலை செய்யாதிருப்போமாக!

பழங்காலம் தொட்டு இன்றைய காலங்கள் வரை மனித குலத்தில் பல இனங்கள் கொலை செய்வதைத் தடை செய்தும், கடுமையான தண்டனைகளை அளித்தும் வருகின்றன. சில காலகட்டங்களில் இச்செயலுக்கு ஒரு விரிவான விளக்கமும் சொல்லப்பட்டது. உயிரை மாய்க்காமல் இருப்பாயாக! என்று சொல்லப்பட்டிருந்தது. சில காலங்கள் சென்ற பிறகு, மேற்சொல்லப்பட்ட வாக்கியம் மொழி பெயர்க்கப்பட்டபோது இதே வாக்கியம் "கொலை செய்யாதிருப்பாயாக" என்று வாசிக்கப்பட்டது.

"உயிரை மாய்த்தல்" மற்றும் "கொலை செய்தல்" என்ற இரு வார்த்தைகளுக்கும் வேறுபாடு உண்டு. எல்லா விதங்களிலும் உயிரை மாய்க்கும் செயல் தடை செய்யப்படுவது மட்டுமல்ல, தன்னை தற்காத்துக் கொள்ளும் செயலும் நிகழ வாய்ப்பையும் வழங்காது. இது ஒரு சட்டத்திற்குப் புறம்பான செயல் என்றும் சொல்ல முடியுமே! ஒரு பாம்பானது பச்சிளங் குழந்தையை நன்கு சுற்றிக் கொண்டு கடிக்க முயலுவதைத் தடுத்து நிறுத்துவதும் இல்லாமல் போய்விடும். காய்கறிகளை அதிகமாகச் சேர்த்து உண்ணும் உணவினை, உண்ணும் நிலைதான் ஓர் இனத்துக்கு ஏற்பட்டு விடும். எல்லாவிதமான உயிரை மாய்க்கும் செயலுக்கெதிராக தடைகள் விதித்ததற்கு எதிராக ஏராளமான எதிர்மறைக் கருத்துக்களும், விளக்கங்களும் நீங்கள் பார்த்திருக்க முடியும். கொலை செய்யாதிருப்பாயாக என்ற வாக்கியத்திற்கு அமைய கொலை செய்யாதிருப்போமாக!

- 'மகிழ்ச்சி' எனும் நூலிலிருந்து.

## இலக்கிய நயம்

# யுத்தம் - மக்களை அழிக்கும்! வளமான வாழ்வுக்கு அது வழியல்ல!!

மகனோடு ஓடி விளையாடிக் கொண்டிருந்தான் அஞ்சனன். ஒரு சமயம், குழந்தை தந்தையைத் துரத்தி ஓடிக் கொண்டிருந்தது; மறு சமயமே தந்தை பிடித்துவிடாமல் தப்பித்துத் தான் ஓடுவது போலவும் ஓடிக் கொண்டிருந்தது.

"அப்பா துரத்து துரத்து" என்றும் "அப்பா பிடி பிடி..." என்றும் மாறி மாறிக் கத்திக் கொண்டிருந்தது குழந்தை.



எப்போது துரத்துவது, எப்போது தப்பித்து ஓடுவது என்ற குழந்தையின் உலகிற்குள் நுழைய முடியாதவனாக தத்தளித்து ஓடிக்கொண்டிருந்தான் அஞ்சனன்.

"மாமா வா வா; ஓடு வா" என்று குழந்தை கத்தியதைக் கேட்டு வாசலைப் பார்த்தான். தீபன் வந்து கொண்டிருந்தான்.

"வா" என்று அழைத்தபடியே ஓட்டத்தை நிறுத்தினான்.

"அப்பா நில்லாதே ஓடு.... ஓடு" என்று பாய்ந்து வந்தது குழந்தை. தூக்கித் தோளில் ஏற்றிக்கொண்டான்.

"வேலை விட்டு வந்தால் உனக்குக் குழந்தையுடன் விளையாடத்தான் சரியாக இருக்கும்....." என்றான் தீபன்.

"என்ன விளையாடினாலும், அவனுடைய விளையாட்டின் விதிமுறைகளைப் புரிந்து கொள்ளவே இயலுதில்லை...." என்று சிரித்தபடியே நாற்காலியில் தானும் அமர்ந்து கொண்டான் அஞ்சனன்

"யுத்தம் வரத்தான் போகிறதா?"

"யுத்தம் இல்லாமலே போதியளவுக்கு மனிதர்கள் செத்துக்கொண்டுதானே இருக்கிறார்கள்?"

**தருவது முழடில்யன்**

"ஆமாம், யுத்தம் எதற்கு? அதைவிடக் கொடுமையாகக் கொலைகளை ரசிக்கும் மனங்கள் உருவாகிவிட்டனவே!" என்று கவலையுடன் விட்டத்தைப் பார்த்தான் தீபன்.

"புராதன விலங்குத் தன்மையின் மிச்ச சொச்சம் மனிதனின் இரத்தத்தில் இன்னும் ஓடிக் கொண்டிருக்கிறது. அது கொலையை ருசிகரமானதாக்குகிறது. அடுத்தவன் இரத்தம் சிதறுவதைக் கவர்ச்சிகரமான அம்சமாக்குகிறது."

"உண்மைதான். படங்களிலும் முன்பெல்லாம் கொலைகள் வெளிப்படையாகத் தாக்கப்படாமல் ரகசியத் தன்மையுடன் கதை சொல்லப்பட்டு வந்தது. இப்போதோ எவ்வளவுக்கெவ்வளவு அதிகக் கொலைகளைக் காட்ட முடியுமோ, பார்க்கிறவர் திணறுமளவுக்கு இரத்தத்தைச் சிதறவைக்க முடியுமோ, இன்னுமின்னும் என்று மனதைக் குரூர ஆவேசம் கொள்ள வைக்க முடியுமோ, அவ்வளவுக்கவ்வளவு வசூலும் உத்தரவாதமாகிறது....."

"கதைகளிலும், படங்களிலும்தான் கொலைகள் சுவாரஸ்யமானது. நமக்கருகில் நடக்கும் போது இதயம் அதிரத்தான் செய்யும்."

"அப்படிச் சொல்ல முடியாது. நிஜ வாழ்க்கையிலும் மனிதர்கள் பட்டாசு கொளுத்திச் சந்தோஷப்படுமளவுக்குப் பல கொலைகளை ரசிக்கிறார்கள் - தங்களுக்கு நெருக்கமானவர்கள் சாகாதவரை!"

அஞ்சனன் சிரித்துக்கொண்டே சொன்னான்: "நம் தீபாவளிப் பண்டிகையே ஒரு கொலையைக் கொண்டாடுவதுதானே!"

"எண்ணாயிரம் சமணர்களைக் கழுவிலேற்றிப் பதைக்கப் பதைக்கக் கொன்றதைக் கூட கடவுள், காருண்யம், அன்பு, அறம் என்று எதையெதையோ சொல்லி நியாயம் கண்டிருக்கிறோம். சுருக்கமான விஷயம் என்னவென்றால், அடுத்தவன் சாவதில் நமக்கு உறுத்தலேதும் இல்லை என்பது தான்."

"கொல்ல வரும் பசுவைக் கொல்லலாம் என்று அகிம்சாமூர்த்தி காந்தி கூடச் சொல்லியிருக்கிறாரே!"

"ஆமாம், பசு முறைத்துப் பார்த்தால் கூட, கொல்லுத்தான் வருகிறது என்று நினைத்துவிட்டால், அதைக் கொல்லத் தடையேதுமில்லை. மேலும் பசுக்கள் எல்லாமே, மனிதனின் விடுதலைக்குத் தடையாக இருப்பவைதான் என்பதை ஒன்றிரண்டு உதாரணங்களோடு விளக்கி, பிரசாரம் செய்து விட்டால், பசுவைக் கொல்பவர்கள்தான் மனிதகுல மாவீரர்கள் என்று கொண்டாடுவதில் மக்கள் போட்டி போடவே ஆரம்பித்து விடுவார்கள்!"

"கொல்லப்படுகிறவர்கள் எல்லோரும் பசுக்கள்தான் என்கிறாயா?"

"மனிதர்களை மனிதர்கள் ஏன் கொல்ல வேண்டும்?"

"ஒரு மனிதனால் பல மனிதர்கள் பாதிப்புக்குள்ளாகிறார்கள் என்றால்....?"

"விசாரணை, நீதிமன்றம், தீர்ப்பு என்று ஜனநாயக, நாகரீக மனித சமுதாயத்தின் நடைமுறைகள் உருவாகி வந்திருக்கின்றனவே..... அதுவும் ஆயுதமேந்தாத மனிதனைக் கொல்வது என்ன நியாயம்?"

"ஆயுதமேந்தாமல் பல மக்களின் அழிவுக்குக் காரணமாக இருக்க முடியாதா?"

"அப்படிப் பார்த்தால், யார்தான் காரணம் இல்லை? கொலை செய்கிறவர்கள், பாரபட்சமுடன் கண்டிக்கிறவர்கள், அந்தரங்கத்தில் சந்தோஷப்படுகிறவர்கள், தண்டனையைக் கையில் எடுத்துக் கொள்கிறவர்கள், கொலை மூலம் யுத்தத்தை வரவழைப்பவர்கள்.... யார்தான் மக்களை அழித்துக் கொண்டிருக்கவில்லை....?"

"என்ன சொல்ல வருகிறாய்?"

"நான் என்ன சொல்வது? புறநானூற்றுத் தமிழனே சொல்லியிருக்கிறான். கொல்வது, யுத்தத்தை ஏற்படுத்துவது எல்லாமே எல்லோரையும் அழித்து, யாரும் இல்லாமல் போவதற்கான செயல்களே தவிர, மக்களைக் காப்பாற்றும் செயல் அல்ல. மக்களைக் காப்பாற்றுவதாகச் சொல்லிக் கொலை செய்பவர்களும், ஆதரிப்பவர்களும் மக்கள் அவலங்களைக் குறைத்திருக்கிறார்களா? என்று யோசிப்பது நல்லது."

*எனைப் பல் யானையும் அம்பொடு*
*துளங்கி*
*விளைக்கும் வினை இன்றிப் படை*
*ஒழிந்தனவே*
*விறற் புகழ் மாண்ட புரவி எல்லாம்*
*மறத் தகை மைந்தரொடு ஆண்டுப்*
*பட்டனவே*
*தேர் தர வந்த சான்றோர் எல்லாம்*
*தோல் கண் மறைப்ப ஒருங்கு*
*மாய்ந்தனரே*
*விசித்து வினை மாண்ட மயிர்க் கண்*
*முரசம்*
*பொறுக்குநர் இன்மையின் இருந்து*
*விளிந்தனவே*
*சாந்து அமை மார்பில் நெடுவேல்*
*பாய்ந்தென*
*வேந்தரும் பொருது களத்து ஒழிந்தனர்;*
*இனியே*
*என் ஆவது கொல்தானே - கழனி*
*ஆம்பல்*
*வள்ளித் தொடிக் கை மகளிர் பாசவல்*
*முக்கி*
*தண் புனல் பாயும் யாணர் அறா அ*
*வைப்பின்*
*காமர் கிடக்கை அவர் அகன்*
*தலைநாடே?*

*(புறம் : 63.)*

## சிந்தியா பதில்கள்

✉ பிரபல ஊடகவியலாளர் ரேலங்கி, இராணுவப் பாதுகாப்புப் பிரதேசத்தினுள் சுட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கிறார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, நியாயத்திற்காகவும், மனித சுதந்திரத்திற்காகவும், ஜனநாயக உரிமைகளுக்காகவும் பேனா ஏந்தியிருக்கும் ஊடகவியலாளர்கள் எவரும் ஏன் கோட்டை ரயில் நிலையத்தின் முன்னால் வந்து குழுமவில்லை?

-இ.மலர்ராஜன், கொழும்பு - 05.

அவர்களுக்கு நியாயவுணர்வுகள் பொங்கியெழுவதற்கான 'ஆணை' வரவில்லை. எனவே, ரேலங்கி செய்த 'தமிழ்த் துரோகம்' என்னவாக இருக்கும் என்று ஆளை ஆள் இரகசியமாக விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

✉ 'இனந்தெரியாதவர்கள்' செய்யும் கொலைகள் ஏன்? எதற்கு? என்று புரிந்துகொள்ள முடியாமலிருக்கின்றது. ஊடகவியலாளரின் கொலையால் அவர்களுக்கு என்ன லாபம்?

-ஆர்.குமரேசன், கினலன் எல்ல.

மிச்சமிருக்கும் ஊடகவியலாளர்கள் எச்சரிக்கையடைவார்கள்; அந்த இனந்தெரியாதவர்களைப் போற்றி இன்னும் தீவிரமாகப் பேசுவார்கள், எழுதுவார்கள். கொன்றவர்களுக்கு எவ்வளவு லாபம் என்பதை பத்திரிகைகளை வாசித்துத் தெரிந்துகொள்ளுங்கள்.

✉ விடுதலையின் பெயரால் கொலைகள் செய்வது பற்றி?

-க.கமால்தீன், ஏறாவூர் - 03.

இதற்குப் பதில் பிரெஞ்ச் நாவலாசிரியர் காம்யூ சொல்லியிருக்கிறார் வெகு காலத்துக்கு முன் :

"வாழ்வதற்குரிய காரணம் என்று முன்வைக்கப்படுவது எதுவோ, அதுவே சாவதற்கும் உரிய காரணமாக முன்வைக்கப்படுவது எதிர்மறை வேடிக்கை."

'✉ ஆசை துறந்தால் அகிலம் உனக்கு' என்பது எதை உணர்த்துகிறது?

-ஐ.வதனா, வவுனியா.

அகிலம் யாருக்குமில்லை என்பதை! "நான் மிக அடக்கமானவன்' என்று ஒருவர் எண்ணிக் கொள்வதே அவரது அடக்கத்தைக் கேள்விக்குள்ளாக்கி விடுவது போல, ஆசைகளைத் துறந்த மனிதராக வேண்டும் என்று நினைத்தால் அதுவும் ஆசைதானே!

✉ கொலைகளும், திருப்பங்களும் நிறைந்த மர்மக் கதை ஒன்று எழுதி வைத்திருக்கிறேன். நமது இன்றைய உளவியலையும் அலசுவதாக நாவலை அமைத்திருக்கிறேன். அதற்குத் தலைப்பு தரமுடியுமா?

-ஏ.மணிவண்ணன், ஹட்டன்.

உன்னைச் சுடுவது இனியது.

✉ நகைச்சுவைத் துணுக்கு ஒன்று சொல்ல முடியுமா?

-மனோ கோபாலன், ஹப்புத்தளை.

கொஞ்சம் அசௌகரியமான நகைச்சுவைதான்! என்ன செய்ய, இதைத்தான் சமீபத்தில் கேட்டேன்.

பி.பி.சி. அறிவிப்பாளர் : "அமைச்சர் கதிர்காமர் கொலைக்கு உங்கள் மீது குற்றம் சாட்டப்படுவதை மறுத்திருக்கிறீர்களே.... அதுபற்றிச் சொல்ல முடியுமா?"

அரசியல் பொறுப்பாளர் : "நூற்றுக்கும் மேற்பட்ட படையினரின் பாதுகாப்பு அவருக்கு வழங்கப்பட்டிருந்தது. பாதுகாப்பு நிறைந்த கொழும்பின் மையப் பகுதியில் அவர் இருந்திருக்கிறார். எனவே வெளியார் சென்று இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கச் சாத்தியமில்லை. உள்ளேதான் யாரென்பதை அவர்கள் கண்டுபிடிக்க வேண்டும்."

பி.பி.சி. : "அப்போ இந்தக் கொலையை நீங்கள் கண்டிக்கிறீர்களா?"

அ.பொ. : "அந்தக் கொலையை நாங்கள்தான் செய்தோம் என்று குற்றம் சாட்டப்படுவதைக் கண்டிக்கிறோம்."

பி.பி.சி. : "அதில்லை. கொலை செய்திருக்கும் இந்த அநாகரீகத்தைக் கண்டிக்கிறீர்களா?"

அ.பொ. : "இதை யார், ஏன் செய்தார்கள் போன்ற விபரங்கள் வெளிவந்த பிறகுதான் இதுபற்றிச் சொல்ல முடியும்."

வாழ்க சுதந்திரத் தமிழீழம்!

✉ ஜோதிகா, அசின், த்ரிஷா, ஸ்நேகா யாருக்கு முதலிடம்?

-வை.பிரியா, யாழ்ப்பாணம்.

சீனியர் ஜோதிகா வரிசையிலிருந்து விலகுகிறார், நயன்தாரா சேர்ந்து கொள்கிறார். இப்போதும் முன்னுக்கு ஓடிவந்து கொண்டிருப்பவர் பாத்ரூம் குளியலை நினைத்துப் பயந்தோடி வருபவர்தான்!

✉ அந்நியன் விக்ரம், சந்திரமுகி ஜோதிகா நடிப்பில் யார் கலக்கியவர்?

-ரி.திவ்யப்பிரியா, யாழ்ப்பாணம்.

வெற்றி பெற்ற பிறகு விக்ரமிற்கு சாதாரண மனிதனை நடிப்பில் காட்டும் வாய்ப்புக் கிடைக்கவேயில்லை என்பது அவரது துரதிர்ஷ்டம். சந்திரமுகியைப் பொறுத்தவரை ஜோதிகாவுக்கும் அதேதான்.

✉ தங்களைத் தாங்களே புகழ்ந்து பேசுவதை கூச்சமில்லாமல் செய்கிற வானொலிச் சேவைகள் பற்றி?

-மணிவேல் ருத்ரா, சின்ன செல்வகந்த.

பாவம்! அரசியல்வாதிகளைக் கொண்டு அதைச் செய்யமுடியாத வலுக்குறைந்த ஊடகங்கள்!

✉ உண்மையில் நமது அவலம் என்ன?

-கி.அருள்ராஜ், கொக்காக்கலை.

கதிர்காமரின் இறுதிச் சடங்கிற்கு வந்திருந்தவர்களை அறிமுகப்படுத்துகையில், ஒருவர் வரும்போது தொலைக்காட்சி அறிவிப்பாளர் சொன்னார் : "இப்போது வந்திருப்பது,அடுத்து கொல்லப்படலாம் என்று எதிர்பார்க்கப்படும் ஆனந்தசங்கரி!"

✉ இருபது வருடங்களுக்கும் மேலாக பிரபல ஊடகவியலாளராக இருந்து சுட்டுக் கொல்லப்பட்ட ரேலங்கி செல்வராஜாவிற்கு சக ஊடகவியலாளர்கள் காட்டிய உதாசீனம் எதைக் காட்டுகிறது?

-என்.பாமா, கிருலப்பனை.

நம் நாட்டுத் தமிழ்த் தேசிய ஊடகங்களுக்கேயுரிய தர்ம நியாயத்தையும், அவர்கள் தொலைத்துவிட்ட மனிதக் குணாம்சங்களையும்!

(இவ்வளவு பயந்த பிறவிகள் என்றால், சிலருக்கு மட்டும் கொடுக்கிழுத்துப் பாய்ச்சிக் கொண்டு கோட்டை ரயில் நிலையத்துக்கு ஓடும் ஆபாசத்தையாவது விட்டுத்தொலைக்கலாம்! தங்கள் இழிவைக்கூட உணர்ந்துகொள்ளாத, இனவாதம் தலைக்கேறிய இந்த விடுதலை விரும்பிகள், இன்னும் எத்தனை கொலைகளை வரவேற்று, வெறி தீர்த்துக்கொள்ளப் போகிறார்கள்....? கருத்து வேறுபாடுகளைச் சகிக்க மாட்டாத கொலைகளுக்கு, நியாயங் காண தமிழ்த் தேசியம்... துரோகம்... விடுதலை.... வீரம்...: தூ!)

✉ காதலை முதலில் யார் சொல்வது, ஆணா? பெண்ணா?

-ஏ.ஏ.எம். ஃபயாஸ், பிபிலை.

அவர்கள் முகத்தில் வழிவதைப் பார்த்து குழந்தை கூடச் சொல்லிவிடுமே!

✉ இலங்கையிலுள்ள மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் என்பவற்றினதும், உறுப்பினர்களதும் எண்ணிக்கையை விளக்கமாகத் தரமுடியுமா?

-யூ.எல்.பஸ்மினா, கல்முனைக்குடி - 04.

மன்னிக்கவும், விஜயகாந்த் தமிழ்நாட்டில்!

✉ எல்லாக் கொலைகளையும் ஒன்று போலக் கண்டிக்க வேண்டும் என்கிறீர்களே, அதிகாரமுள்ள அரசு செய்வதற்கும், ஒடுக்கப்படுபவர்கள் தற்காப்புக்காகச் செய்வதற்கும் வித்தியாசம் இல்லையா?

-வி.நிஷாந்த், திருகோணமலை.

கொலைகளைச் செய்வது ஒடுக்கப்படும் மக்கள் அல்ல; அவர்கள் பெயரைச் சொல்லி ஆயுதம் ஏந்திய ஒரு குழுவே செய்கிறது. ஒடுக்குமுறையை எதிர்ப்பதன் பெயரால், தமது கட்டுப்பாட்டிலுள்ள மக்கள் மீதான ஆதிக்கத்தை அந்தக் குழு பெற்றுவிடுகிறது. ஒடுக்குமுறையை எதிர்க்கும் போராளிகளாகவும், தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின் ஆட்சியாளர்களாகவும் ஒரே நேரத்தில் இரு வகை அதிகாரங்களையும் பெற்றுக்கொள்கிறது அந்தக் குழு. இவ்வாறு ஒடுக்குமுறை அரசின் அதிகாரத்தைக் காட்டிலும் பெருமளவு அதிகாரத்தைக் கொண்ட அமைப்பாக அது மாறி விடுகிறது. அதன் கொலைகளை, விடுதலைக்கான கொலைகள் என்று அங்கீகாரமளிக்கக் கோருபவர்கள் ஆபத்தானவர்கள்தான்!

✉ அண்மையில் உங்களை மெய்சிலிர்க்க வைத்த செய்தி எது?

-செ.சுமதி, கோணப்பிட்டிய.

"ஒவ்வொரு விஷயத்திலும் புலிகளின் முடிவைக் கேட்டுக்கொள்வோம். அதேசமயம், நாங்களும் எங்களுக்குள் கூடி விவாதித்து ஒரு முடிவுக்கு வருவோம்" என்று ஒரு நிகழ்ச்சியில் கூட்டமைப்பு எம்.பி.யான ரவிராஜ் சொல்லக் கேட்டது.

✉ குழந்தைகளும் திரைப்படம் பார்க்குமா?

-எம்.எஸ்.றுகையா, மருதமுனை - 06.

நாமும் குழந்தைகள் ஆகாவிட்டால் தமிழ்ப் படங்களை ரசிக்க முடியாது.

✉ பேராசிரியர் ஒருவர் இன்றைய கொலைகள் பற்றிச் சொல்கிற அபிப்பிராயம், நம் படித்த நபுஞ்சகர்களுக்கு ஒரு சிறந்த உதாரணம் என்று நினைக்கிறேன். அவர் உதிர்க்கும் முத்தான கருத்துக்கள் இவை : "வடக்கு, கிழக்கின் அரசியற் கொலைக் கலாசாரத்தை இன்று கண்டிக்கிற தமிழ்த் தேசியத் தலைமைகளும், முன்னாள் போராளிக் குழுக்களும் அக் கொலைக் கலாசாரத்தை ஊட்டி வளர்த்துப் பயன் பெற்றவர்கள் தாம்."

"வடக்கு, கிழக்கு மாகாணத்தில் இன்று சட்டமும், ஒழுங்கும் நிலைகுலைந்திருப்பதற்கான முக்கிய பொறுப்பை இந்த நாட்டை மாறி மாறி ஆண்டு வந்த அரசாங்கங்கள் ஏற்க வேண்டும்."

"மிரட்டலைத் தமிழ் அரசியலில் ஒரு முக்கியமான அம்சமாக்கியதில் நமது அகிம்சாவாதித் தலைவர்கட்கும் ஒரு பெரிய பங்கு இருந்திருக்கிறது......"

ம்....நம் பிள்ளையின் தவறை மறைக்க நாம் எத்தனை பேர்களின் தவறுகளைக் கண்டுபிடித்துச் சொல்ல வேண்டியிருக்கிறது!

நடக்கும் கொலைகளைக் கண்டிக்காமலே, குற்றவுணர்வின்றி வாழ்வது எப்படி என்று பேராசிரியர் அருமையாகச் சொல்லித் தருகிறார்.

இன்றைய கொலைகளில் வளர்ந்துவிட்டிருக்கும் பாசிஸத் தன்மை பூசி மெழுகப்பட்டு, "கொலைகளை இன்று எதிர்ப்பவர்கள் ஒருவரும் உத்தமர்களில்லை. ஆதலால், தம்பிமார் எதிர்ப்புகளுக்குக் கலங்காமல் முன்னேறுங்கோடா.... ஆனால், அதே சமயம் மக்களைத் திரட்டிப் போராடுவதுதான் சரியானது என்பதையும் சொல்லி வைக்கிறேன்..."என்னும் பாணியில் தனது பாசிஸ அங்கீகாரத்தை நிகழ்த்துகிறார். என்ன மாதிரி ஒரு துரதிர்ஷ்டமான சூழல் நமக்கு!

முன்பு கொலைக் கலாசாரத்தை ஊட்டி வளர்த்தவர்கள் கண்டிப்பதால், இன்றைய கொலைகள் மற்றவர்களால் கண்டிக்கப்பட வேண்டியதல்ல என்கிறாரா? இன்றைய கொலைகளின் குணாம்சமும் அன்றைய கொலைகளின் குணாம்சமும் ஒன்றுதான் என்கிறாரா? அன்று கண்டிக்காததால் இன்றும் தான் கண்டிக்கப் போவதில்லை என்கிறாரா? தமிழ்ப் போராட்டத்தில் எப்போதும் கொலைகள் நடந்து வருகின்றன; எல்லோரும் கொலைகாரர்களாக இருந்திருக்கிறார்கள். எனவே, கொலைகளையும் கண்டித்து, கொலைகளைக் கண்டிப்பவர்களையும் ஒருசேரக் கண்டித்துக் கொண்டிருந்தால் முற்போக்காளனாயிருப்பதற்கு வேண்டிய திருப்தி கிடைத்துவிடும். அது போதும் என்கிறாரா?

-சி.செங்குட்டுவன், கொழும்பு - 13

ஆக மொத்தத்தில், இப்போது நடக்கும் கொலைகளை நேரடியாகக் கண்டிக்காமல் ஒரு முற்போக்குக் கட்டுரையை எப்படி எழுதுவதென்பது அவருக்கும் தெரிந்திருக்கிறது. படித்தவர்களல்லவா!



59

உலகில் தோன்றியுள்ள மிகச் சிறந்த சுழற் பந்து வீச்சாளர்களில் ஒருவராகக் கருதப்படுகின்ற மேற்கிந்தியத் தீவுகள் அணியைப் பிரதிநிதித்துவப்படுத்திய லான்ஸ் கிப்ஸ், 1961-62களில் பார்படோஸ்கி பிலிஜ்டவுன் மைதானத்தில் இடம்பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும், இந்திய அணிக்கும் இடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டியின் போது காலத்தால் மறக்க இயலாத மிகச் சிறந்த பந்து வீச்சில் ஈடுபட்டார்.

இப் போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸில் இவர் 53.3 ஓவர்கள் பந்து வீசி 38 ஓட்டங்களைக் கொடுத்து 8 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இதில் குறிப்பிடத்தக்க விடயம், 37 ஓவர்களுக்கு ஒரு ஓட்டத்தையேனும் இவர் எதிரணிக்கு வழங்காததாகும். லான்ஸ் கிப்ஸின் கிரிக்கெட் வரலாற்றில் மிகச் சிறந்த பந்து வீச்சாகக் குறிக்கப்பட்டுள்ளது இதே போட்டியின் இறுதி ஆட்டத்தில் இவர் 6 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகளை வீழ்த்தியதாகும்.

ஓர் இன்னிங்ஸாலும் 30 ஓட்டங்களாலும் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றி பெற்ற இப் போட்டியின் போது மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு பிரேன்க் வொரலும், இந்திய அணிக்கு நவாப் பதாவுதியும் தலைமை தாங்கினர்.

உலகில் இதுகால வரையில் உருவாகியுள்ள மிகச் சிறந்த சுழற் பந்து வீச்சாளர்கள் எனும்போது விமர்சகர்கள், முத்தையா முரளிதரனுக்கு அடுத்ததாகப் பெயர் குறிப்பிடும் லான்ஸ் கிப்ஸ் 1934ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 29ஆம் திகதி பிரித்தானியாவில் கயனா ஜோர்ஜ் டவுனில் க்வீன்ஸ்டவுன் பகுதியில் பிறந்தவர்.

கலி இடத்தில் நின்று மிகச் சிறந்த முறையில் களத் தடுப்பாட்டத்தில் ஈடுபடக்கூடிய வீரர் எனப் பெயர் பெற்ற கிப்ஸ், 1957-58 முதல் 1975-76 வரை 79 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றி 309 விக்கெட்டுகளை (சராசரி 29.09) பெற்றுள்ளார்.

இரு முறை இவர் 10 அல்லது அதற்கு மேல் என்ற வகையில் விக்கெட்டுகளைக் கைப்பற்றிக் கொண்டுள்ளதுடன் 18 முறை 5 அல்லது அதற்கு மேல் விக்கெட்டுகளைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

இலங்கை அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தி வருகின்ற நுவன் சொய்சா 1999ஆம் வருடம் நவம்பர் மாதம் 26ஆம் திகதி ஸிம்பாப்வே அணிக்கெதிராக ஹராரேயில் இடம் பெற்ற டெஸ்ட் போட்டியொன்றின் இரண்டாவது இன்னிங்ஸில் தொடர்ந்து மூன்று விக்கெட்டுகளைக் (Hattrick) கைப்பற்றியுள்ளார்.

இலங்கை கலந்துகொண்ட 95ஆவது டெஸ்ட் போட்டியான இப் போட்டியில்தான் தொடராக மூன்று விக்கெட்டுகளை இலங்கை அணியைச் சேர்ந்த வீரர் ஒருவர் பெற்றுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதே நேரம் டெஸ்ட் போட்டியொன்றின் இரண்டாவது இன்னிங்ஸில் தொடராக மூன்று விக்கெட்டுகளைக் கைப்பற்றிய உலகின் முதலாவது வீரராக நுவன் சொய்சா வரலாற்றில் இடம் பிடித்துக் கொண்டுள்ளார்.

இப் போட்டியின் போது இவர் ட்ரேவர் கிறிபர், மரே கொட்வின் மற்றும் றீல் ஜோன்சன் ஆகிய மூன்று வீரர்களையே ஆட்டமிழக்கச் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1978ஆம் வருடம் மே மாதம் 13ஆம் திகதி பிறந்த நுவன் சொய்சா, கொழும்பு இசிபத்தான வித்தியாலயத்தின் பழைய மாணவராவார். இடது கை வேகப்பந்து வீச்சாளரான இவர், பின்னர் எஸ்.எஸ்.ஸி.யுடன் இணைந்து கொண்டார்.

1996-97ஆம் வருடங்களில் நியூசிலாந்துக்கான சுற்றுப் பயணத்தின்போது முதன் முறையாக டெஸ்ட் போட்டியில் கலந்துகொண்ட நுவன் சொய்சா, இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ள 66ஆவது டெஸ்ட் வீரர் ஆவார்.

**- மைந்தன்.**

# இந்திய கிரிக்கெட் அணி எப்போது கற்றுக் கொள்ளும்?

**ஆ**கஸ்ட் 9ஆம் திகதி ஆர். பிரேமதாஸ மைதானத்தில் இடம் பெற்ற இலங்கை - இந்திய அணிக்கு இடையில் இடம் பெற்ற 'இந்தியன் ஒயில்' ஒரு நாள் சர்வதேசப் போட்டியின் இறுதியாட்டத்தில் இலங்கை அணி 18 ஓட்டங்களால் வெற்றி பெற்றது அனைவருக்கும் தெரிந்ததே!

இவ்வாட்டத்தில் பல குறை நிறைகளை காணக்கூடியதாக இருந்தது என்று பல இரசிகர்கள் கருத்து தெரிவித்தனர்.


ஆரம்பத்தில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணியின் விக்கெட்டுகள் ஆரம்பத்தில் மளமளவென்று சரிந்தன. ஆயினும் பின்வரிசை துடுப்பாட்ட வீரர்களின் நிதானமான ஆட்டம் மூலம் இந்திய அணிக்கு 283 என்ற ஓட்ட இலக்கை இலங்கை அணி நிர்ணயித்தது.

இரண்டாவதாக துடுப்பெடுத்தாடிய இந்திய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் வீரேந்திர ஷேவாக் 22 பந்துகளுக்கு 48 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்து சிறந்த ஒரு ஆரம்பத்தை பெற்றுக் கொடுத்தார். இதன் பின் களமிறங்கிய கங்குலி, ட்ராவிட், தோனி போன்றோர் சிறந்த துடுப்பாட்டத்தைக் காட்டி அணியின் விக்கெட்டுகளை காப்பாற்றினாலும் ஓவர்களை அதிகமாக பயன்படுத்திவிட்டார்கள். 200 ஓட்டங்களைத் தாண்டிய பின் அணியின் விக்கெட்டுகள் சரமாரியாகச் சரிந்தன. ஆயினும் கடுமையாகப் போராடிய போதும் அணியின் வெற்றி இலக்கை அடைய முடியவில்லை. 265 ஓட்டங்களுக்கு அனைத்து பந்து வீச்சுக்களும் முடிந்து விட அணி பெரும் ஒரு தோல்வியைத் தழுவிக் கொண்டது.

இது பற்றி பலர் பலவாறாக கருத்து தெரிவித்தனர். அதில் முன்னாள் கிரிக்கெட் வீரரும் இந்நாள் பிரதி அமைச்சருமான அர்ஜுன ரணதுங்க கருத்து தெரிவிக்கையில்,

"இந்திய அணி 3 இடது கை பந்நு வீச்சாளர்களைக் களம் இறக்கியது முதல் பிழை. இடது கை பந்து வீச்சாளர்களின் பந்து வீச்சுக்கள் ஒரே மாதிரியாகவே இருக்கும். எனவே துடுப்பாட்ட வீரர்களை நிலைகுலைய வைக்க முடியாது. எனவே வேகப் பந்து வீச்சாளர்களை களத்தில் அதிகம் இறக்காமல். ஹர்பஜன் சிங், அனில் கும்ளே ஆகியோரை பயன்படுத்தியிருக்கலாம்" என்றார்.

இந்திய அணி சிறந்த பந்து துடுப்பாட்ட வீரர்களை கொண்டுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை. ஆயினும் அணியில் சிறந்த பந்து வீச்சாளர்கள் இல்லை என்பது அனைவரது குறைகளாகவே இருக்கிறது. இக்குறையை இப்போட்டிக்கு பின்னாவது நிவர்த்தி செய்ய முடியுமா என்பது தான் கேள்விக்குறி? அணியில் வேகப்பந்து வீச்சாளர்களாக நெகரா, பாலாஜி, பட்டேல், சகீர் கான் ஆகிய சில வீரர்களே பிரகாசிக்கின்றனர். சுழற்பந்து வீச்சாளர்களில் ஹர்பஜன் சிங் மற்றும் அனில் கும்ளே ஆகிய இருவரும் பந்து வீச்சின்



ராகுல் ட்ராவிட்

போது ஓட்டங்களை கொடுத்து தான் விக்கெட்டுகளை கைப்பற்றுவார்கள். அந்த வகையில் ஒரு நெருக்கடியான சூழ்நிலையில் இவர்களின் பந்து வீச்சு சரியாக அமையாது என்பது உண்மையான விடயம். மித வேகப் பந்து வீச்சாளர்களான ஷேவாக், கங்குலி ஆகியோர் சொல்லத் தேவையில்லை. அவர்களின் பந்து வீச்சு இலங்கை மைதானங்களில் எடுபடாமல் போனதை அனைவரும் கண்கூடாகப் பார்த்தார்கள்.


அது தவிர இந்திய அணியின் ஹர்பஜன் சிங் மற்றும் அனில் கும்ளே ஆகியோர் மைதானத்தில் துடுப்பாட்ட வீரர்களை தங்கள் மொழிகளில் சொல்லத்தகாத வார்த்தைகளை சொல்லி பேசுவதும் ஒரு முன்னேற்றமான அணிக்கு சரியான செயலாக தெரியவில்லை. இலங்கைப் போட்டிகளில் கூட ஹர்பஜன் சிங் அடிக்கடி இலங்கை வீரர்களை வாய்க்குள் ஏதோ சொல்லிச் சொல்லி பேசுவது அவரது வாய் அசைவையும் அவரது முகத்தில் இருக்கும் உணர்ச்சியின் மூலமாகவும் ஹிந்தி தெரியாத சாதாரண கிரிக்கெட் ரசிகர்களுக்கு கூட நன்கு தெரிகிறது.

எது எவ்வாறு இருப்பினும் இந்திய அணிக்குள் அதிரடி மாற்றங்கள் இடம் பெற்றால் தான் இனிமேலும் அவர்கள் தோல்வியிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வார்கள் என்பதே அனைவரதும் கருத்தாகும். அவர்களுக்கு சிறந்த உதாரணமாக அவுஸ்திரேலியா அணியை எடுத்துக் கொள்ளலாம். இனியாவது இந்திய அணி போட்டியின் தன்மையையும் இரசிகர்களின் எதிர்பார்ப்பும் தெரிந்து விளையாடினால் இரசிகர் பலம் என்றும் இந்திய அணிக்கு இருக்கும்.

# இந்திய அணியில் அதிரடி மாற்றங்கள்



**இலங்கையில் இந்திய அணி தோல்வியைத் தழுவியதை அடுத்து இந்திய அணி அடுத்ததாக சிம்பாவே அணியுடனா போட்டியில் பங்குபற்ற சிம்பாப்வேக்கு புறப்பட்டுச் செல்ல இருக்கிறது. இப்போட்டியில் இந்திய அணிக்குள் பல மாற்றங்கள் இடம் பெற்றுள்ளதை உணர முடிகிறது. இந்திய அணிக்குத் தலைவராக டிராவிட்டையா, கங்குலியையா நியமிப்பது என்று இந்திய கிரிக்கெட் சபை பலவாறாக யோசித்து, கங்குலியையே இப்போட்டிக்குத் தலைவராக நியமிப்பது என்ற முடிவுக்கு வந்துள்ளது. இது தவிர இப்போட்டியில் பாலாஜி, கும்ளே, நெகரா ஆகிய மூன்று வீரர்களும் இடம் பெறவில்லை என்ற செய்தியும் அனைவரையும் வியப்புக்குள்ளாக்கியுள்ளது.**





**இலங்கை அணியுடனான போட்டியை அவதானித்தே இவ்வாறான மாற்றங்களைச் செய்ததாக கிரிக்கெட் சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

# எண்களின் பலன்கள் எப்படி?

| *எழுத்துக்கள்* | *எண்கள்* | *கிரகம்* |
|---|---|---|
| A, J, I, Y, Q | - 1 எண் | சூரியன் |
| B, K, R | - 2 எண் | சந்திரன் |
| C, G, L, S | - 3 எண் | குரு |
| D, M, T | - 4 எண் | ராகு |
| E, H, N, X | - 5 எண் | புதன் |
| U, V, W | - 6 எண் | சுக்கிரன் |
| O, Z | - 7 எண் | கேது |
| F, P | - 8 எண் | சனி |

உதாரணம்: D. V I S A G A N
4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் எண்: 1 - கூட்டெண் எண்: 4

1, 10, 19, 28 போன்ற திகதிகளில் பிறந்து திகதி, மாதம், வருடம் ஆகிய இம் மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 4 வந்தால் சுமாரான உயரமாகவும், அலை போன்ற முடியுடையவராகவும் இருப்பார்கள். இரட்டை நாடியும், பார்ப்பதற்கு கம்பீரமும் கொண்ட இவர்கள் எல்லாவிதமான விஷயங்களையும் தெரிந்து வைத்திருப்பார்கள். சிற்றின்ப விஷயங்களில் நாட்டம் அதிகமுள்ள இவர்கள் நேர்மையற்ற இன்பங்களை அனுபவிக்க ஆசைப்பட மாட்டார்கள். பேசுவதின் மூலமும், எழுதுவதின் மூலமும் உலகத்தைச் சீர்திருத்த வேண்டுமென்று எண்ணுவர். தன் மனதில் தோன்றுகின்ற கருத்துக்களைத் துடுக்காகவும் கூறுவர். பிறர் பேசுவதைப் பொறுமையாகக் கேட்டுப் பதில் கூறாது இடையில் மறுத்துப் பேசுவர்.

பிறர் கூறுவதை நம்பாமல் தீர விசாரித்தும் அதைப் பற்றி விவாதித்தும், தன் மனதிற்குச் சரியென்று தெரிந்தால்தான் ஒத்துக்கொள்ளுவர். நேர்மையாக வாழ ஆசைப்படும் இவர்கள் போலிகளை வெறுப்பவராவர். இதனால் நண்பர்கள் இவர்களை விட்டுப் பிரியமாட்டார்கள். தனக்குப் பிடிக்கவில்லையென்றால் யாருக்கும் எவ்விதத் தீங்கும் செய்யாமல் ஒதுங்கிக்கொள்வர். இவர்கள் மிகுந்த புத்திசாலித்தனமுடையவர்களாதலால் கதைகள், சாஸ்திரம், மதம், ஜோதிடம் போன்றவற்றிலும் அதிக நாட்டம் செலுத்துவர். எப்பொழுதும் பல விஷயங்களைச் சேகரித்துக் கொண்டேயிருப்பர். நல்ல பேச்சுத் திறன் படைத்த இவர்கள் உத்தியோகம் பார்த்துக் கொண்டிருக்கும் போதே தொழில் செய்ய வேண்டும் என்று முயல்வர். இன்னும் சிலர் அரசியலில் பேச்சாளராகி உயர்வர்.

இவர்களுக்கு வாகனத்தாலும், இரும்பு, நெருப்பு, உலோகம் சம்பந்தமான தொழில்களினாலும் இலாபம் கிடைக்கும். ஆனால் மனம் எதையோ சிந்தித்துக் கொண்டே இருக்கும். பிறருக்காக சில விஷயங்களில் தலையிட்டு மாட்டிக் கொண்டு வேதனைப்படுவதும் உண்டு. தெய்வீக அனுக்கிரகம் உள்ளவர்களாதலால் எவ்வித ஆபத்திலிருந்தும் தப்பித்துக் கொள்வர். எப்பொழுதும் பலர் இவர்களைச் சுற்றிக் கொண்டே இருப்பர். பண விஷயங்களில் நாணயமாக நடந்து கொள்ளும் இவர்கள் தலைமையைப் பலர் ஏற்றுக்கொள்ளுவர். புகழ்ச்சியில் மயங்காது இருக்க வேண்டியது அவசியம்.

உத்தியோகத்திலிருப்பவரும், தனியாகத் தொழில் செய்பவரும் இந்த எண்ணிக்கையில் அதிகம் இருப்பதால் இது ஒரு சிறந்த எண்ணாகக் கருத வேண்டும். இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்களுக்கு வாழ்க்கை சிறப்பாக அமையவில்லையென்றால், பெயர் பொருத்தமானதாக அமையவில்லை என்றுதான் கருத வேண்டும். இதனால் பெயரைக் கீழே குறிப்பிட்டபடி மாற்றி அமைத்துக் கொள்ளவேண்டும்.

**தொழில்:**

இந்த ஆதிக்கத்தில் பிறந்தவர்களுக்குப் பேச்சாலும் எழுத்தாலும் பொருள் சேரும். இரும்பு, உலோகம், நெருப்பு போன்ற தொழில்களாலும், நான்கு கால் சாமான்கள், வாகனம் போன்றவற்றாலும் பொருள் சேர்க்க யோகமுண்டு.

**நோய்:**

இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு உஷ்ண சம்பந்தமான அனைத்து நோய்களும் வரும். பைல்சு, இரத்த அழுத்தம், வாயு சம்பந்தப்பட்ட கோளாறுகள் வருவதற்கு வாய்ப்பிருப்பதால் முன்கூட்டியே இதைத் த்விர்ப்பதற்கான நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். பெயரைப் பொருத்தமான எண்களில் மாற்றியமைத்துக் கொண்டாலும் நோய்கள் குறையும்.

**பெயர் அமைக்கும் முறை:**

சூரியன், ராகு ஆதிக்கத்தில் பிறந்த இவர்களுக்கு சுக்கிரன் ஆதிக்கம் கொண்ட எண்களிலும், பெயரை மாற்றி அமைத்துக் கொள்வது சிறப்பாகும். சூரிய ஆதிக்கமான 19, 37, 46, 64, 84 சுக்கிரமான 15, 24, 33, 42, 60, 69 போன்ற எண்களில் பெயரையோ அல்லது வியாபார விலாசத்தையோ, வைத்துக் கொண்டால் நல்ல முன்னேற்றத்தைப் பெறலாம்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண் : 1, 6.
யோகமான திகதிகள் : 1, 10, 19, 28; 6, 15, 24.
யோகமான மோதிரக்கல் : கனகபுஷ்பராகம், வெளிர் நீலக்கல்.
யோகமான நிறம் : மஞ்சள், வெளிர் நீலம்.
ஆகாத திகதிகள் : 8, 17, 26.
ஆகாத நிறம் : கறுப்பு, சிவப்பு.

*அடுத்த வாரம் பிறப்பெண் 1, கூட்டெண் 5 பற்றிப் பார்ப்போம்.*

# ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் (1879 - 1955)


# உலகை வியக்க வைத்தவர்கள்

பொதுச்சார்புக் கொள்கை இன்னொரு அம்சத்திலும் தனிச்சிறப்புடன் விளங்குகிறது. மற்ற அறிவியல் விதிகளில் பெரும்பாலானவை ஏறத்தாழத்தான் செல்லும்படியாகக் கூடியவை. அவை பல சூழ்நிலைகளில் சரியாக உள்ளன. ஆனால், எல்லாச் சூழ்நிலைகளிலும் சரியாக இருப்பதில்லை. இதற்கு மாறாக, பொதுச் சார்புக் கொள்கை எல்லாச் சூழ்நிலைகளிலும் சரியாகவே இருந்து வருகிறது. இதுகாறும், எந்த ஒரு சூழ்நிலையிலும் அந்தக் கொள்கை தவறாகிப் போனதில்லை. இந்தக் கொள்கைக்கு எதிர்காலப் பரிசோதனைகளில் இந்த அளவுக்கு வெற்றி கிட்டாமல் போகலாம். எனினும், இதுகாறும் விஞ்ஞானிகளால் வகுக்கப்பட்டுள்ள அணுகுமுறைகளில், இறுதி உண்மைக்கு மிக நெருக்கமாக உள்ளது சார்புக் கொள்கைதான் என்பதில் ஐயமில்லை.

ஐன்ஸ்டீன் தமது சார்புக் கொள்கைகளுக்காகப் புகழ் பெற்றுள்ள போதிலும், அவருடைய மற்ற அறிவியல் சாதனைகளும் விஞ்ஞானி என்ற முறையில் அவருக்குப் புகழ் தேடித் தந்திருக்கின்றன. ஒளி மின்விளைவினை (Photo Electric Ef fect) அவர் விளக்கிக் கூறினார். இதற்காக அவருக்கு இயற்பியலுக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. இந்த விளக்கத்தில் "ஃபோட்டோன்" என்ற ஒளித்துகள் இருப்பதை அவர் கண்டறிந்து கூறினார். ஒளியில் மின்காந்த அலைகள் அடங்கியிருக்கின்றன என்றும், அலைகளும், துகள்களும் ஒன்றுக்கொன்று நேர் எதிரானவை என்றும் நெடுங்காலமாகக் கருதப்பட்டு வந்தது. இந்தப் பழைய கொள்கையை ஐன்ஸ்டீனின் கொள்கை சிதறடித்து விட்டது. இவருடைய ஒளிமின் விளைவு விதி நடைமுறையில் பெருமளவுக்குப் பயன்பாடுடையதாகியதுடன், ஒளித் துகள் பற்றி இவரது கருதுகோள் பேருதவியாக இருந்தது. இன்று கதிரியக்க அலைவீச்சுக் கோட்பாட்டின் ஓர் அங்கமாக இந்தக் கருதுகோள் விளங்குகிறது.

ஐன்ஸ்டீனின் முக்கியத்துவத்தை மதிப்பிடுங்கால், அவரை ஐசக் நியூட்டனுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது பொருத்தமாக இருக்கும். ஐசக் நியூட்டனின் கோட்பாடுகள், அடிப்படையில் புரிந்து கொள்வதற்கு எளிதானவை. இந்தக் கோட்பாடுகளை முதன் முதலில் உருவாக்கியதில்தான் அவருடைய அறிவாற்றல் அடங்கியுள்ளது. மாறாக, ஐன்ஸ்டீனின் சார்புக் கொள்கைகள் புரிந்து கொள்வதற்கு மிகவும் கடினமானவை. அவற்றை மிகக் கவனமாக விளக்கிக் கூறினால்கூட விளங்கிக் கொள்வது கடினம். அப்படியானால், அந்தக் கொள்கைகளை உருவாக்குவது எவ்வளவு கடினமாக இருந்திருக்கும் என்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

நியூட்டனின் சில கொள்கைகள் அவர் காலத்தில் நிலவிய அறிவியல்



கொள்கைகளுடன் பெரிதும் முரண்பட்டிருந்த போதிலும் தனக்குத்தானே முரண்பாடாக இருக்கவில்லை. இதற்கு மாறாக, சார்புக் கொள்கையில் முரண்பாடுகள் நிறைந்திருக்கின்றன. ஐன்ஸ்டீன் புகழ் பெறாதிருந்த வாலிபப் பருவத்திலேயே தமது கருதுகோள்களை வகுத்தமைத்தார். அவை பரிசோதிக்கப்படாமல் இருந்தன. அவர் தமது கருதுகோள்களில் கண்டறிந்த முரண்பாடுகளால் மனச் சோர்வடையவில்லை. அக் கொள்கைகளை அவர் ஒதுக்கித் தள்ளிவிடவில்லை. இந்த முரண்பாடுகளை அவர் தமது அறிவாற்றல் மூலம் மிகக் கவனமாக ஆராய்ந்தார். இந்த முரண்பாடுகள் தமது தவறினால் ஏற்பட்டவை அல்ல என்பதையும், அவை இயல்பாகவே உள்ளவை என்பதையும் அவர் மெய்ப்பித்தார். அந்த முரண்பாடுகள் ஒவ்வொன்றுக்கும் தீர்வு காண்பதற்குரிய சரியான, நுட்பமான வழி உண்டு என்பதையும் அவர் கூறினார்.

இன்று, ஐன்ஸ்டீனின் கொள்கைதான், நியூட்டனின் கொள்கையைவிட அடிப்படையில் மிகவும் "துல்லியமானது" என்று நாம் கருதுகிறோம். எனினும், இந்தப் பட்டியலில் ஐன்ஸ்டீன் கீழ்மட்டத்தில் இடம் பெற்றிருப்பதேன்? ஏனென்றால் நியூட்டனின் கொள்கைகள் தாம் நவீன அறிவியலுக்கும் தொழில் நுட்பத்திற்கும் அடித்தளம் அமைத்தன. நவீனத் தொழில் நுட்பம் இன்றுள்ள அளவுக்கு முன்னேற்றமடைந்திருப்பதற்கு நியூட்டனின் கண்டுபிடிப்புகளே காரணம். ஐன்ஸ்டீனின் கண்டுபிடிப்புகள் காரணம் அல்ல.

இந்தப் பட்டியலில் ஐன்ஸ்டீனின் இடத்தைப் பாதிக்கின்ற மற்றொரு காரணமும் உண்டு. பெரும்பாலான தேர்வுகளில் ஒரு முக்கியமான கொள்கையை உருவாக்குவதில் பலர் பங்கு பெற்றிருக்கலாம். சமதர்ம தத்துவ வரலாறு, மின்விசை மற்றும் காந்த விசைக் கோட்பாட்டின் வளர்ச்சி ஆகியவற்றை இதற்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம். சார்புக் கொள்கையைக் கண்டுபிடித்த பெருமை முழுமையாக ஐன்ஸ்டீனைச் சேராது என்ற போதிலும் அதன் பெரும் பகுதிக்கு அவர் தகுதியுடையவர் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. இதைப் போன்று முக்கியத்துவம் வாய்ந்த வேறெந்தக் கொள்கையும் போலன்றி சார்புக் கொள்கைகளின் பெரும்பகுதி தனியொரு மனிதரின் அறிவுத் திறனால் உருவானது எனக் கூறுவது நியாயமானதாகும்.

ஜெர்மனியிலுள்ள உல்ம் நகரில்

**வியப்புகள் தொடரும்....**

# காதிலை பூ கந்தசாமி

### நோட்டீஸ் பலகை



வணக்கமுங்கோ....

> நான் சொல்வ தெல்லாம் பொய்.
> பொய்யைத் தவிர
> வேறொன்றுமில்லை
> *-காதில பூ கந்தசாமி-*

பிறந்து வளர்ந்த மண்ணுக்கு அப்பப்போ விருந்தாளியா வந்திட்டுப் போறதை நினைக்கேக்க மனசுக்கு கவலையாத்தான் கிடக்கு. என்ன செய்யிறது எங்களின்ர நிலைமை அப்புடியா யிட்டுது. மண் கேட்டு, விடுதலை கேட்டு வீறுகொண்டெழுந்த எங்கட சனம், இண்டைக்கு ரெண்டையும் இழந்து நிக்கினம். உது ஒரு பக்கமிருக்கட்டும். வந்த அலுவலைப் பற்றிச் சொல்ல மறந்திட்டன். செத்தவீடெல்லாம் பிரச்சினையில்லாம ஒருமாதிரியா முடிஞ்சிட்டுது. திரும்பிப் போக வேணும். அதுதான் யோசனையா கிடக்கு. திரும்பவும் அவையின்ர கெடுபிடிகளுக் குள்ள போய் வவுனியாவாலை வெளிக்கிட முடியுமெண்ட நம்பிக்கை இல்லை. விட்டுப் போட் டுப் பிளேனாலை போறதுதான் பிரச்சினை யில்லையெண்டு யோசிச்சுக் கொண்டிருக்கேக் கையே பழைய பிரண்ட்ஸ்மார் ரெண்டு பேர் வந்து ஏதோ கள்ளனைப் பிடிக்குமாப்போலை கையில பிடிச்சுக் கொண்டிச்சினம். சரியெண்டிட்டு அவையோடை சேர்ந்து கள்ளுக் கடைக்குப் போனன்.

அதையேன் கேப்பான்! அங்கதானே பொலி ரிக்ஸே ஆரம்பிக்குது. ஜனாதிபதி எலக்ஷனைப் பத்தி ஒருவர் வச்ச லெக்ஸரில முதல் ரவுண்டில ஏத்தினது முறிஞ்சு போச்சு. ரெண்டாம் ரவுண்டில அடுத்தவர் பொதுக் கட்டமைப்பைப் பற்றி ஆரம்பிக்கவும் தடுத்துப் போட்டன். ஏன் தெரியுமோ? ஏற்கனவே உந்தப் பொதுக் கட்ட மைப்பு நடைமுறைக்கு வராதெண்டும், அப்புடி வந்தாலும் அது மக்களுக்குப் பிரயோசனமா இருக்காதெண்டதையும் நான் விலாவாரியா சொல்லிப் போட்டன். ஆக, யாழ்ப்பாணத்தின்ர கரண்ட் சிச்சுவேஷன் எப்பிடியெண்டு கேட்டன்.

அதையேன் கேக்கிறியள், ஒரே ஆர்ப்பாட்டம் எண்டிறாங்கள், டயர் எரிப்பு எண்டிறாங்கள், ஹர்த்தால் எண்டிறாங்கள். உந்தக் கோதாரி யெல்லாம் கொஞ்சம் ஓயுதெண்டு பார்த்தால் இப்ப திரும்பவும் ஆக்களை கொலை செய்யத் தொடங்கிட்டாங்கள். அதிலையும் உந்த முரசு வித்த பெடியனைச் சுட்டதும், பொலிஸ் அத்தியட்சரை வெட்டிப் போட்டதும் ரொம்பவும் கொடூரமான கொலைகள் தெரியுமோ எண்டு ஒருவர் சொல்லி முடிக்கு முன்னமே இடைமறிச்ச மற்றவர், உண்மையைச் சொல்ல வேணு மெண்டால், சமாதானம் ஒண்டு வரப்போறதில்லை ஆக இனியொரு சண்டைதான் வரப்போகுது. அது எப்ப வரப்போகுதெண்டுதான் தெரியல்லை தெரியுமே எண்டார். அதோடை விட்டாரே? என்னிட்டையே கேக்கிறார் சண்டை வருமோ, வராதோ எண்டு.

உந்தக் கேள்விக்கு எனக்கெண்டால் எப்புடிப் பதில் சொல்லுறது எண்டு தெரியல்லை. விகிதாசார அடிப்படையில நடந்து கொண்டிருக் கிற சம்பவங்களைப் பார்க்கேக்க, சண்டை யொண்டு வரும் எண்டதுதான் கன்போம். குடியில இருக்கிற இவங்களை நம்பி எப்புடி பேசிறது எண்ட யோசனையும் எனக்கு. ஏன் தெரியுமோ? நாளைக்கு வெறி முறிஞ்சாப் பிறகு உவன்தான் உப்பிடிக் கதைச்சவன் எண்டு உளறிப் போட்டாங் கள் எண்டால், செத்தவீட்டுக்கு வந்த எனக்கும் பிறகு சங்குதான். ஏனெண்டால் யாழ்ப்பாணத் தின்ர நிலைமை அப்புடித்தான் இருக்கு. சன சமூக நிலையங்களில போய் அவையின்ர போராட்டப் படங்களைப் போட்டுக் காட்டி ஆள் சேர்க்கிறதும், டியூட்டரிகளில போய் 'பொக்கட் மீட்டிங்' போட்டு வீர வசனம் பேசிறதும் ஏதோ ஷெடூல் போட்டு செய்யுமாப்போலை கிடக்கு. இவை என்னதான் உப்பிடி உடும்புப் பிடியா ஆள் திரட்டினாலும் சனத்துக்கு இவையின்ர அடாவடித்தனங்கள் பிடிக்கயில்லை எண்டதை ஒரு சில சனம் கதைச்சதில இருந்து தெரிஞ்சு கொள்ளக் கூடியதா இருந்திச்சுது. எண்டாலும் சனம் ரெண்டாவது ஆளை நம்பிக்கையோடை பார்க்கிறமாதிரித் தெரியல்லை. என்ன செய்யிறது, எல்லாம் தலை கீழா மாறிப் போச்சுது.

இடையில எங்கட எம்.பி.மாவையாரின் மச்சானையும் சந்திச்சனான். ஆள் ரொம்ப மனசு உடைஞ்சு போய் இருந்தார். பின்ன என்னப்பா உம்முடைய மச்சான் எம்.பி. நீர் உப்பிடி வாடிப்போய் எதையோ பறிகொடுத்த மாதிரி நிக்கிறீர் எண்டு சாதாரணமாகத்தான் கேட்டனான்.

அவர் மடை திறந்த வெள்ளம் மாதிரி மனசு திறந்து கொட்டிப் போட்டார். தான் இப்ப மாவையாரோடை கதைக்கிறது இல்லை யெண்டும், அவர்தான் மானங் கெட்ட வாழ்க்கை வாழுறார் எண்டால் தனக்கும் அப்புடி வாழ முடியாதெண்டும் சொன்னவர்.

ஏனப்பா உப்பிடிச் சொல்றீர்? அவையின்ர காட்டிலைதானே மழை பெய்யுது. ஏன் உமக்கொரு வேலையைப் போட்டுத்தரச் சொல் லிக் கேட்டிருக்கலாம்தானே எண்டன்.

அந்த அநியாயத்தை ஏன் கேக்கிறீர். அவை நினைக்கிற மாதிரி ஒண்டும் செய்ய ஏலாது. ஏன் தெரியுமே? அவையின்ர ரைவர் தொடக்கம் பாதுகாவலுக்கு வாறவர் வரைக்கும் பெடியள் தான் தங்கட ஆக்களைப் போட்டிருக்கினம். உந்த நடைமுறை எண்ட மச்சானுக்கு மட்டுமில்லை. கூட்டமைப்பு எம்.பி.மார் கன பேருக்கும் உப்பிடித்தான். பரிசு கெட்டதுகள்.....

பதவிக்காக வீட்டுக் காவலில இருக்கிற மாதிரி இருக்குதுகள் எண்டு திட்டித் தீர்த்தார்.

எனக்கு இவர் மேலையும் சந்தேகம் வலுக் கத் தொடங்கிட்டுது. ஏன் தெரியுமோ? உப்பிடி யெல்லாம் கதைச்சு அவையின்ர வண்ட வாளங்களை கக்கிப்போட்டு என்ர வாயாலை கதை பிடுங்கப் பார்க்கிறாரோ தெரியல்லையே எண்டிட்டு, ஆளை மெதுவா வெட்டி விட்டுப்போட்டு நழுவிட்டன்.

சே.... யாழ்ப்பாணத்தில பழைய நிலைமை இல்லாமல் போனதோடை யாரை நம்புறது, யாரை நம்பாம விடுறது எண்டு ஒண்டுமாத் தெரியல்லை. எண்ட இடத்திலையே கண்ணைக் கட்டிவிட்ட மாதிரி இருக்கு. உதே நிலை நீடிச்சால் இன்னும் மோசமாத்தான் போகப் போகுது.

நல்லூர் கந்தா..... நீதானப்பா எல்லாத் துக்கும் சாட்சியெண்டிட்டு புறப்பட்டிட்டன்.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(18.08.2005 தொடங்கி 24.08.2005 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

சிங்கம் - சூரியன், கன்னி - வியாழன், வெள்ளி, கேது, மீனம் - இராகு, மேடம் - செவ்வாய், கர்க்கடகம் - புதன், சனி.
சந்திரன் மகரம், கும்பம், மீனம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம் :**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.)
தொழில்நிலை நன்மை, பல விதப் பேறு, அன்னியர் உதவி, மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை, குடும்ப மேன்மை, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**இடபம் :**
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.)
தொழில் அலைச்சல், பணச் செலவு, வெளியிட வாழ்க்கை, அன்னியர் பகை, குடும்பக் கலகம், உத்தியோக மாற்றம், மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**

**மிதுனம் :**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.)
தொழில் நன்மை, காரியானுகூலம், உயர்ந் தோர் நட்பு, குடும்ப மகிழ்ச்சி, உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**

**கர்க்கடகம் :**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.)
தொழில் பேறு, பண வரவு, மனக்குறை நீங்கும், முயற்சி பலிதம், குடும்ப நன்மை, உத்தியோகச் சிக்கல், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**சிங்கம் :**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.)
தொழில் அலைச்சல், பணச் செலவு, வெளியிட வாழ்க்கை, அன்னியர் உதவி, பிரயாணச் செலவு, குடும்பக் கஷ்டம், உத்தியோகப் பலம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசா யிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**கன்னி :**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.)
தொழில் நன்மை, காரியானுகூலம், புதிய முயற்சி, வெளியிட வாழ்க்கை, மனக்குறை யதிகம், குடும்பப்பேறு, உத்தியோக மகிழ்ச்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**துலாம் :**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.)
தொழில் அலைச்சல், பெரி யோர் சகாயம், தூரஇடப் பயணம், மனக் கலக் கம், குடும்பச் சுமை, உத்தியோக மாற்றம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**விருச்சிகம் :**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை.)
தொழில் நன்மை,- காரியானு கூலம், பலவிதப் பேறு, உயர்ந்த எண்ணம், குடும்பப் பகை, உத்தியோக முயற்சி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 04.**

**தனு :**
(மூலம், பூராடம், உத்தரா டத்து முதற்கால்.)
தொழில் கெடுதி, வீண் பிரயாசம், செலவு மிகுதி, பெரியோர் உதவி, வெளியிட வாழ்க்கை, அன்னியர் சகவாசம், உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**

**மகரம் :**
(உத்தராடத்துப் பின் முக் கால், திருவோணம், அவிட் டத்து முன்னரை.)
தொழில் சிக்கல், பணமுடங்கல், தொழிலாளர் தொல்லை, குடும்பக் கலகம், மனக் கவலை, உத்தியோகப் பகை, மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி குழப்பம், விவசா யிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**

**கும்பம் :**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.)
தொழில் சிறப்பு, பண வரவு, காரியானுகூலம், பலவிதப்பேறு, குடும்ப சுகம், மனக்குறை நீங்கும், உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**மீனம் :**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட் டாதி, ரேவதி.)
தொழில் அலைச்சல், பணச் செலவு, கடன்படல், பெரியோர் உதவி, மனக்குறை யதிகம், குடும்பத் தொல்லை, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

Regd. as a News Paper at the G.P.O.(QD/81/NEWS/2004)


# இதய வீணை

தினமும்

மாலை 6.30 தொடக்கம்
இரவு 8.30 மணி வரை

கிழக்கு மாகாணம் 107.9, 104.6
வட மாகாணம் 98.0
கொழும்பு 105.6

அடக்கப்பட்ட மக்களின் உணர்வுகள் கருத்துக்களாய் கதைகளாய்... செய்திகளாய்... நமது காதுகளில்

நாடு முழுவதும் தென்றல் FM அலைவரிசையில்....

இதய வீணையின் பொதுத் தொடர்புகளுக்கு
இதய வீணை
த.பெ. இல - 1665
கொழும்பு.
தொலை பேசி :- 0773114208
Web - www. tirradio.com
E-Mail : idayaveenai@hotmail.com
info@tirradio.com

இலங்கையில் ஒலிபரப்பாகும்
இதயவீணை நிகழ்ச்சிகள் இப்பொழுது
ஐரோப்பிய நாடுகளில் வாழும்
எமது தாயக உறவுகளுக்காக
செய்மதி ஊடாகவும் ஒலிபரப்பப்படுகிறது

| | |
|---|---|
| Satellite : | HotBird - 6 |
| Localization : | 13° East |
| Frequency : | 11013 MHz |
| Polarity : | Horizontal |
| Symbol rate : | 27.500 Msb |
| FEC : | 3/4 |
| Transponder : | 133 |


## தங்க வெளவால்

எம்மவர்கள் இப்போது வித்தியாசமான பொருட்களைக் காணும் போது அதனை படம்பிடித்து எமக்கு அனுப்பி வைக்கிறார்கள். அந்த வகையில் வவுனியாவைச் சேர்ந்த மு.மாசிலாமணி என்பவரின் வீட்டில் பிடிக்கப்பட்ட அதிசய வெளவாலே இது. கடந்த 27.07.2005 இரவு எட்டு மணியளவில் இவர் வீட்டுக்குள் நுழைந்த இவ் வெளவால் வித்தியாசமான தோற்றமுடையதாக இருக்கவே இதனைப் பிடித்த அவர், ஒரு போத்தல் ஒன்றினுள் போட்டு மூடிவைத்துள்ளார். ஆயினும் காலையில் இவ் வெளவால் இறந்துவிட்டது. வித்தியாசமாகக் காணப்பட்ட இவ் வெளவாலைப் படம் பிடித்து முரசு வாசகர்களும் பார்ப்பதற்காக எமக்கு அனுப்பிவைத்துள்ளார். இவ் வெளவாலானது தற்போது வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தில் உள்ளது.

தகவலை அனுப்பிவைத்த மாசிலாமணிக்கு வாசகர் சார்பாக எமது நன்றிகள்.



## வெற்றிப் பயணம்



விண்வெளிக்கு விண்கலங்கள் ஏவப்படுவது வழமையாகிவிட்டது. ஆயினும் அவ் விண்கலங்கள் பத்திரமாகப் பூமியை வந்தடைவதுதான் கேள்விக்குறியாகவுள்ளது. அந்த வகையில் இங்குள்ள விண்கலம் அனைவரையும் தற்போது கவர்ந்துள்ள ஒரு விண்கலமாகும். கடந்த 26ஆம் திகதி விண்ணுக்கு ஏவப்பட்ட டிஸ்கவரி விண்கலமானது மீண்டும் பத்திரமாகப் பூமியை ஆகஸ்ட் 28ஆம் திகதி வந்தடைந்துள்ளது. விண்ணுக்கு ஏவப்பட்டு வெற்றிகரமாகப் பூமிக்கு இறக்கப்பட்ட விண்கலம் என்ற பெருமையை இது பெற்றுள்ளது. விண்வெளியில் 14 நாட்கள் தரித்து நின்ற இவ் விண்கலம் பூமியின் வாயு மண்டலத்தில் நுழைந்தவுடன் இதன் வேகம் மணிக்கு 29000 கிலோ மீற்றர் அளவில் காணப்பட்டது. இதனால் இதன் மேற்புற வெப்பநிலை 1650 பாகையாக உயர்ந்தது. இவ் வெப்பநிலை உயர்ச்சியை எல்லாம் தாங்கிக் கொண்டு வெற்றிகரமாக இறங்குதுறையில் இவ் விண்கலமானது தனது கால்களைப் பதித்துள்ளது நாசா விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தாருக்கு மிகப் பெரிய வெற்றியாகும். மீண்டும் முயன்றால் வெற்றி நிச்சயம் என்பது இவ்விடயத்தில் உறுதியாகிறதல்லவா?

## துடியிடை



பெண்களின் இடை மிகவும் மெல்லியதாக அழகாக இருக்க வேண்டும் என்று அனைவரும் கூறுவது வழமை. அதற்காக இந்தளவு மெல்லியதாக இருக்க வேண்டுமா? இது ஒரு கிராஃபிக்ஸ் தோற்றமல்ல. உண்மையில் அமெரிக்காவைச் சேர்ந்த கெத்தில் ஜூக் எனும் பெண் ஒருவர் 5 அடி 8 அங்குலம் உயரமுடையவர். உயரம் மட்டும்தான் இவருக்கு அதிகம். ஆனால் இவரின் இடையானது 15 அங்குலம் மட்டுமே. இதற்குக் காரணம் இவரின் கணவரே. அவர் ஒரு சத்திரசிகிச்சை நிபுணர். சத்திரசிகிச்சையின் மூலமே தன் மனைவியின் இடையை இந்தளவு மெல்லியதாக அவர் ஆக்கியுள்ளார். எவ்வாறாயினும் ஜூக் தன் இடையை இன்னும் அவ்வாறே பேணி வருகிறார். தனக்குத்தான் மெல்லிய இடை உள்ளது என்று நினைக்கும் பெண்களே இது உங்கள் கவனத்திற்கு.

## புரட்ட முடியுமா?




இது ஏதேனும் விளம்பரப் பலகையா என்று யோசிக்கத் தோன்றுகிறதா? இல்லவே இல்லை. இது ஒரு புத்தகம். அதாவது 60.3 கிலோ கிராம் நிறையுடைய ஒரு பெரிய புத்தகம். இப்புத்தகமானது 114 பக்கங்களைக் கொண்டது. அத்துடன் 1.52 மீற்றர் உயரமும் 2.13 மீற்றர் அகலமும் உடையது. இப் புத்தகத்தின் பக்கங்கள் முழு வர்ணப் படங்களையே கொண்டுள்ளன. 2003ஆம் ஆண்டு நியோர்க்கில் வைத்து வெளியிடப்பட்ட இப் புத்தகம் உலகில் மிகப் பெரிய புத்தகம் எனும் சாதனையை இன்னும் தக்க வைத்துக்கொண்டுள்ளது. இப்புத்தகத்தை எவ்வாறு புரட்டி வாசிப்பது என்றுதான் இச்சிறுவன் யோசிக்கிறான் போலும்.

## மொழி கடந்த இசை

இசை சகல விதமான எல்லைகளையும் கடந்ததென்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறார். தமிழ் கலைஞர்கள் பயன்படுத்தும் மேள, தாளக் கருவிகளில் அற்புத ஆற்றல் படைத்த சிங்கள இனத்தவரான காலிங்க பேபிடயஸ் குணதிலக என்பவர் 12 வருடங்களாக மட்டக்களப்பில் பொலிஸ் கான்ஸ்டபிளாகக் கடமையாற்றும் இவர், மத்துகம, நவதுடுவ என்ற குக்கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பாரம்பரிய இசைக் குடும்பமொன்றில் பிறந்த இவர், தனது தாத்தாவிடமிருந்து இசைத்துறையில் அரிச்சுவடி கற்ற இவர் இப்போது கீழ் நாட்டு மிருதங்கம், மேளம், மத்தளம், தபேலா போன்ற தோல்வாத்தியக் கருவிகளை முறைப்படி வெளுத்து வாங்குகிறார். கிட்டார், கர்நாடக சங்கீதத்திலும் ஆழ்ந்த ஞானம் இவர் மட்டக்களப்பு, சிவயோக சமாஜத்தைச் சேர்ந்த சுவாமி கங்காதரநந்தாஜியிடம் மிருதங்கத்தைக் கற்றுக்கொண்டார். புதிய நிலா என்ற தமிழ் பெயரைக் கொண்ட இசைக்குழுவொன்றினையும் வைத்திருக்கிறார். ஏனைய இசைக்குழுக்கள் நடத்தும் நிகழ்ச்சிகளிலும் தன்னார்வத்துடன் தானாகவே சென்று கலந்துகொள்கிறார். வட இலங்கை சங்கீத சபை நடத்திய மிருதங்கப் பரீட்சையிலும் சித்திபெற்ற இவரிடம் இசையில் இத்தனை சித்திகளையும் பெற்றமைக்குக் காரணமென்ன என்று கேட்டபோது இரத்தத்திலேயே ஓடுவதாகப் பதிலளித்தார். ஐம்பதுக்கு மேற்பட்ட சான்றிதழ்களையும் குவித்து வைத்திருக்கிறார். மரபு முறைக்கு மாறாக மிருதங்கத்தை இடம் வலம் என்பதை மாற்றி தாளம் தவறாமல் தனது வித்துவித்தை வெளிப்படுத்துவதை அபாரமெனப் பாராட்டலாம்.



## 1 ஆவது பிறந்த நாள் வாழ்த்து




### மகேஷிகா மெலானி/மயேஷா மெலோமி

மாளிகாவத்தையைச் சேர்ந்த திரு.ஜூட் - திருமதி உஷாநந்தினி தம்பதிகளின் செல்வப் புதல்விகள் மகேஷிகா மெலானி மயேஷா - மெலோமி இருவரும் தமது முதலாவது பிறந்த நாளை அண்ணன் தினேஷோடு 16.08.2005 அன்று தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார்கள். அன்புச் செல்விகளை அன்பு அப்பா, அம்மா, அண்ணா தினேஷ், தாத்தா, அம்மம்மா, மாமா விக்கி, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பா - சித்தி, அத்தை, அண்ணாமார், அக்காமார் துஷி, சோபினி, ஜகன்யா, தொட்டப்பாமார், தொட்டம்மாமார் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் குழந்தை இயேசுவின் அருள் பெற்று, பல கலைகள் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.